பக்கங்கள் : பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 28 வியாழக்கிழமை (13.11.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 350

# இந்தியத் தலையீட்டில் யுத்த நிறுத்தம்

# தமிழ்நாடு சட்டசபையில் தீர்மானம்

## நேற்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

சென்னை, நவம்பர் 13

**இந்திய மத்திய அரசு, இலங்கை விவகாரத்தில் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி அங்கு போரை நிறுத்துவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரும் தீர்மானம் ஒன்றை தமிழக சட்டசபை நேற்று ஏகமனதாக நிறைவேற்றியிருக்கின்றது.**

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புதுடில்லிக்கு விஜயம் செய்து இந்திய அரசுத் தலைவர்களோடு பேச்சு நடத்தும் இச்சமயத்தில், இந்தத் தீர்மானத்தை தமிழக சட்டசபை ஏகமனதாக நிறைவேற்றியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தமிழக சட்டசபையில் கேள்வி நேரம் முடிந்ததும் முதல்வர் கருணாநிதி இலங்கையில் போர் நிறுத்தம் கொண்டு வருவதற்கான தீர்மானத்தை முன்மொழிந்தார்.

அப்போது அவர் கூறியவை வருமாறு:-

''ஏறத்தாழ நாற்பதாண்டு காலத்திற்கு மேலாக இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை, பல்வேறு முயற்சிகள் மேற்கொள்

(17 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக சட்ட சபையில் உறுப்பினர்கள் அனைவரும் பெரும் மகிழ்ச்சி ஆரவாரம்

சென்னை, நவ. 13

இலங்கையில் போர் நிறுத்தத்தை கொண்டுவர இந்திய அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதல்வர் கருணாநிதி கொண்டுவந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதும், உறுப்பினர்கள் அனைவரும் மேசையில் தட்டிப் பெரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

முதல்வர் கருணாநிதி முன்மொழிந்த பிரேரணையை பா.ம.கட்சி சார்பில் ஜி.கே.

(18 ஆம் பக்கம் பார்க்க)

## மன்மோகனும் மஹிந்தவும் இன்று தனியே சந்தித்து முக்கிய பேச்சு

புதுடில்லி, நவ. 13

புதுடில்லியில் இன்று ஆரம்பமாகவிருக்கும் 'பிம்ஸ்ரெக்' மாநாட்டில் கலந்து கொள்ளவந்துள்ள இலங்கை ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடன் இன்று பேச்சுக்களை நடத்தவிருக்கின்றார்.

மாநாட்டின் முக்கிய நிகழ்வின் பின்னர் இரு தலைவர்களும் தனியே சந்தித்துப் பேச்சு நடத்துவர் எனத் தெரிவிக்கப் பட்டது. விடுதலைப்புலிகளுக்கு எதிராக

(18 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி நாடு திரும்பிய கையோடு கோத்தபாய சீனா, பாகிஸ்தான் செல்கிறார்

கொழும்பு, நவ. 13

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கான விஜயத்தை நிறைவு செய்து நாடு திரும்பிய கையோடு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ சீனாவுக்கும், பாகிஸ்தானுக்கும் பயணம் செய்வார் என அமைச்சரவைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை இராணுவத்திற்குத் தேவையான இராணுவத் தளபாடங்கள் மற்றும் தொழில் நுட்ப உதவிகளைப் பெறுவது தொடர்பான விடயங்களைப் பேசுவதற்காகவே கோத்தபாய இந்தச் சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார் எனவும் அமைச்சரவைத் தகவல்கள் கூறுகின்றன.

இந்தச் சுற்றுப் பயணத்தில் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகள் ஆகியோர் இடம் பெறுவார்கள் என்றும் அமைச்சரவைத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (அ-சி)

## கோணாவில், செம்பன்குண்டு பகுதிகளில் செவ்வாயன்று உக்கிரச் சமர் மூண்டது!

### படைத் தரப்பில் அதிகளவில் இழப்பு என்று தகவல்

கொழும்பு, நவ. 13

வன்னிக் களமுனையில் கிளிநொச்சி, அக்கராயனுக்கு அருகில் ஸ்கந்தபுரம் மற்றும் கோணாவில் பகுதிகளிலும் பூநகரிப் பக்கத்தில் செம்பன்குண்டுப் பிரதேசத்திலும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அரசுப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் கடும் சமர் மூண்டிருக்கின்றது.

இந்தச் சண்டைகளில் படைத்தரப்பில் 75 பேர் வரையிலும், புலிகள் தரப்பிலும் கணிசமான எண்ணிக்கையிலும் உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என இணையத் தளங்கள் தெரிவிக்கின்றன.

செவ்வாய் முற்பகல் 10 மணியளவில் அக்கராயனில் இருந்து கோணாவில் நோக்கி கடும் பின்புல சூட்டாதரவுடன் முன்நகர்வை மேற்கொண்ட படையினர் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் 15 படையினர் வரை

(18 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே கல்விச்சுடர் →
★ கணிதம் II வினாத்தாள்
★ தரம் 5 மாணவர்களுக்கான தரப்படுத்தல் பரீட்சைத் தொடர் வினாத்தாள்.

க.பொ.த.ப. (சா) பரீட்சை நேர அட்டவணை 13 ஆம் பக்கத்தில்.

## போர் நிறுத்தத்தை அமுல்படுத்தக் கோரி புதுடில்லியில் நாளை மாணவர்கள் பேரணி!

### அனைத்து இந்திய மாணவர் பெருமன்றம் ஏற்பாடு

சென்னை, நவ. 13

ஈழத்தமிழர்களைக் கொன்று குவிக்கும் இலங்கை அரசு போர் நிறுத்தத்தை உடனடியாக அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தி நாளை வெள்ளிக்கிழமை புதுடில்லி அனைத்து இந்திய மாணவர் பெருமன்றம் சார்பில் பேரணி நடைபெறவுள்ளது.

இப்பேரணியில் கலந்துகொள்ள சென்னையிலிருந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர் சி. மகேந்திரன் தலைமையில் மாணவர்கள் நேற்று புதுடில்லி புறப்பட்டுள்ளனர்.

மாணவர் பெருமன்றத்தின் தமிழ் மாநிலத்தலைவர் பாரதி, பொதுச் செயலாளர் திருமலை ஆகியோருடன் நூற்றுக்

(18 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தைச் சோதனை நிலையம் மூடப்பட்டு 2 நாள்களாகப் போக்குவரத்து நிறுத்தம்

கொழும்பு, நவ. 13

இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செவ்வாய்க் கிழமை சோதனை நிலையத்துக்கு சமீபமாக நடைபெற்றதாகக் கூறப்படும் மோதலையடுத்து அது மூடப்பட்டது. அதனால் போக்குவரத்தும் பாதிப்புற்றுள்ளது.

ஓமந்தைச் சோதனை நிலையத்தில் தமது பிரசன்னம் படையினரின் அறிவுறுத்தலுக்கு இணங்கவே நேற்று விலக்கப்பட்டது என்று செஞ்சிலுவை சர்வதேசக்குழு அறிவித்துள்ளது.

சோதனை நிலையத்துக்கு சமீபமாக நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவம் ஒன்றை அடுத்து தமது பிரசன்னம் அங்கிருந்து விலக்கப்பட்டதாக அந்த அமைப்பின் ஊடகப் பேச்சாளர் சரசி விஜயரத்தின தெரிவித்தார். (18 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் சர்வ கட்சிக் குழு போலி நாடகம்; அது தெரிந்தும் சகித்துக் கொள்கிறது இந்தியா!

### அதன் மூலம் இனப்படுகொலைக்கு உதவுவதாகக் குற்றம் சுமத்துகிறார் சுரேஷ்



கொழும்பு, நவ. 13

இலங்கை அரசின் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு என்பது ஒரு போலி நாடகம் என இந்தியாவிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் நன்கு தெரியும். அப்படி இருந்த போதிலும் அவை இதனைத் தொடர்ந்தும் சகித்துக்கொண்டிருக்கின்றன எனக் கருத்து வெளியிட்டிருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

இப்படி அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவைத் தொடர்ந்து சகித்துக் கொள்வதன் மூலம் அவை தமிழர்களின் இனப் படுகொலைக்கு உதவுகின்றன எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமிழ் நெற் இணையத்தளத்திற்கு அளித்துள்ள பேட்டியிலேயே இதனை அவர் தெரிவித்துள்ளார்.

அப் பேட்டியின் விவரம் வருமாறு:-

**கேள்வி:-** அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு குறித்த உங்களது ஒட்டுமொத்த மதிப்பீடு என்ன?

**பதில்:-** ஆரம்பத்தில் அனைத்துக் கட்சிப்

(17 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# விவசாயிகள் கௌரவிப்பு நாளை பண்டத்தரிப்பில்

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ்ப்பாணம் விவசாய மாவட்டத்தில் உள்ள பண்டத் தரிப்பு விவசாயப் பிராந்தியத்தில் நடைபெற்ற விவசாய உற்பத்தி போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சண்டிலிப்பாய் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் எட்டுப் பிரிவுகளில் வெற்றி ஈட்டி முதன் மூன்று இடங்களை பெற்ற 24போட்டியாளர்கள் இவ்வாறு கௌரவம் பெற உள்ளனர். விவசாயத்திணைக்களத்தால் பாராட்டு சான்றிதழ் வழங்கப்படும்.

நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு அந்தப்பிரிவு போதனாசிரியர் திருமதி ப.மணிவர்ணன் தலைமையில் பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இந்த விழாவில் விருந்தினர்களாக பிரதேச செயலர் திருமதி றூபினி வரதலிங்கம், யாழ். மாவட்ட பிரதி விவசாயப் ணிப்பாளர் சி.சிவகுமார், கால்நடை வைத்தியர் செல்வி வே.மரியநாயகம், கமநல அபிவிருத்திப் பெரும்பாக உத்தியோகத்தர் (சண்டிலிப்பாய்) வை.பாலகிருஸ்ணன், சண்டிலிப்பாய் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.ஜெகநாதன் ஆகியோர் கலந்து கௌரவிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் பிரிவு ரீதியாக பாராட்டுப் பெறும் முதல் மூன்று நிலை விவசாயிகளின் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது. (1-302)


## கண்ணீர் அஞ்சலி

வட. இலங்கைச் சங்கீத சபையின்
நிர்வாக உறுப்பினர் திருமதி வ. குஞ்சிதபாதம்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி இராமாமிர்தம் சண்முகசுந்தரம்

அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது சபையின் ஆழ்ந்த அனுதபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர்,
வட இலங்கைச் சங்கீத சபை.

## கண்ணீர் அஞ்சலி

வட. இலங்கைச் சங்கீத சபையின் பொருளாளராகக்
கடமையாற்றும் திரு. வி. சிவஞானசேகரம்
அவர்களின் அன்புத் தந்தையார்

### திரு. அருணாசலம் விஸ்வநாதன்

அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது சபையின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர்,
வட. இலங்கைச் சங்கீத சபை.

## வட மாகாண ஆசிரியர் சங்கச் சகாயநிதி
## N. P. T. A. Benevolent Fund
(ESTD 13.8.60 - Incorporated By Parliament Act No. 18 of 1968)

### அஞ்சலி

நிதியின் முன்னாட் தலைவர்

### அருணாசலம் விசுவநாதன்

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

திருமதி. சி. இராதாகிருஷ்ணன் — சண். தயாளன்
தலைவர் — செயலாளர்


# வாராந்தச் சொற்பொழிவு

வடமராட்சி, நவ.13

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை ஆச்சிரமத்தில் வாராந்தம் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கரணவாய் பொன்னம்பல வித்தியாலய ஆசிரியைகளான திருமதி ஆ.நாகேந்திரன், செல்வி த.ஜெயச்சந்திரா ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளனர். (203-236)

# நீச்சல் தடாகம் ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.13

யாழ்.மாவட்டத்துக்கான நீச்சல்தடாகம் அமைக்கும் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று முற்பகல் 11 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ்.மேலதிக கல்விப்பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் உட்படப்பலர் கலந்து கொள்வர். (1)

# மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், நவ.13

வல்வை ஆதிகோவிலடி மக்கள் தமது அமைப்புக்களின் அனுசரணையுடன் நடத்தும் மாணவர் கௌரவிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆதிகோவிலடி பல நோக்கு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ப.சபேசன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் பி.கிருஷ்ணானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (1)

# சுக அப்பியாசம் நூல் நாளை வெளியீடு

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ்.கல்விவலயத்தின் சுக அப்பியாசம் (கீழைத்தேச இசை) வெளியீடு நாளை வெள்ளிக்கிழமை பி.ப 1.30மணியளவில் வேம்படி மகளிர் கல்லூரியில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வை.ரவீந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் வடமாகாண மக்கள் வங்கி உதவிப் பொது முகாமையாளர் ரி.கே.ஆனந்தராசா முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

பாடசாலை அதிபர்களையும் பொறுப்பாசிரியர்களையும் இந்த நிகழ்வில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (1-ரி)

# யாகப்பர் ஆலய நினைவு நாள்

வண்ணார்பன்னை, நவ.13

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் மீது ஸ்ரீலங்கா விமானப்படை விமானங்கள் தாக்குதல் நடத்திய 15 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்பட உள்ளது.

அதிகாலை 5.45 மணிக்கு பங்குத் தந்தை அருட்திரு ஆர்.நேசராசா தலைமையில் இரங்கற்திருப்பலி ஒப்புக்கொடுத்தல் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து அன்றைய தினம் 1993 ஆம் ஆண்டு நவம்பர் 13 ஆம் திகதி ஆலயச் சூழலில் விமானப் படையினரால் கொல்லப்பட்டிருந்த ஒன்பது பேர்களதும் உறவினர்கள் ஆலய வளாகத்தில் இருக்கும் நினைவுக் கற்களுக்கு தீபங்கள் ஏற்றி மலரஞ்சலி செலுத்துவர். (1-160)


# மரண அறிவித்தல்கள்

## தம்பிப்பிள்ளை சுந்தரமூர்த்தி
### (ஓய்வுபெற்ற அதிபர், நாதியியல் கல்லூரி, லண்டன்)

மாப்பாணவூரி, வலந்தலை, காரைநகரைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை சுந்தரமூர்த்தி நேற்று (12.11.2008) லண்டனில் காலமானார்.

அன்னார் புஸ்பாசனி ஆறுமுகம்(சுதுமலை) அவர்களின் அன்புக் கணவரும் மீராவின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான அருணாசலம் தம்பிப்பிள்ளை- பொன்னம்மாவின் அன்பு மகனும் திருமதி இராசரத்தினம் புவனேஸ்வரி, த.தனபாலன், நடராஜா நித்தியலட்சுமி, த.வாமதேவன், சுப்பிரமணியம் செல்வலட்சுமி, த.வரதராசா, த.கருணாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாப்பாணவூரி,
வலந்தலை, காரைநகர்.
T.P:- 222 8486, 222 6521,
222 6522.

தகவல்:
இ.குலேந்திரம் (மருமகன்)
முகாமையாளர், கொமர்ஷல் வங்கி,
சுன்னாகம் கிளை.

## திருமதி கந்தையா இரத்தினம்

வசாவிளான் தெற்கு, வசாவிளானைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா இரத்தினம் நேற்று (12.11.2008) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் கந்தையாவின் அன்பு மனைவியும், இராசதுரை (பொதுமுகாமையாளர், சங்கானை ப.நோ.கூ.சங்கம்), தியாகராஜா (இந்தியா), ஸ்ரீஸ்கந்தராஜா (ஜேர்மன்), மகாராஜா (தெல்லிப்பழை, ப.நோ.கூ.சங்கம்), தங்கராஜா (சுவிஸ்), ரவிராஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராஜேஸ்வரி, சரஸ்வதி (இந்தியா), கலா (ஜேர்மன்), இரத்தினாம்பிகை, நர்மதா (சுவிஸ்), கேமா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், சஞ்சீவன் (லண்டன்), ஜெகஜீவன் (இந்தியா), தீபா (வவுனியா), ஜெகதீபா (உரும்பிராய்), சுதர்சன் (பிரான்ஸ்), சிந்துஜா (இந்தியா), கஜீவன் (இந்தியா), ஜெனீபா, தனுஷன், டினா (ஜேர்மன்), விஷாயினி (யாழ்.இ.ம.க. மாணவி), துஷீபன் (வசாவிளான் ம.ம.வி), பிருந்தன் (தெல். யூனியன் கல்லூரி), டனீஸ்கரன், கிருஷாந், டர்சியன் (யா/ கரந்தன் இ.வி.), ஜஸ்னா, ஜெசீனா, தர்வின் (சுவிஸ்), அதீசா, ரஜீன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2008) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சிறுப்பிட்டி மேற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராச வீதி,
சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி. (79810)

தகவல்:
க.இராசதுரை, க.மகாராசா
(பிள்ளைகள்). 0776525276

# மரண அறிவித்தல்கள்

## மதுரவீரன் வேலாயுதம்



மீசாலை வடக்கு, வேம்பிராயைச் சேர்ந்த மதுரவீரன் வேலாயுதம் நேற்று (12.11.2008) புதன்கிழமை காலமானார்.


அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும், அற்புதராணி (சுவிஸ்), கருணாதேவி, சுபாஸ்கரன் (டோகா) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசேந்திரம் (சுவிஸ்), தமிழ்ச்செல்வன் ஆகியோரின் அன்பு மாமனும், சுஜீபன், சுஸ்விகன் (சுவிஸ்), சுகாஜனன், டிசாலினி, சுஸ்மிகா, மெனிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2008) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு, வேம்பிராய்,
கொடிகாமம். 0771727073

தகவல்:
க.தமிழ்ச்செல்வன் (மருமகன்).

## திருமதி இராசரத்தினம் பரிமளம்
### (மங்களம் - நயினாதீவு)



நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நீராவியடி, கடையிற்சுவாமி கோயிலடியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் பரிமளம் நேற்று (12.11.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதி - பூரணம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - பொன்னம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசகுமார் மற்றும் இராஜேஸ்வரி (யா/சரவணை சின்னமடு றோ.க.த.க. பாடசாலை), மகேஸ்வரி (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் கதிரவேலுப்பிள்ளை (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2008) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கடையிற்சுவாமி ஒழுங்கை,
நீராவியடி. (79811)

தகவல்:
செ.வடிவேலு, செ.செல்வராசா
(மைத்துனர்மார்).

## அந்தோனிப்பிள்ளை வின்சன்



யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி, புனித லிகோரியார் கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை வின்சன் நேற்று (12.11.2008) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - மரியம்மா தம்பதியினரின் அன்பு மகனும் றீற்றாவின் அன்புக் கணவரும் ரமேஷ் (இந்தியா), தனேஷ், சுரேஷ் (மலேசியா), றெஜிஸ் (லண்டன்), டயஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆனந்தி (இந்தியா), நிலானி, நளாயினி (ஆசிரியை, சாவகச்சேரி குழந்தையேசு முன்பள்ளி), பவானி ஆகியோரின் அன்பு மாமனும் றொசானி (இந்தியா), றெசான் (இந்தியா), ரேகா, ரேணுகா, றெக்சன், றேமன், மீரா, லக்ஷகா, ரதீஸ், நிகால் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற சின்னப்பா மற்றும் கலிஸ்ரா, அகுஸ்தின், அக்னஸ், மரியதாஸ், காலஞ்சென்ற அலோசியஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (13.11.2008) வியாழக்கிழமை மாலை 2 மணிக்கு புனித லிகோரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பூதவுடல் புனித லிகோரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புனித லிகோரியார் ஒழுங்கை,
கச்சாய் வீதி, சாவகச்சேரி. (79807)

தகவல்:
டயஸ் (மகன்).

## திருமதி சிவபரம்சோதி ராசம்மா (விமலா)
### (இலங்கை ஆசிரியர் சேவை 1969-2004)



மண்டைதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இந்தியா, 7A, 12ஆவது குறுக்குத்தெரு, லக்சுமி நகர், போரூர், சென்னையை தற்காலிக வசிப்பிடமகவும் கொண்ட திருமதி சிவபரம்சோதி ராசம்மா(முன்னாள் ஆசிரியை, மண்டைதீவு ம.வி, யாழ். நாவலர் ம.வி, கொக்குவில் ஆரம்ப இந்துக்கல்லூரி) கடந்த (09.11.2008) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு- கனகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா- மனோன்மணி தம்பதியினரின் மருமகளும், சிவபரம்சோதியின் (J.P, முன்னாள் ஆசிரியர், யாழ். இந்துக்கல்லூரி) அன்பு மனைவியும், பலராம்(ஆதவன்-லண்டன்), நிசாந்தி, உமைசொரூபி ஆகியோரின் அன்புத்தாயாரும், சோதிவேற்பிள்ளை (ஜேர்மன்), நல்லநாயகம் (சுவிஸ்), கமலாதேவி (ஹொலண்ட்), குணநாயகம் (ஜேர்மன்), நிர்மலா(கனடா), இராமநாயகம்(ஜேர்மன்) ஆகியோரின் சகோதரியும், திருமதி சண்முகநாதன்(கனடா), திருமதி குணரட்ணசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (15.11.2008) சனிக்கிழமை இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

7A, 12வது குறுக்குத் தெரு,
லக்சுமி நகர், போரூர்,
சென்னை, இந்தியா.
தொ.பே: 0091 9941 789665.

தகவல்:
குடும்பத்தினர்.

359/34, நல்லலக்சுமி அவனியூ,
கோவில் வீதி, நல்லூர்.

(79803)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சர்வதேசத்தை ஏமாற்றும் திட்டமே அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு

அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் கலந்துரையாடல் என்ற பெயரில் சர்வதேசத்துக்கு - குறிப்பாகத் தற்போதைய காலகட்டத்தில் இந்தியாவுக்கு - கொழும்பு அரசு 'பூச்சாண்டி' காட்டி வருவதை புட்டுப் புட்டு விமர்சித்து அம்பலப்படுத்தியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

தாம் கூட்டியிருக்கும் அனைத்துக் கட்சிக் கூட்டம் என்பது அலாவுதீனின் அற்புத விளக்கு என்ற மாதிரியும் -

அந்த அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு முன் வைக்கும் தீர்வு யோசனை, அலாவுதீனின் பூதம் போலக் கிளம்பிவந்து இலங்கையின் இனப்பிரச்சினையை ஒரேயடியாகத் தீர்த்து வைக்கப் போகின்றது என்பது போலவும் -

உலகுக்குப் படம் காட்டுகின்றார் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

இந்த அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளின் கூட்டத்தின் மூலம் சாதகமான தீர்வுத்திட்டம் ஒன்று கிட்டும் என்று தாங்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள் என கொழும்புக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக் அண்மையில் கூறியிருக்கின்றமை, இந்த அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் கூட்டம் என்ற கயிறை சர்வதேசம் விழுங்கி, எவ்வளவு நம்பிக்கையை அதில் வைத்திருக்கின்றது என்பதற்கு நல்ல உதாரணமாகும்.

தாம் இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் - இந்த மூன்று வருட காலத்தில் - இலங்கை அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ பல தடவைகள் இந்தியாவுக்கு விஜயம் செய்து புதுடில்லியில் அந்த நாட்டு அரசுத் தலைவர்களுடன் பேச்சு நடத்தியிருக்கின்றார். அதுபோல புதுடில்லி அரசின் உயர் மட்டத் தலைவர்கள் பல தடவைகள் கொழும்புக்கு வந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துக் கலந்துரையாடியிருக்கின்றார்கள்.

இந்த ஒவ்வொரு சந்திப்பிலும் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு பற்றிய விடயம் ஆராயப்பட்டே வந்திருக்கின்றது.

ஒவ்வொரு தடவையும், இந்த அனைத்துக் கட்சிக் குழுக் கூட்டத்தைக் காட்டியே தீர்வுக்கான தமது பொறுப்பை நிறைவேற்றாமல் தட்டிக்கழித்து, காலத்தை இழுத்தடித்து வந்திருக்கின்றார் இலங்கை ஜனாதிபதி.

இதோ சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் கூட்டத்தில் ஒரு தீர்வுத்திட்ட யோசனை வெளிவரப் போகின்றது, அது வெளிவந்ததும் அதனையே தீர்வு யோசனையாக முன்வைத்து அமைதித் தீர்வுக்கு வழி செய்வேன் என்று இந்திய அரசுத் தலைமைக்குக் கயிறு கொடுத்தவாறே காலத்தை இழுத்தடித்து வந்திருக்கிறார் மஹிந்தர்.

ஆனால், யதார்த்தத்திலோ நொண்டி வாத்தாகத் தடுமாறித் தத்தளிக்கும் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் கூட்டம் அர்த்தமின்றி இழுபடுகின்றது.

முதலில் அக்குழுவை 'அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் கூட்டம்' என்று அழைப்பதே முழுத் தவறு.

வேண்டுமானால் 'அரசுத் தரப்புக் கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டம்' என்று அதை அழைக்கலாம் என்பதே உண்மையாகும்.

அரசுத் தரப்பில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசுக்குச் சாமரம் வீசும் கட்சிகளின் பிரதிநிதிகளைத் தவிர, எதிரணியில் இருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டுமே அந்த அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவில் இடம்பெற்றிருக்கின்றது.

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. இந்த அனைத்துக் கட்சிகள் குழுவிலிருந்து வெளியேறிவிட்டது. அதே போல மற்றொரு பிரதான எதிர்க்கட்சியான ஜே.வி.பியும் இந்தக் குழுவால் பயனேதுமில்லை என்று குறிப்பிட்டு அதைப் புறக்கணித்துவிட்டது.

இதைவிட, எதிரணியில் அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டதும், சிறுபான்மையினரான தமிழர்களின் அதி உச்சப் பிரதிநிதித்துவத்தைப் பிரதிபலிக்கின்றதுமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இந்த அனைத்துக் கட்சிக் குழுக்கூட்டத்துக்கு அழைப்பே அனுப்பப்படவில்லை.

இப்படிப் பிரதான எதிர்க்கட்சிகள் எவையும் பங்குபற்றாத ஒரு கட்டமைப்பை - தனது அரசுத் தரப்புக் கட்சிகள் மட்டும் கூடும் ஒரு கூட்டத்தை - 'அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு' ஆகக் காட்டி, சர்வதேசத்தின் காதில் பூச்சுற்றிக் கொண்டிருக்கின்றது மஹிந்தரின் அரசு.

அத்தகைய சர்வகட்சிக் குழுவினால் உருவாக்கப்பட்ட 'நிபுணத்துவ அணி' இனப்பிரச்சினைத் தீர்வுக்கான யோசனைத் திட்டம் ஒன்றைத் தயாரித்தது. அந்த நிபுணர் குழுவில் இடம்பெற்றிருந்த 17 துறைசார் தகைமையாளர்களில் பெரும்பான்மையினரால் - 11 நிபுணர்களால் - ஒன்றிணைந்து தயாரிக்கப்பட்ட இந்தத் தீர்வு யோசனையையே கிடாசிக் குப்பையில் தூக்கி வீசிவிட்டார் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

அத்தகைய நிலையில் -

இந்த சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு மூலம் நீதி, நியாயமான தீர்வு ஒன்று கிட்டும் என்று மனப்பால் குடித்து, அது தொடர்பான கொழும்பின் கயிறை விழுங்கி, காத்திருக்கும் சர்வதேச சமூகம் - குறிப்பாக இந்தியா - கடைசியில் ஏமாற வேண்டித்தான் நேரும்.

தீர்வு முயற்சி தொடர்பான கொழும்பின் முன்னைய நாடகங்களில் ஏமாந்தமை போல இம்முறையும் 'அனைத்துக் கடசிப் பிரதிநிதிகள் கூட்டம்' என்ற நாடகத்திலும் 'இலவு காத்த கிளியாக' சர்வதேசமும் ஏமாறப் போவது நிச்சயம்.

# நிரந்தரமான அமைதி ஏற்படுவதற்கு புலிகள் தோற்கடிக்கப்பட வேண்டுமாம்

## பாதுகாப்புச் செயலர் கோத்தபாய கூறுகிறார்

கொழும்பு, நவ.13

இராணுவ ரீதியில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட வேண்டியது அவசியம். நாட்டில் நிரந்தரமான அமைதியைக் கொண்டு வருவதற்கு இது தேவை. பயங்கரவாதிகளுக்கு எதிராகவே பாதுகாப்புப் படையினர் இப்போது நடவடிக்கையில் இறங்கியுள்ளார்கள். இது எந்த ஓர் இனத்துக்கோ குழுவுக்கோ எதிரான நடவடிக்கையல்ல.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வர்த்தக சஞ்சிகையொன்றுக்கு அளித்துள்ள பேட்டியொன்றில மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இந்த நிலைமையை எல்லா சமூகங்களும் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். நாட்டில் அமைதியான சூழ்நிலை இருந்தால் மட்டுமே ஊடக சுதந்திரத்தையும் மனித உரிமைகளையும் அனுபவிக்க முடியும் என்று அவர் கூறியுள்ளார்.

எனவே புலிகளின் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவதற்கு அனைவரும் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

ஜனநாயகத்துக்காகவும் மனித உரிமைக்காகவும் பாடுபடுவதாகக் கூறிக் கொள்பவர்களும் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும். பொதுமக்களுக்கு சேதம் ஏற்படாதவாறு இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதற்கு இலங்கை இராணுவத்தினர்தான் காட்டித் தந்துள்ளார்கள். இந்த நிலைப்பாடு கிழக்கு மாகாண விடுவிப்பின்போது வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டது என்று கூறிய கோத்தபாய ராஜபக்ஷ, புலிகள் போர்நிறுத்தம் அறிவித்திருப்பது பற்றி குறிப்பிடுகையில் இராணுவ ரீதியில் பலவீனமடையும் போதெல்லாம் போர் நிறுத்தம் அறிவிப்பது அவர்களின் வழக்கம் என்று கூறினார். (ப)

## அதிபர் சேவை பரீட்சைக்கு

# இதுவரை தோற்றாத யாழ்.பரீட்சார்த்திகளுக்கு இங்கேயே நடத்துவதற்கு நடவடிக்கை

அச்சுவேலி, நவ.13

அதிபர் சேவை பதவி உயர்வுப் பரீட்சைக்கு விண்ணப்பித்த யாழ். மாவட்டப் பரீட்சார்த்திகளில் இதுவரை தோற்றாதவர்களுக்கு இங்கேயே நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சான்றிதழ்கள் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டு பதவியுயர்வுகளை சமகாலத்தில் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி அனோஜா குருகே இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் வாக்குறுதி அளித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்க முடியாத ஆசிரியர்களின் பிரச்சினை மற்றும் யாழ். மாவட்டத்தில் இருந்து கொழும்புக்கு வரமுடியாத சூழ்நிலை தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் எஸ்.சரவணபவானந்தன் கல்வி அமைச்சின் செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். அதன்போதே மேற்படி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது என்று அவர் தெரிவித்தார்.

(202-11)

# காரைநகர் பிரதேசத்துக்கென தனியான கல்விக்கோட்டம் அமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.13

காரைநகருக்கெனத் தனியான கல்விக் கோட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய அதிபர் சு.கணேசமூர்த்தி இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

காரைநகர் பிரதேசத்தில் உள்ள எட்டுப் பாடசாலைகளையும் இணைத்து காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தீவகக் கல்வி வலயம் நடத்திய கல்வித்தின விழா இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

கோட்டத்துடனேயே காரைநகர் இணைந்திருக்கின்றது. இதனால் காரைநகர் பிரதேச பாடசாலை மாணவர்கள் மற்றும் அதிபர், ஆசிரியர்கள் கோட்ட அலுவலகத்துக்குக் கடல்கடந்து செல்ல வேண்டி உள்ளது. இதனால் பல் வேறு சிரமங்களையும், பெருமளவு நேரத்தையும் செலவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களைக் கடல்கடந்து அனுப்புவதற்கும் பெற்றோர்கள் பின்னடிக்கின்றனர். எனவே காரைநகர் பாடசாலைகளை இணைத்து காரைநகருக்கு தனியான கல்விக் கோட்டம் உருவாக்கப்பட வேண்டும் - என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். (202-250)

இன்று ஊர்காவற்றுறைக் கல்விக்

# ஒளிவிழா

யாழ்ப்பாணம், நவ.13

சன்மார்க்க மகா வித்தியாலயத்தின் ஒளிவிழா நிகழ்வு இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக அருட்திரு.ஜே.டி.பிலிப் (சீயோன் தேவாலயம்), அருட்திரு ஜே.ராஜநாயகம், அருட்திரு டி.வி.ஈ.ரவிச்சந்திரன், திருமதி வி.சிவபாலன் ஆகியோர் கலந்து கொள்வர். (201)

# ஜீ.சீ.ஈ உயர்தரம் - 2008 செயன்முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ.13

ஜீ.சீ.ஈ உயர்தரம்-2008க்கான செயன்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

மனைப் பொருளியல், நடனம், சங்கீதம் ஆகிய பாடங்களுக்கே செயன்முறைப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

பாடசாலைகள் அனுமதி அட்டைகளைத் தத்தம் வலயங்களில் நாளை வெள்ளிக்கிழமை பெற்றுக்கொள்ளலாம் என யாழ்.வலயக் கல்வி அலுவலக வட்டாரம் தெரிவித்தது. (202)

## பலாலி ஆசிரியர் கலாசாலை

# அதிபர் கடமைகளைப் பிரதி அதிபரிடம் ஒப்படைக்குமாறு கல்வி அமைச்சு அறிவிப்பு

அச்சுவேலி, நவ.13

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் அதிபர் கடமைகளைப் பிரதி அதிபர் ம.இக்னேசியஸிடம் ஒப்படைக்குமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பதில் அதிபராகக் கடமை புரியும் விரிவுரையாளருக்கே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கல்வி அமைச்சின் செயலாளர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தின் பிரதி யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

பலாலி ஆசிரியர் கலாசாலையின் அதிபர் பதவிக்கு நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் ம.இக்னேசியஸ் பிரதி அதிபராக நியமிக்கப்பட்டு நிரந்தர நியமனக் கடிதமும் இலங்கை பொதுச்சேவைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ளது.

பிரதி அதிபராக நியமனம் செய்யப்பட்டவரிடம் கடமைப் பொறுப்புக்களை ஒப்படைப்பதற்குப் பதில் அதிபர் கடமையை மேற்கொள்ளும் விரிவுரையாளர் மறுப்புத் தெரிவித்து வந்ததை அடுத்து கல்வி அமைச்சு இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளது.

பதில் அதிபர் கடமை மேற்கொள்ளும் விரிவுரையாளர் உரியமுறையில் பிரதி அதிபர் ம.இக்னேசியஸிடம் அதிபர் கடமைப் பொறுப்புக்களை ஒப்படைத்து கல்லூரியின் நிர்வாகச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்காதவிடத்து சம்பந்தப்பட்டவர் மீது மேல் நடவடிக்கை எடுக்கவேண்டி வரும் எனக் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் கே.முகமதுதம்பி தெரிவித்துள்ளார். (202-11)

# யாழ்.மத்திய கல்லூரியின் விஞ்ஞான தின நிகழ்வும் சஞ்சிகை வெளியீடும்

யாழ்ப்பாணம், நவ.13

யாழ்.மத்திய கல்லூரி விஞ்ஞான மன்றம் நடத்தும் விஞ்ஞான நிகழ்வும் "மத்திய ஆய்வாளன்" சஞ்சிகை வெளியீடும் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

க.அர்ச்சுதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட பௌதீகவியற்றுறைப் பேராசிரியர் கே.கந்தசாமி கலந்துகொள்வார்.

சஞ்சிகை ஆய்வினை யாழ்.கல்வி வலய உயிரியல் பாட வள ஆய்வாளரும், சென்ஜோன்ஸ் கல்லூரியின் உயிரியல் பாட ஆசிரியருமான எம்.எம்.அல்போன்ஸ் நிகழ்த்துவார்.

முதற்பிரதியை யாழ்.கொமர்ஷல் வங்கி சிரேஷ்ட முகாமையாளர் சரவணபவன் ரவீந்திரா பெற்றுக் கொள்வார்.

(202)

# நாளை

| | |
|---|---|
| ஐப்பசி 29 | 14.11.2008 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: | பிரதமை |
| | மு.ப.10.50 மணிவரை |
| நட்சத்திரம்: | கார்த்திகை |
| | மு.ப.10.48 வரை |
| சுபநேரம்: | 06.07 - 07.37 |
| ராகுகாலம்: | 10.37 - 12.07 |

# கல்விக் கலைக் கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ.13

பிரித்தானிய வர்த்தகக் கல்லூரியின் (பிரிட்டிஷ் பிஸ்னஸ் ஸ்கூல்) கல்விக் கலைக் கண்காட்சி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணிவரைக்கும் நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர், மானிப்பாய், சுன்னாகம், பருத்தித்துறை, யாழ். சட்டநாதர் வீதி ஆகியவற்றில் அமைந்துள்ள பாடசாலை வளாகங்களைச் சேர்ந்த மாணவர்களின் ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இந்தக் கண்காட்சியில் யாழ். பூபாலசிங்கம் புத்தகசாலை, கற்பகம் கைப்பொருள் நிலையம் ஆகியவை நடத்தும் காட்சிப்படுத்தலும் விற்பனையும் இடம்பெறவுள்ளன.

(201)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கால்களுக்கிடையில் வாலைச் சுருட்டியபடி நாடு திரும்புகிறது ஆஸி. கிரிக்கெட் அணி!

## வருத்தத்துடன் ஒப்புக்கொள்கிறார் அதன் தலைவர் பொண்டிங்



நாக்பூர், நவ. 13

எங்களது கால்களுக்குள் வாலைச் சுருட்டிக் கொண்டு தாய் நாடு திரும்புகிறோம் என்று இந்தியாவிடம் டெஸ்ட் தொடரை இழந்த அவுஸ்திரேலிய தலைவர் ரிக்கி பொண்டிங் வருத்தத்துடன் தெரிவித்தார்.

தலைவர் ரிக்கி பொண்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு இந்திய அணிக்கு எதிராக டெஸ்ட் தொடரை விளையாடியது.

இந்தியா மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையே போர்டர் - கவாஸ்கர் கோப்பைக்காக 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடந்தது.

அவுஸ்திரேலியா மற்றும் இந்திய அணிகளுக்கு இடையே நாக்பூரில் 4 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டியில் இந்திய அணி 172 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 4 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் 2 - 0 என்ற கணக்கில் 4 வருட இடைவெளிக்குப் பிறகு தொடரை சொந்த மண்ணில் கைப்பற்றி சாதனை படைத்து இருக்கிறது இந்தியா.

இந்தத் தோல்வி உலக சம்பியனான அவுஸ்திரேலிய அணிக்கு விழுந்த மரண அடியாகும். தவிர, அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக தொடரை வென்றதன் மூலம் இந்திய அணி உலக கிரிக்கெட்டில் தனது ஆதிக்கத்தை நிலை நாட்டியிருக்கிறது.

இது குறித்து அவுஸ்திரேலிய அணியின் தலைவரான பொண்டிங்கிடம் கேட்டபோது, இந்திய அணிக்கு எதிராக தொடரை 2 - 0 என்ற கணக்கில் இழந்த கசப்பான அனுபவத்துடன் தாங்கள் நாடு திரும்புகிறார்கள் எனவும், இந்தத் தொடரில் தலைமைத்துவம் மற்றும் துடுப்பாட்டம் ஆகிய இரண்டிலும் தனது பங்களிப்பு எடுபடவில்லை என்றும் அவர் கூறினார்.

நாங்கள் இங்கு சுற்றுப் பயணத்தை தொடங்கும் போது, கடும் சவாலை அளிக்க முடியும் என்று நம்பினோம். தொடரைக் கைப்பற்ற எங்களுக்கு நல்ல வாய்ப்பு இருந்தது. ஆனால் நாங்கள் நினைத்தது நிறைவேறவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் கடைசி இரண்டு டெஸ்டில் நாங்கள் வெற்றிக்காகக் கடுமையாகப் போராடினோம். பெங்களூரில் வெற்றி பெற வாய்ப்பு இருந்தது. அதேபோல டெல்லியில் எங்களுக்கு நல்ல வாய்ப்புக் கிடைத்தது. இங்கும் எங்களது அணிக்கு நல்ல தொடக்கம் கிடைத்தது. ஆனால் இதனை எங்களால் வெற்றியாக மாற்ற முடியவில்லை என்றும் பொண்டிங் கூறினார்.

இந்தத் தொடரை நாங்கள் இழந்தமை மன்னிக்க முடியாதது. ஆனால் நாணயச்சுழற்சியில் வெற்றி பெறுவது மிக முக்கியமானது. நாங்கள் 3 முறை இந்தத் தொடரில் நாணயச் சுழற்சியை இழந்திருக்கிறோம். தோல்விக்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாகும் என்று என்.டி.டி.வி.க்கு அளித்த பேட்டி யில் அவர் தெரிவித்திருக்கிறார்.

பொண்டிங்கின் தலைமைத்துவம் குறித்து - முக்கியமாக பகுதி நேரப் பந்து வீச்சாளர்களை பயன்படுத்தியது, ஒரு தடையிலிருந்து தப்பியது ஆகியவை குறித்து - அனைத்து தரப்பில் இருந்தும் விமர்சனம் கிளம்பியுள்ளது. அணியை நடத்திய விதம் தமக்கே திருப்தி அளிக்கவில்லை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஒரு தலைவர் என்ற முறையிலும், ஒரு வீரர் என்ற முறையிலும் இது எனக்கு ஒரு சிரமமான தொடராகும். இன்னும் நான் சிறப்பாக செயல்பட்டிருந்தால் அது எனக்கு பெருமையை ஏற்படுத்தியிருக்கும் என்றும் பொண்டிங் தெரிவித்தார்.



சீனாவில் நடக்கும் ஷாங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியின் ஒற்றையர் பிரிவு லீக் ஆட்டத்தில், ஆர்ஜென்டினா வீரர் டெல் போட்ரோ 7-6, 7-6 என்ற நேர் செட்களில் பிரான்ஸ் வீரர் சோங்காவை நேற்று முன்தினம் வீழ்த்தினார். பந்தை அபாரமாகத் திருப்புகிறார் டெல் போட்ரோ.

### வருகின்ற தொடர்களில்

# ஆக்ரோஷமாக ஆடாவிட்டால் நிச்சயமாக நீக்கப்படுவீர்கள்!

## சக வீரர்களுக்கு பொண்டிங் எச்சரிக்கை,

அடுத்து வரும் தொடர்களில் ஜொலிக்காவிட்டால் அணியில் இடம் கிடைக்காது என்று சக வீரர்களை அவுஸ்திரேலிய தலைவர் பொண்டிங் எச்சரித்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை உலக சாம்பியன் அவுஸ்திரேலிய அணி 0-2 என்ற கணக்கில் இழந்ததால் அந்த அணியின் தலைவர் ரிக்கி பொண்டிங் கடும் விமர்சனத்துக்காளாகி இருக்கிறார். நாக்பூரில் நடந்த கடைசி டெஸ்டில் அடைந்த தோல்விக்கு தலைவர் பொண்டிங்கின் தவறான செயல்பாடே காரணம் என்று முன்னாள் ஆஸி. வீரர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

நாக்பூர் டெஸ்டின் 4ஆவது நாளில் வேகப் பந்து வீச்சாளர்களை அழைக்காமல், கிரெஜ்சாவுடன் பகுதி நேரப் பந்து வீச்சாளர்கள் மைக் ஹஸி, மைக்கல் கிளார்க், வைற் ஆகியோரை பொண்டிங் பயன்படுத்தினார். இதனால் 7ஆவது விக்கெட்டுக்கு இணைந்த இந்திய ஜோடி டோனி -ஹர்பஜன்சிங் ஆகியோர் 100 ஓட்டங்களுக்கு மேல் குவித்து, அணியை சரிவில் இருந்து மீட்டு விட்டனர்.

அவுஸ்திரேலிய அணி 9 ஓவர்கள் குறைவாக பந்து வீசியிருந்தது. ஓவர் வீதம் அதிகமாக இருந்தால் தலைவருக்கு ஒரு டெஸ்டில் விளையாடத் தடை விதிக்கப்படலாம். இந்தத் தண்டனையில் இருந்து தப்பிக்கவே, அவர் பகுதி நேர சுழற்பந்து வீச்சாளர்களை உபயோகப் படுத்தினார். இது ஆட்டத்தின் முடிவை மாற்றி மோசமான தோல்வியைச் சந்திக்கக் காரணமாகி விட்டதாக அவுஸ்திரேலிய பத்திரிகைகளும், முன்னாள் வீரர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் இந்திய சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு அவுஸ்திரேலிய வீரர்கள் நேற்று முன்தினம் தாயகம் திரும்பினர். சிட்னி விமான நிலையத்தில் பொண்டிங் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். இந்தியாவுடன் தோல்வியால் விரக்தி அடைந்துள்ள பொண்டிங், அடுத்து வரும் தொடர்களில் சிறப்பாக ஆடாவிட்டால் அணியில் இடம் கிடைக்காது என்று சக வீரர்களை கடுமையாக எச்சரித்தார்.

இது குறித்து அவர் நிருபர்களிடம் கூறியவை வருமாறு:-

''வருகிற தொடர்களில் இந்தியாவில் விளையாடியதை விட மிகச்சிறப்பாக நாங்கள் செயல்பட வேண்டும். அதில் எந்த சந்தேகமும் இல்லை. இந்தியாவில் ஆடியதை விட எங்களால் ஏன் சிறப்பாக ஆட முடியாது?

எனது சக வீரர்களும் என்னைப் போலவே செயல்படுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அப்படி அவர்கள் செயல்படாவிட்டால், வேறு வீரர்களை தேர்வு செய்ய வேண்டிவரும். சரிவில் இருந்து மீண்டு இந்த நிலையில் எங்கள் நாட்டில் நடக்க உள்ள 5 டெஸ்டிலும் (நியூஸிலாந்துக்கு எதிராக 2 டெஸ்ட், தென்னாபிரிக்காவுக்கு எதிராக 3 டெஸ்ட்) வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை உள்ளது.

இந்தியாவில் அடைந்த தோல்வியை மறந்து விட்டு நியூஸிலாந்து, தென்னாபிரிக்க தொடர்களில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். இந்தியத் தொடரில் கமரூன் வைட்டை ஆட வைத்தது உள்ளிட்ட என்னுடைய முடிவுகள் அனைத்தும் சரியானவை தான். நன்கு யோசித்துத் தான் இந்த முடிவை எடுத்தேன். நான் மேற்கொண்ட முடிவு சரியானதுதான் என்பதை வீரர்களுக்கும் உணர்த்தியிருக்கிறேன்.''

இவ்வாறு பொண்டிங் கூறினார்.

# பந்துவீச்சு எடுபடாததால் தோல்வியா? ஆஸி. பயிற்சியாளர் நீல்சன் மறுப்பு!

மெல்போர்ன், நவ. 13

பந்துவீச்சு பலவீனமாக இருந்ததாலேயே அவுஸ்திரேலியா தோற்றதாகக் கூறுவதை ஏற்க முடியாது என்று பயிற்சியாளர் டிம் நீல்சன் கூறியுள்ளார்.

இதுகுறித்து, ஆஸி. பயிற்சியாளர் டிம் நீல்சன் கூறியவை வருமாறு:-

''பெங்களூர் டெஸ்டில் வெற்றி வாய்ப்பை தவற விட்டதே தோல்விக்கு முக்கிய காரணம். நாக்பூர் டெஸ்டில் வென்றாக வேண்டும் என்ற நிலை இருந்ததால் எங்களுக்கு சற்று நெருக்கடி இருந்தது. மற்றப்படி, பலவீனமான பந்து வீச்சே தோல்விக்குக் காரணம் என்பதை ஏற்க முடியாது.

''பிரெட் லீயின் பந்து வீச்சு சுத்தமாக எடுபடவில்லை. அவரும் அதிக விக்கெட் வீழ்த்தியிருந்தால் முடிவு வேறாக இருந்திருக்கும். இந்திய அணி எல்லா துறையிலும் சிறப்பாக விளையாடி வென்றது. இதுதான் ஆஸி. தோல்விக்கு காரணம்.'' இவ்வாறு நீல்சன் கூறினார்.

# இலங்கை வீரர்கள் கங்குலிக்கு பாராட்டு

சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றுள்ள சௌரவ் கங்குலி, மகத்தான வீரர் என்று இலங்கை வீரர்கள் பாராட்டியுள்ளனர்.

அணித் தலைவர் மஹேல ஜெயவர்தனா, சங்கக்கார, முன்னாள் தலைவரும் கிரிக்கெட் சபைத் தலைவருமான அர்ஜுன ரணதுங்கா ஆகியோர் இது குறித்து கூறியவை வருமாறு:-

''மிகச் சிறந்த வீரர் கங்குலி. எப்போதுமே சொந்த மண்ணில் இந்தியா சிறப்பாக விளையாடும். ஆனால், வெளிநாட்டு தொடர்களில் பரிதாபமாகத் தோற்கும்.

''அயல் மண்ணிலும் இந்தியாவை வெற்றி பெறச் செய்தவர் கங்குலி. அவரிடம் பல பாடங்களைக் கற்றுள்ளேன். மைதானத்துக்கு வெளியே ஜாலியாகப் பேசும் அவர், களம் இறங்கி விட்டால் ஆக்ரோஷமாக மாறிவடுவார். தாதா ஓய்வு என்னைப் பொறுத்தவரை சோகமான நாள்.

''அவரது இடத்தை நிரப்புவது மிகவும் கடினம். ஆசிய அணியில் அவருடன் சேர்ந்து விளையாடியிருக்கிறேன். மனித நேயம் மிக்க அவரை என்னால் என்றும் மறக்க முடியாது. அவரது ஓய்வு சர்வதேச கிரிக்கெட்டுக்கு பெரும் இழப்பாகும்.''

இவ்வாறு சங்கக்கார கூறினார்.

''உலகின் மிகச் சிறந்த வீரரான கங்குலியை அவ்வப்போது அணியிலிருந்து நீக்கியமை வேதனையானது. எனினும், அவர் அணிக்குத்திரும்பிய போதெல்லாம் சிறப்பாக விளையாடியுள்ளார். இது எல்லா வீரர்களாலும் முடியாது.

அவரது மனஉறுதி வேறு எந்த வீரருக்கும் கிடையாது. கங்குலி சிறந்த வீரர் மட்டுமல்லாமல் திறமையான தலைவர். சுழற்பந்து வீச்சை அனாயசமாக எதிர்கொள்பவர். அவருக்குப் பந்து வீசுவது என்றாலே சுழற்பந்துவீச்சாளர்களுக்கு கை நடுங்கும். பந்தை அனாயாசமாக சிக்ஸருக்கு பறக்கச் செய்யும் கங்குலியின் ஓய்வு வருத்தமளிக்கிறது'' - என்றார் ஜெயவர்த்தன.

ரணதுங்கா கூறுகையில் - ''இந்திய தலைவர்கள் பலரது செயல்பாடுகளை பார்த்திருக்கிறேன். கேள்விப்பட்டுள்ளேன். ஆனால், கங்குலி போன்ற ஆக்ரோஷமான தலைவரை இதுவரை பார்த்ததில்லை. என்னைப் பொறுத்தவரை அவர்தான் உலகின் மிகச் சிறந்த தலைவர்.

''சில ஆண்டுகள் அவரால் சிறப்பாக விளையாட முடியும். அவரது ஓய்வு கிரிக்கெட் உலகிற்கு பெரிய இழப்பாகும்.'' - என்றார்.




# பயிற்சி ஆட்டம்: இங்கிலாந்து தோல்வி

மும்பை, நவ. 13

மும்பை கிரிக்கெட் சங்க அணியுடனான ஒருநாள் பயிற்சி போட்டியில், இங்கிலாந்து 124 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அதிர்ச்சித் தோல்வியடைந்தது.

பீட்டர்சன் தலைமையிலான இங்கிலாந்து அணி 7 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டியில் விளையாட இந்தியா சென்றுள்ளது. முதலில் ஒருநாள் தொடர் நடக்கிறது.

முதல் போட்டி ராஜ்கோட்டில் நாளை நடக்கிறது. இந்நிலையில், இங்கிலாந்து அணி பயிற்சிப் போட்டிகளில் விளையாடி வருகிறது.

மும்பை கிரிக்கெட் சங்க லெவன் அணியுடன் நேற்று முன்தினம் மோதியது. இப்போட்டி மும்பை பிராபோர்ன் விளையாட்டரங்கில் நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து முதலில் பந்து வீசியது. மும்பை கிரிக்கெட் சங்க அணி 50 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 222 ஓட்டங்கள் எடுத்தது. வகேலா 44, மராதே 65, பகாடே 25, ஷேக் 37 ஓட்டங்கள் எடுத்தனர். இங்கிலாந்து தரப்பில் ஹார்மிசன், பட்டேல் தலா 2 விக்கெட்டுக்களையும், ஆண்டர்சன், ஸ்வான், காலிங்வுட் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

அடுத்து களமிறங்கிய இங்கிலாந்து அணி எதிரணியின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் திணறியது. முன்னணி வீரர்கள் பெல் 6, தலைவர் பீட்டர்சன் 0, கொலிங்வூட் 8, போபாரா 9, பிளின்ரொப் 5 ஓட்டங்கள் எடுத்து வெளியேற, மும்பை கிரிக்கெட் சங்க அணியின் வெற்றி உறுதியானது.

இங்கிலாந்து 25 ஓவரில் வெறும் 98 ஓட்டங்களை மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது. மும்பை கிரிக்கெட் சங்க அணித் தரப்பில் வெய்ன்காங்கர் 5, ஷேக் 3, வர்மா 2 விக்கெட் வீழ்த்தினர்.

ஒருநாள் தொடர் தொடங்கவுள்ள நிலையில், இந்த மோசமான தோல்வி இங்கிலாந்து அணிக்கு பின்னடைவாக அமைந்துள்ளது.

# எந்த வீரரிடமும் சைமண்ட்ஸ் மன்னிப்புக் கோரமாட்டாராம்

மெல்போர்ன், நவ. 13

அணிக் கூட்டத்தைத் தவிர்த்துவிட்டு மீன் பிடிக்கச் சென்றதன் காரணமாக இடைநீக்கம் செய்யப்பட்ட அவுஸ்திரேலிய சகலதுறை வீரர் அண்ட்ரூ சைமண்ட்ஸ், அதற்காக எந்த வீரரிடமும் மன்னிப்புக் கேட்கமுடியாது எனத் தெரிவித்துள்ளார்.

2 மாதங்களுக்கு முன்பு பங்களாதேஷுக்கு எதிரான ஒருநாள் தொடரின்போது நடைபெற்ற அணிக் கூட்டத்தைத் தவிர்த்து விட்டு, மீன்பிடிக்கச் சென்றார் சைமண்ட்ஸ். இதையடுத்து அவரை அணியிலிருந்து உடனடியாக இடைநீக்கம் செய்து, சொந்த ஊருக்குத் திரும்புமாறு உத்தரவிட்டது கிரிக்கெட் சபை.

76 நாள் வனவாசத்துக்குப் பின்னர் தற்போது 20 ஓவர் காட்சிப் போட்டியில் பங்கேற்க அவர் அழைக்கப்பட்டுள்ளார். ஓல் ஸ்டார்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் அவுஸ்திரேலியாவுக்காக சைமண்ட்ஸ் விளையாடவுள்ளார்.

இந்நிலையில் மெல்போர்னிலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டி அளித்துள்ளார் அவர். அப்போது, சக வீரர்களிடம் மன்னிப்பு கேட்டார் என அவர் உறுதிமொழி அளித்தமையாலேயே அணியில் மீளச் சேர்க்கப்பட்டதாகக் கூறப்படுகிறதே என அவரிடம் கேட்கப்பட்டது. அந்தக் கருத்தை மறுத்த சைமண்ட்ஸ், அணி மேம்பாட்டுக்கு முழுவதுமாக என்னை அர்ப்பணித்துக் கொள்வேன் என உறுதி கூறினார் என தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''மீன் பிடிக்கச் சென்ற விவகாரத்துக்காக அணி வீரர்களிடம் மன்னிப்பு கேட்பதில் எனக்கு உடன்பாடில்லை. நான் தவறு செய்தது உண்மை. அதை ஒத்துக்கொண்டேன். அதுமாதிரி செய்யக் கூடாத தவறுகளை நிறைய செய்துள்ளேன். ஆனால் ஒருமுறை உணர்ந்த பிறகு அதை மீண்டும் செய்ததில்லை. அதுபோல இம்முறையும் உறுதி தெரிவித்துள்ளேன்.'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் இந்த வாரம்

**நவம்பர் 13**




'புதையல்தீவு' என்ற அற்புத இலக்கியத்தையும் புகழ்பெற்ற பல குழந்தை இலக்கியங்களையும் ஆக்கிய கவிஞர் றொபேட் லூயி ஸ்ரீவன்ஸன் நவம்பர் 13ஆம் தகிதி 1850ஆண்டு பிறந்தார்.

**நவம்பர் 14**




பி.பி.ஸி. நிறுவனம் தன்னுடைய தினசரி ஒலிபரப்பை 1922ஆம் ஆண்டு நவம்பர் 14ஆம் திகதியிலிருந்துதான் ஆரம்பித்தது.

**நவம்பர் 15**




யுரேனஸ் கிரகத்தைக் கண்டறிந்த வானியல் ஆய்வாளரான சேர். வில்லியம் ஹெர்ஸ்செல் 1738ஆம் ஆண்டு நவம்பர் 15ஆம் திகதி பிறந்தார்.

**நவம்பர் 16**




அமெரிக்கத் திரைப்படத்துறையில் முடிசூடா மன்னனாக விளங்கிய கிளார்க் கேபிள் என்ற நடிகர் 1960ஆம் ஆண்டு நவம்பர் 16ஆம் திகதி இறந்தார்.

**நவம்பர் 17**




அகஸ்ரி ரோடின் என்ற புகழ்பெற்ற, பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சிற்பி இறந்தது 1917ஆம் ஆண்டு நவம்பர் 17இல்தான்.

**நவம்பர் 18**




புகைப்படக் கலையில் நிபுணராக விளங்கிய பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 'லூயி டக்கரே' என்பவர் 1789ஆம் ஆண்டு 18ஆம் திகதி பிறந்தார்.

**நவம்பர் 19**




இந்தியாவின் முதல் பெண் பிரதமரும் நேருவின் மகளுமாகிய இந்திரா காந்தி 1917ஆம் ஆண்டு 19ஆம் திகதி பிறந்தார்.

# கைகழுவுதல்; காலத்தின் அவசியம்!

**கே.எஸ்.சிவஞானராஜா**

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

அத்துடன் நாளாந்தம் கூட்டுதல், குப்பை அள்ளுதல், நீர் விடுதல், பாத்தி கட்டுதல், எரு வீசுதல், வாய்க்கால் துப்புரவு செய்தல், வாகனங்களைத் திருத்துதல், நச்சு மருந்துகளைக் கையாளுதல், பேன் எடுத்தல் போன்ற நாளாந்த நடைமுறை வேலைகளினால் நம்மை நாமே மாசுபடுத்துகின்ற அதேநேரம், நேர முகாமைத்துவம் பங்கிடப்படாத நிலையில், நேர்த்தியாக எம்மைத் துப்புரவு செய்து கொள்ளமுடியாதவர்களாகவும் இருக்கின்றோம்.

இந்நிலை வெல்லப்படவேண்டும். எவ்வாறெனில் துப்புரவு வேலைகள் முடிவடைந்த பின்னரும், மலசலம் கழித்த பின்னரும், உண்பதற்கு முன்னரும் கண்டிப்பாக அனைவருமே சவர்க்காரம் போட்டுக் கைகளை நன்றாகக் கழுவ வேண்டும். உலகமே அங்கீகரித்த இத்தினத்தில் 12 கோடி சிறுவர்கள் பங்குபற்றியமை ஒவ்வொரு குடும்பத்தையும் விழிப்புணர்வடையச் செய்துள்ளது.

பாடசாலைகளிலும், அலுவலகங்களிலும், ஆலயங்களிலும் பணிபுரிவோர் தொடக்கம் பயன்பெறுவோர் வரை அனைவருக்கும் சோப் (சவர்க்காரம்) பாவனையை அறிமுகம் செய்வதோடல்லாமல், அதனது அவசியத்தை அலட்சியம் செய்யாத வண்ணம் ஊக்கமளிக்கவேண்டும்.

ஒவ்வொரு மாணவர்களும் தத்தமது புத்தகப் பையினுள் சவர்க்காரம், கைக்குட்டை, சிறிய துவாய், தண்ணீர்ப் போத்தல் ஆகியவற்றைத் தினமும் கொண்டு வரும் வண்ணம் கோரப்படுதல் வேண்டும்.

குளியலறைகளில் இருப்பது போன்று மலசல கூடங்களிலும், சமையலறைகளிலும், கிணற்றடியிலும் சவர்க்காரப் பாவனையை ஸ்திரப்படுத்துதல் வேண்டும். சிறியவர்களுக்கு முன்னோடியாகப் பெரியவர்களும், மூத்தவர்களும் வழிகாட்டிகளாக இருக்க வேண்டும்.

நகங்களை வளர்த்து அழகு பார்க்காது, நகங்களை வெட்டி நோய்கள், கிருமிகள், அசுத்தம் யாவற்றிலிருந்தும் வெற்றி காண வேண்டும். நிறைவாக ஒவ்வொருவரும் தம்மையும் தம் சூழலையும் காப்பாற்றுவதற்குத் தத்தம் கைகளைச் சவர்க்காரமிட்டுக் கழுவிச் சுத்தமாக வைத்திருக்கவேண்டும். அதுவே ஆரோக்கிய சமுதாயத்திற்கான சிறந்த அத்திவாரமாக அமையும்.

*(முற்றும்)*

## கேள்விக்கு என்ன பதில்? - 10

**அனுப்பியவர்: பிறைமறையன்**



பால்மா வியாபாரி ஒருவர் விற்பனை செய்வதற்காகத் தனது கடையில் 9 பால்மாப் பைக்கற்றுகளை அடுக்கி வைத்திருந்தார். ஆனால் அந்தப் பால்மா பைக்கற்றுகளில் ஒன்று 100 கிராம் எடை குறைவானது. அந்த நிறை குறைந்த பைக்கற்றினை அடையாளங் காண வியாபாரி முயன்றார். இரு தடவைகள் மட்டுமே தராசினைப் பயன்படுத்தி, அவர் எடை குறைந்த பால்மாப் பைக்கற்றினைக் கண்டுபிடித்துவிட்டார். அது எப்படி?

*(சரியான விடையை 23.11.2008இற்கு முன்னர் எழுதி அனுப்பவும்)*

## இளவல்களே!

கேள்விக்கு என்ன பதில்? - 09இலிருந்து, வெற்றியீட்டும் மூன்று வாசகர்களுக்குப் பரிசில்கள் காத்திருக்கின்றன. பரிசு விவரம்:-

முதலாம் பரிசு - ரூபாய் 250 பெறுமதியான நூல்கள்.
இரண்டாம் பரிசு - ரூபாய் 150 பெறுமதியான நூல்கள்.
மூன்றாம் பரிசு - ரூபாய் 100 பெறுமதியான நூல்கள்.

## என் அன்புத் தோழி

நட்பெனும் வானில் உதயமாகி
மனமெனும் பூந்தோட்டத்தில்
மலர்ந்த றோஜாவே
அன்புக்கு இலக்கணமாய்
நட்புக்கு வரைவிலக்கணமாய்
பாசத்தின் உருவகமாய் - என்
உள்ளம் என்னும் பாதையில்
பாதச் சுவட்டை
பாதித்த தோழியே
உன்னோடு பழகிய நிமிடங்கள்
சுமைகளெல்லாம் சுகமானது.
நீ பேசிடும் பொழுது
மலர்கள் மௌனமாய்
மகிழ்வில் இசைபாடும்.
நீ இசைக்கும்பொழுது
கடல் அலையாய்
இன்னிசை எங்கும் பரவும்.
மழைத்துளிகள் தாளதம்பட்டம்
முழங்கும்.
மொத்தத்தில் இயற்கையே
உன்னால் மகிழ்கின்றது
இனிய என் தோழியே!

சீதா, A/L 2010, சென்.சான்ஸ் ம.வி.

## படித்ததில் பிடித்தது

உழைக்க நேரத்தை எடுத்துக்கொள்
அது வெற்றியின் விலை
சிந்திக்க நேரத்தை எடுத்துக்கொள்
அது வெற்றியின் ஊற்று
விளையாட நேரத்தை எடுத்துக்கொள்
அது இளமையின் ரகசியம்
படிக்க நேரத்தை எடுத்துக்கொள்
அது அறிவின் வாயில்
நல்லதைப் புரிய நேரத்தை எடுத்துக்கொள்
அது இன்பத்தின் பாதை
கனவு காண நேரத்தை எடுத்துக்கொள்
அது சாதனைக்கு வழி
அன்பு காட்ட நேரத்தை எடுத்துக்கொள்
அது இறைவனின் கொடை
சேவைபுரிய நேரத்தை எடுத்துக்கொள்
அது வாழ்க்கையின் குறிக்கோள்
சிரித்து மகிழ நேரத்தை எடுத்துக்கொள்
அது இதயத்தின் இன்னிசை.

எம்.எஸ்.நிதி, கட்டுடை, மானிப்பாய்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-........................................
முகவரி :-........................................
:-........................................
........................ ........................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# இளவல்கள் வட்டம்

## கவிதை புனைவோம்

### சுனாமிக் கடலே!

என் ஆசைக் கடலே
எகிறிக் குதித்து விட்டாயே!
துள்ளி விளையாடும் மழலைகளை
தூக்கிச் சென்று விட்டாயே!


மீன் பிடிக்க வந்தவர்களை
மீளவிடாமல் மறித்தாயே!
கரையில் இருந்த குடிசைகளை
கடலலைகளால் கரைத்துவிட்டாயே!

கண்ணிமைக்கும் நேரத்திலே
கதிகலங்க வைத்தாயே!
உன்னை நம்பிய மக்களை
உள்ளம் குமுற வைத்தாயே!

இறைவா!
இவை யாவும்
இம்மக்களின் விதியா?
இல்லை வேறொருவரின் சதியா?
இன்னும்தான் புரியவில்லை.

அபிரா தவலிங்கம்,
9E, வட.இந்து மகளிர் கல்லூரி.

# நாடும் நடப்பும்




## கூடாத செயல்கள்

மறக்கக்கூடாதது
- செய்நன்றி
பிரிக்கக்கூடாதது
- காதல்
சொல்லக்கூடாதது
- பொய்
செய்யக்கூடாதது
- துரோகம்
எடுக்கக்கூடாதது
- களவு
நம்பக் கூடாதது
- நடிப்பு
கேட்கக் கூடாதது
- தீயசொல்
காட்டக்கூடாதது
- பயம்
மாற்றக் கூடாதது
- இலக்கு

ப.துஷாந்தினி,
மாதகல் வடக்கு, மாதகல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீப்பில்ஸ் லீசிங் கம்பனி லிமிட்டட்
யாழ்ப்பாணம்
(மக்கள் வங்கியின் முழு உரித்தான நிறுவனம்)

**வாகனம், பொறி விற்பனை**

| இலக்கம் | வகை | உற்பத்தித் திகதி |
|---|---|---|
| 250- 6437 | TOYOTA LH 113 | 1993 |

**பார்வையிடும் இடம்:**
பீப்பில்ஸ் லீசிங் கம்பனி, 82, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்
பார்வையிடும் காலம்: இம்மாதம் 13, 14, 17ஆம் திகதிகளில்
பார்வையிடும் நேரம்: காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
பீப்பில்ஸ் லீசிங் கம்பனி லிமிட்டட்,
இல. 82, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

மேலதிக விவரங்களுக்கு:
தொ.இல.: 021 222 8031,
021 222 9627.
(சி/555297)



# முதலாம் ஆண்டு இதய அஞ்சலிகள்

அமரர் நாகலிங்கம்
**விஜயரத்தினம்**



ஒளிர்தல்:24.11.1942
அணைதல்: 27.10.2007

விழுதுகள் மூன்றும்
வேர்விடும் வரை
தன்னுயிர் கொடுத்து
காத்து நின்ற ஆலமரம் இது.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்:
**பிள்ளைகள்.**
தொல்புரம் மத்தி, சுழிபுரம். (79793)



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**சைவத்திரு அ.விஸ்வநாதன்**
(இளைப்பாறிய அதிபர், B.A. Lond 1st Class Trd. SP. Post)
மலர்வு 04.03.1917 — உதிர்வு 15.10.2008

அன்பின் உறைவிடமாய் அறிவின் பொக்கிஷமாய்
பண்பின் இலக்கணமாய் பார் போற்ற இன்பமுடன்
இவ்வுலகில் வாழ்ந்து இறையடி சேர்ந்து திங்கள்
ஒன்று ஆனதுவோ! நினைவு கூருகின்றோம் என்றும்.

எம் நெஞ்சங்களில் அணையாத தீபச் சுடராய் ஒளிர்ந்து கொண்டிருக்கும் எமது குடும்பத்தலைவர் உதிர்ந்த செய்தி கேட்டு எமதில்லம் வந்து உதவிகள் புரிந்து, இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டு அஞ்சலி தெரிவித்து, ஆறுதல் தெரிவித்த அன்புள்ளங்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (14.11.2008) ஐப்பசி வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அறிவித்தலைத் தனிப்பட்ட அழைப்பாக
ஏற்றுக் கொள்ளுமாறு பணிவன்புடன்
வேண்டுகின்றோம்.

பிள்ளையார் வீதி,
அளவெட்டி.
(79780)
மனைவி,
பிள்ளைகள் குடும்பத்தினர்.


# நிறுத்தல் அளவைகள் முத்திரையிடல்

வடமராட்சி, நவ.13

பருத்தித்துறை பிரதேச சபையின் எல்லைக்குட் பட்ட சந்தைகள், வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் நிறுத்தல் அளவைகள் முத்திரையிடப்படவுள்ளன.

நாளை வெள்ளிக்கிழமை, எதிர்வரும் திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை ஆகிய நாள்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை பருத்தித்துறை பிரதேச சபை அலுவலகத்தில் முத்திரையிடும் பணி இடம் பெறவுள்ளது.

உரியவர்கள் நிறுத்தல் அளவைகளுக்குத் தவறாது முத்திரையிட்டுக் கொள்ளுமாறு பிரதேச சபைச் செயலர் ச.சந்திரயோகன் அறிவித்துள்ளார்.

(203-236)

# உடற்கல்வி விஞ்ஞான அலகு மாணவர் கலந்துரையாடல்

வலி. வடக்கு, நவ.13

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உடற்கல்வி விஞ்ஞான அலகு மாணவர்களுக்கான சந்திப்பொன்று எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு உடற்கல்வி விஞ்ஞான அலகு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முதலாம் வருடப் பரீட்சைக்குத் தோற்றி இரண்டாம் வருட பயிற்சி நெறியை தொடாது இருக்கும் அனைத்து மாணவர்களையும் தவறாது இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

துறையின் இணைப்பாளர் மாணவர்களுடன் கலந்துரையாடவுள்ளமையால் அனைவரையும் வருகை தருமாறும் இன்று இடம்பெறவிருந்த கூட்டம் நடைபெறாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(203-86)


**காணி விற்பனைக்கு**
பருத்தித்துறை, கிராமக் கோட்டுச் சந்தியில் இருந்து மருதங்கேணி றோட்டில் 300 மீற்றர் தூரத்தில் வீதியோரமாக இரண்டு பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு கொள்ள வேண்டிய தொ.பே. இல.:
0779906471, 0778245001
(சி/555299)



**விற்பனைக்குண்டு**
நிறை கூடிய தரமான புறொயிலர் இறைச்சிக் கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
5 Kg க்கு மேல் விலைக்கழிவுண்டு.
"உதயன் பாம்",நாயன்மார்கட்டு
(ஆயுள்வேத வைத்தியசாலைக்குக் கிழக்குப் பக்கம்)
(79770)



**தேவை**
அரச நிறுவனம் ஒன்றில் கடமைபுரியும் சிறிய குடும்பம் ஒன்றிற்கு யாழ்.நகர்ப் பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை. (நல்லூர் பிரதேசம் விரும்பத்தக்கது).
தொடர்பு:
இல.115, சட்டநாதர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.எண்.0777 135702, 0776452455.
(சி/555399)



**G.C.E. O/L மாணவர்களுக்கான**
**மாபெரும் கருத்தரங்கு**
**வணிகக்கல்வியும் கணக்கீடும்**
S.M.சுரேஷ்
இம் மாதம் 15, 16 ஆம் திகதிகளில்
(சனி, ஞாயிறு)
12.00- 3.00 மணிவரை
(அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்).
சக்தி கல்வி நிலையம்
கல்வியங்காடு.
(79802)



# எமது வழிகாட்டியை வாழ்த்துகின்றோம்



இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றிருக்கும் உயர்திரு. **நடராஜா சிவரட்ணம்** அவர்கள் Pronto Lanka நிறுவனத்தின் வங்கிச் சேவையை யாழ்.மாவட்டத்தில் 2002ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தி, எமக்கு வாழ்வாதாரம் தந்து தொடர்ந்தும் ஆக்கபூர்வமான நெறிப்படுத்தலினூடாக, வன்னிப் பிராந்தியத்துக்கும் எமது சேவையை விரிவாக்கி இக்கட்டான சூழ்நிலைகளிலும் தனக்கென உரிய பாணியில் வழிநடத்தி எமது சேவைக்கு வழிகாட்டிய செயல் வீரனான வல்வையின் மைந்தனை மேலும் உயர்வு பெற எமது தலைமையலுவலகமும் நாட்டில் உள்ள எமது அனைத்துக் கிளை அலுவலகங்களும் மனதாரப் பாராட்டி நிற்கின்றோம்.

Pronto Lanka (pvt) Ltd.
பணிப்பாளர்களும்,
பணியாளர்களும்.
(சி/555288)





**யாழ்.அத்தியடிப் பிள்ளையார் கோயில்**
ஐப்பசி வெள்ளி 1008 சங்காபிஷேகம்

நாளை (14.11.2008) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து உள்வீதி உலாவும் நடைபெறும். நண்பகல் 12 மணிக்கு அன்னதான நிகழ்வும் இடம்பெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

**ஆலய நிர்வாகத்தினர்.**
(79800)



# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1036 நிலம்

வெற்றி இலக்கங்கள்
05 11 18 31
கும்பம்
11-11-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 400186026 - 400206562
ஜக்பொட் பரிசு ரூபா. 6,314,600/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 222,488 | 20/- | 4,449,760/- |
| 2 இலக்கங்கள் | 20,426 | 40/- | 817,040/- |
| 1 இல. + லக்கினம் | 20,174 | 60/- | 1,210,440/- |
| 2 இல. + லக்கினம் | 1,875 | 200/- | 375,000/- |
| 3 இலக்கங்கள் | 544 | 1000/- | 544,000/- |
| 3 இல. + லக்கினம் | 47 | 10,000/- | 470,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 6,314,600/- | - |
| மொத்தம் | | | 8,466,240/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 265,562 | | 8,966,240/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 6,811,575/-

தொடர் இலக்கம் 500208481 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2008 நொவெம்பர் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100.000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| ஹம்பாந்தோட்டை | 400186146-6-22 |
| மட்டக்களப்பு | 400201252-6-25 |
| கொழும்பு | 400199804-9-31 |
| கண்டி | 400192854-0-12 |
| அம்பாறை | 400193326-5-29 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுங்கப்பட்டுவிட்ட எமது மனித விழுமியங்களை மீளமைக்க சாயி கல்வித் திட்டம் வரப்பிரசாதம்

## மானிப்பாய் சாயி பாடசாலைப் பரிசளிப்பில் துணைவேந்தர் கருத்து

யாழ்ப்பாணம்,நவ.13

விஞ்ஞானம், தொழிநுட்பம் ஆகிய புலங்களில் மனிதன் கண்ட சாதனைகள் பொருள் சார்ந்த வாழ்வியலை மேம்படுத்த உதவியமை உண்மைதான். ஆனால் மனதை மேன்மைப்படுத்தவும், சமூக வாழ்வின் பெறுமதியை உயர்த்தவும் அவை தவறிவிட்டன.

தனிமனிதவாதமும், குறுகிய நோக்கும் காலங்காலமாக நாம் காத்த மனித விழுமியங்களை விழுங்கிவிட்டன. இந்நிலையில் தான் மனித விழுமியங்களுக்கான சாயி கல்வித்திட்டம் வரப்பிரசாதமாகின்றது. நிலவும் கலைத்திட்டங்கள் மனித விழுமியக் கல்வியின் வழி மீளமைக்கப்படுவதும், ஒருங்கிணைக்கப்படுவதும் இன்றியமையாதது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன்.

மானிப்பாய் சாயி பாடசாலையின் ஆறாவது ஆண்டு பரிசளிப்பு வைபவம் அண்மையில் பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது. அந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றும்போதே துணைவேந்தர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:

சான்றிதழுக்கான போட்டிப் பந்தயமாய், பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சிக்குப் பாதகமாகும் நடைமுறைகள் அகன்று பிள்ளைகளின் மனதை மேன்மைப்படுத்தும் - வளர்க்கும் கல்வி வேண்டும். மனிதம் காக்க இதுவே வழியாகும். இந்த உயர்கல்வி இலக்கின் வழி மானிப்பாயில் தொடங்கப்பட்ட சாயி விழுமிய கல்வி பாடசாலையின் பணி போற்றுதற்குரியது. - என்றார்.



மானிப்பாய் சாயி பாடசாலையின் ஆறாவது வருடாந்தப் பரிசளிப்பு விழாவை திருமதி கௌரி சண்முகலிங்கன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கின்றார். அருகில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், பாடசாலையின் அதிபர் திருமதி எஸ்.கந்தசாமி மற்றும் நிர்வாகிகள் காணப்படுகின்றனர்.

பாடசாலை நிர்வாகத் தலைவர் எஸ்.கந்தசாமியின் தலைமையில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் வடமாநில சாயி அமைப்புகள் இணைப்பாளரும் யாழ். மாவட்ட நீதிபதியுமான வசந்தசேனன் உரையாற்றுகையில், சத்தியசாயி மனித விழுமிய கல்வி மேம்பாட்டுக்கு அனைவரும் இணைந்து செயற்படுவதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

மாணவர்களுக்கான பரிசில்களையும், சிறப்பான முறையில் மாணவர்களை சாதனையாளர்களாக்கிய ஆசிரியர்களுக்கான கௌரவிப்புகளையும் திருமதி கௌரி சண்முகலிங்கன் வழங்கினார்.

மனித விழுமியங்களை அடிப்படையாகக் கொண்ட மாணவர்களின் கலையாக்கங்களும் நடைபெற்றன. (அ)

## தொண்டர் ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ்.மாவட்டத் தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்று தொண்டர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (201)

## ஜெயஸ்ரீ சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்துள்ளோருக்கு பரிசில்கள் கிடைத்தன

யாழ்ப்பாணம்,நவ.13

மக்கள் வங்கியின் ஜெயஸ்ரீ பரிசுதிய சேமிப்புத் திட்டச் சீட்டிழுப்பில், சாவகச்சேரி மக்கள் வங்கியில் கணக்கு வைத்துள்ள அல்லாரை வாசிக்கு குளிர்சாதனப் பெட்டியும் மேலும் மூவருக்கு டி.வி.டி பிளேயரும் கிடைத்துள்ளன.

வங்கியில் 'சிசு உதான' கணக்கில் அதிக தொகை வைப்பிலிடப்பட்டுள்ள மாணவிக்குச் சைக்கிள் ஒன்றும் கிடைத்துள்ளது.

பரிசுப் பொருள்கள் எதிர்வரும் 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு மக்கள் வங்கியில் வட வலய உதவிப் பொதுமுகாமையாளர் க.ஆனந்தராசாவினால் வழங்கப்படவுள்ளதாகச் சாவகச்சேரி கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் தெரிவித்தார். (203-207)

## கோப்பாய் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் அங்குரார்ப்பணம்

கோப்பாய்,நவ.13

கோப்பாய் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை வலி.கிழக்குப் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் இடம்பெற்றது.

நிர்வாக சபை உறுப்பிணர்களில் தலைவராக இ.மனோகரன், செயலாளராக பு.இராசரத்தினம், பொருளாளராக சி.பிரசாந்தராஜ் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

சங்கத்தின் முதற்கட்ட நலப்பணிகள் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (203-72)

## றோட்டறிக் கழகத்தின் அதிதிப் பேச்சாளர் தினம்

யாழ்.றோட்டறிக் கழகத்தினரின் ஏற்பாட்டில் மாதாந்தம் ஒழுங்கு செய்யப்படும் அதிதிப் பேச்சாளர் தினத்தில் இம்மாதத்துக்கான நிகழ்வு நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு 'உதயன்' கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளரும், சுன்னாகம் வாழ்வக நிறுவனத் தலைவருமாகிய ஆ.ரவீந்திரன் 'ஈடில்லா இலக்கிய இன்பம்' என்னும் தலைப்பில் உரை நிகழ்த்துவார். (201)

## மகாசங்காபிஷேகம்

வடமராட்சி,நவ.13

தும்பளை நெல்லண்டை நரசிங்க வைரவர் ஆலய மகாசங்காபிஷேகம் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

கடந்த முதலாம் திகதி ஆலய வருடாந்த அபிஷேகம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. (203-236)

## சாவகச்சேரி-ஆதார வைத்தியசாலையில் விரைவில் 'எக்ஸ் - ரே' அலகு ஆரம்பிக்கப்படும்

யாழ்ப்பாணம்,நவ.13

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 'எக்ஸ் - ரே' பிரிவு இயங்க சுகாதார திணைக்களத்தின்ரால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது வைத்தியசாலை வளாகத்தில் அமைக்கப்பட்டு வரும் நிர்வாக அலகு கட்டடத்தில் 'எக்ஸ்-ரே' பிரிவு அமைப்பதற்கென தனி அலகுக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த வருட நடுப்பகுதியில் 'எக்ஸ் - ரே' அலகு இயங்க ஆரம்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - அவசர சிகிச்சைப் பிரிவும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவசர சிகிச்சைப் பிரிவு அமைப்பதற்கான கட்டட உபகரணங்களைச் சர்வதேச லயன்ஸ் கழகத்தினர் வழங்கவுள்ளனர்.

சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட ஆளுநரின் வேண்டுகோளுக்கிணங்க சர்வதேச லயன்ஸ் கழகத்தினர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவு அமைக்க ஒப்புதல் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-207)



ஆசிரியர் கு.சுதன் எழுதிய 'இலங்கை வரலாறு வினாவிடை' நூல் வெளியீட்டு விழா அண்மையில் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலய நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்றது.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் நூலை வெளியிட்டு வைக்க நூலின் முதற்பிரதியை கல்லூரி அதிபர் ஆ.குமரேசமூர்த்தி பெற்றுக்கொள்வதையும் அருகில் நூலாசிரியர் நிற்பதையும் படத்தில் காணலாம். (250)

## ப.நோ.கூ. சங்கக் கிளைகள் சிலவற்றில் மண்ணெண்ணெய் விலை குறையவில்லை

### விசனம் தெரிவிக்கின்றனர் பாவனையாளர்கள்

யாழ்ப்பாணம், நவ.13,

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மண்ணெண்ணெயின் விலையை லீற்றர் ஒன்றுக்கு 20 ரூபாவாகக் குறைத்துள்ளபோதும் குடாநாட்டில் உள்ள ஒருசில ப.நோ.கூ.சங்கக்கிளைகளில் விலைகள் குறைக்கப்படவில்லை என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 90 ரூபாவாகத் தற்போதும் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும், மண்ணெண்ணெயின் விலை குறைக்கப்படாமை காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விலை குறைக்கப்படாமை தொடர்பாகச் சம்பந்தப்பட்ட கிளை முகாமையாளர்களிடம் மக்கள் கேட்டபோது விலை குறைப்பதற்கான அறிவித்தல் தமக்கு இன்னும் கிடைக்கவில்லை என்று அவர்கள் கூறியதாகவும் பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் அக்கறை கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாவனையாளர் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (203-224)

## திருட்டுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் இளைஞர் கைது

யாழ்ப்பாணம்,நவ.13

மீசாலை, வங்களா வீதியில் கடந்த 4ஆம் திகதி இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவராகக் கருதப்படும் இளைஞரை சாவகச்சேரிப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மீசாலைப் பகுதியில் சந்தேகத்திற்கு இடமான நிலையில் இந்த இளைஞர் நடமாடியதைக் கண்டு பொதுமக்கள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர்.

அந்த நபரை அப்பகுதி வீடொன்றில் வைத்துக் கைதுசெய்து விசாரித்தபோது திருட்டுடன் அவர் தொடர்புடையவர் என்று அறிய முடிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த இளைஞரைப் பொலிஸார் திங்களன்று சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர். சந்தேக நபரை எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தவிட்டார்.

இந்த இளைஞர் அரியாலையை பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (202-207)

## வெளியீட்டு நிகழ்வுகள்

கோப்பாய்,நவ.13

யாழ்.கல்வி வலய உடற்கல்விப் பிரிவில் 'சுக அப்பியாசம்' இறுவட்டு வெளியீடு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் யாழ்.கல்வி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் யோ.ரவீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக மக்கள் வங்கி வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் ரி.கே.ஆனந்தராஜா கலந்துகொள்வார்.

வெளியீட்டுரையை யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் நிகழ்த்துவார். (203-72)

* * *

கோப்பாய்,நவ.13

ஆசிரியை திருமதி மதினி உதயகுமாரின் 'பரத நாட்டியம் வினா விடைத் தொகுப்பு நூல்', 'பாட்டும் பரதமும்' இறுவட்டு ஆகியவற்றின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் செல்வி க.கமலநாயகி தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்.கல்வி வலய அழகியல் பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் செல்வி கிருஷ்ணவேணி மயில்வாகனம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

வெளியீட்டுரையைப் பிரதம விருந்தினர் நிகழ்த்துவார். மதிப்பீட்டுரையை யாழ்.கல்வி வலய நடனபாட ஆசிரிய ஆலோசகர் திருமதி பத்மினி செல்வேந்திரகுமார் நிகழ்த்துவார். (203-72)

## ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்தோருக்குப் புத்தகங்கள்

யாழ்ப்பாணம்,நவ.13

தென்மராட்சிப் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் கடந்த ஜூன் மாதம் வரை சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்தவர்களில் 429 பேருக்குத் தவணைப் பாஸ் புத்தகங்கள் பிரதேச செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

குறித்த காலப்பகுதிக்கு முன்னர் இத்திட்டத்தில் இணைந்தவர்கள் பணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் எதிர்வரும் 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிரதேச செயலக சமூகசேவைகள் பிரிவுக்கு வருகை தருமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (203-207)

## தென்மராட்சிப் பிரதேச செயலக குழுக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம்,நவ.13

தென்மராட்சிப் பிரதேச குழுக் கூட்டங்கள் எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

காலை 9.30 மணிக்குப் பிரதேச விவசாயக் குழுக்கூட்டமும் 10.30 மணிக்குப் பிரதேச சுற்றாடல் சுகாதார மேம்பாட்டுக் குழுக் கூட்டமும் 11.30 மணிக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் நடைபெறும் எனப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (203-207)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




ஆசிரியர்:- திரு.சிவபாதசுந்தரம்பிள்ளை நவீனன், கண்டி / இராஜவலை இந்து தேசிய கல்லூரி

# Special Guidance for O/L 2008 Students

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரிப் பரீட்சை - 2008 டிசெம்பர்
General Certificate of Education (Ord.Level) Model Examination - 2008 December

T / 32 / II **கணிதம் - 11** Two hours

கடந்தவாரத் (06.11.2008) தொடர்ச்சி.....

## பகுதி - A

01\. a) குறுந்தூர சேவையிலீடுபடும் [illegible] ஒன்றில் 7 ரூபா, 10 ரூபா பெறுமதியான ரிக்கட் வழங்கப்படுகிறது. பேருந்தில 30 பேர் உள்ளபோது வருமானமாக 264 ரூபா கிடைத்தது. எனின், ஒருங்கமை சமன்பாடுகள் பற்றிய அறிவைப் பயன்படுத்தி நடத்துனர் வழங்கிய ரூபா 7 பெறுமதியான ரிக்கட்களின் எண்ணிக்கையைக் காண்க.

b) $2n + a = -2(n+a)$ இல் x ஐ எழுவாயாக்குக. இதிலிருந்து $2n + 3 = -2(n + 3)$ என்ற எளிய சமன்பாட்டை தீர்க்குக.

02\. a) 1. $y = x^2/2 - 1$ என்ற இருபடிச்சார்பு வரைவதற்குரிய கீழுள்ள அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|---|---|---|---|
| y | 7 | 3.5 | 1 | -0.5 | ----- | ----- | 1 | 3.5 |

2) x அச்சுவழியே 10 சிறு பிரிவுகளை ஒரு அலகாகவும், y அச்சுவழியே 10 சிறு பிரிவுகளை ஒரு அலகாகவும் எடுத்துச் சார்பினை வரைக.

b) வரைபிலிருந்து
1) திரும்பற்புள்ளியின் ஆள்கூறை எழுதுக.
2) சார்பு மறையாகக் குறைவடையும் x இன் பெறுமானவீச்சு யாது?
3) $\sqrt{2}$ இன் பெறுமானத்தை உய்த்தறிக.

03\. a) பெருக்கல்விருத்தி ஒன்றின் முதலாம், மூன்றாம் உறுப்புகளின் கூட்டுத்தொகை 5/2 ஆகும். 2ஆம் உறுப்பு 1 எனின், சாத்தியமான இரு தொடர்கள் உண்டு எனக்காட்டி அவற்றை எழுதுக.


b) 200 இற்கும் 400 இற்குமிடையில் 100 ஒற்றை எண்கள் அமைந்துள்ளன. எனின், அவற்றின் கூட்டுத்தொகையைக் காண்க.

04\. a) இருபது - இருபது கிறிக்கட் போட்டி ஒன்றில் பங்கேற்கும் அணியொன்றில் 3 வேகப் பந்து வீச்சாளர்களும், 2 சுழற்பந்து வீச்சாளர்களும் உள்ளனர். இறுதி இரு பந்துப் பரிமாற்றங்களையும் (19ஆவது ஓவர், 20 ஆவது ஓவர்) வீசுவதற்கு அணித்தலைவரால் பந்துவீச்சாளர் ஒருவர் அழைக்கப்படுவதற்குச் சாத்தியமான மாதிரி வெளியை வரைபுபடுத்துக.
1) மாதிரிவெளியை அவதானித்து இறுதி இரு பந்து பரிமாற்றங்களையும் வேகப்பந்து வீச்சாளர்கள் வீசுவதற்கான நிகழ்தகவைக் காண்க.
2) இறுதி இரு பந்துப் பரிமாற்றங்களையும் சுழற்பந்து வீச்சாளர்கள் வீசுவதற்கான நிகழ்ச்சியை மாதிரிவெளியில் குறித்துக்காட்டுக.

b) $\cap(A \cup B) = 70$, $\cap(A) = 40$, $\cap(A \cup B) = 23$ எனின், $\cap(B)$ ஐக் காண்க.

05\. ரூபா 99,000 பெறுமதியான பொருள் ஒன்றை உடன் பணமாக 19,000 ஐச் செலுத்தி மீதியை குறைந்துசெல்லும் மீதிக்கு வட்டிகணிக்கும் முறைப்படி 16 தவணைகளில் தலா 5212.50 வீதம் செலுத்தி கொள்வனவுசெய்ய முடியும் என்று கம்பனி ஒன்று விளம்பரப்படுத்தியது.
1) ''குறைந்துசெல்லும் மீதிக்கு வட்டி கணிக்கப்படும்'' என்ற சொற்றொடருக்குப் பொருத்தமான வேறொரு பெயர் தருக.
2) தவணைக்கட்டணங்களாக அவர் செலுத்திய மொத்த தொகை எவ்வளவு?
3) வட்டியாகச் செலுத்திய பணம் எவ்வளவு?
4) வட்டி கணிக்கப்படும் மாத அலகுகளின் எண்ணிக்கை யாது?
5) மாத அலகு ஒன்றுக்கான வட்டியைக் காண்க.
6) அறவிடப்பட்ட வட்டிவீதத்தைக் காண்க.


06\. 14cm விட்டமுடைய அரைத்திண்ம அடர் ஒன்றின் மீது 7cm விட்டமுடைய அரைத்திண்மம் ஒன்று படத்தில் உள்ளவாறு மையம் பொருந்துமாறு வைக்கப்படுகிறது.




1) நிழற்றிய பகுதியின் பரப்பளவு யாது?
2) சிறிய அரைக்கோண அடரின் கனவளவு $539/6 cm^3$ எனின், கூட்டுருவின் கனவளவு யாது?
3) கனவளவை ml இல் தருக.

## பகுதி - B

01\. a)





1) மேலுள்ள பல்கோணிகளில் குழிவுப் பல்கோணி எது?
2) பல்கோணி PQRS இன் பொதுப்பெயர் யாது?
3) PQ//SR எனின், சிறப்புப்பெயர் யாது?
4) PQRS ஓர் இணைகரமாவதற்கான நிபந்தனை யாது?
5) PQ = 7cm ஆகவுள்ளபோது PQRS ஓர் ஒழுங்கான பல்கோணியாக அமையும் எனின், அப்போது QR இன் நீளம் யாது? கோணம் PQR இன் பருமன் என்ன?

b) ஒழுங்கான பல்கோணி ஒன்றின் புறக்கோணம் ஒன்றின் பருமன் [illegible] பல்கோணியின் பெயர் என்ன?

02\. முக்கோணி ABC இல் BC இன் நடுப்புள்ளி X உம் AB//XY உம் ஆகும்.




1) நடுப்புள்ளித்தேற்றம் பற்றிய அறிவைப் பயன்படுத்தி AY, YC இற்கிடையிலான தொடர்பைத் தருக.
2) முக்கோணி ABX, முக்கோணி AXY சமகோண முக்கோணிகள் எனக்காட்டுக.
3) AB = 10cm, BC = 12 cm எனின், AX இன் நீளம் யாது?
4) AY இன் நீளம் காண்பதன் மூலம் முக்கோணி ABC இன் சுற்றளவைக் காண்க.

03\.


| உயரம் | 30 - 38 | 38 - 46 | 46 - 54 | 54 - 62 | 62 - 70 | 70 - 78 |
|---|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை | 2 | 3 | 8 | 4 | 2 | 1 |

20 செடிகளின் உயரங்கள் (cm) மேலே தரப்பட்டுள்ளன.

a) வகுப்பாயிடைகளின் நடுப்பெறுமானங்களைக் காண்பதன் மூலம் மீடிறன் பல்கோணி வரைக. மீடிறன் பல்கோணியின் பரப்பளவு எத்தனை சதுர அலகுகளாக இருக்கும்.


b) செடியொன்றின் சராசரி உயரத்தை (இடை) காண்க.

04\. வட்டத்தின் மீது அமைந்துள்ள புள்ளிகள் X, Y, B ஆகும்.




1) இங்கு தொடலி எது?
2) நாண் BX தொடலியுடன் அமைக்கும் கோணத்தைப் பெயரிடுக.
3) நாண் BX தொடலியுடன் அமைத்த கோணத்துள் அமைந்த வட்டத்துண்டம் தவிர்ந்த மற்றைய துண்டத்தின் பரிதியில் எதிரமைக்கும் கோணத்தைப் பெயரிடுக.
4) மேலே நீர் பெயரிட்ட இரு கோணங்களுக்கிடையிலும் உள்ள தொடர்பைக் காரணத்துடன் தருக.
5) கோணம் CBX = $39^0$ எனின், கோணம் BYX இன் பருமன் யாது?
6) YX//AC ஆகும்போது முக்கோணி BXY இன் சிறப்புப்பெயர் யாது?
7) கோணம் YBX இன் பருமனைக் காண்க.

05\. 1) அருகிலுள்ள கோணத்தைக் கவராயம், அடிமட்டம் என்பவற்றைப் பயன்படுத்தி உமது விடைத்தாளில் பிரதிசெய்க.




2) AB, BC ஐ அயற்பக்கங்களாக உடைய இணைகரம் ABCD ஐப் பூரணப்படுத்துக.
3) இணைகரம் ABCD இற்குச் சமபரப்புடைய முக்கோணி ABE ஐ அமைப்பதற்குரிய பின்வரும் படிமுறைகளைப் பூரணப்படுத்துக.
- ★ மூலைவிட்டம் BD இற்குச் சமாந்தரமாக C இன் ஊடாக நேர்கோடு வரைதல்.
- ★ AD ஐ நீட்டுதல். அவை சந்திக்கும் புள்ளியை E எனப் பெயரிடல்.
- ★ BE ஐ இணைத்தல்.

06\. a) தரைக்குச் சமாந்தரமாக 2000 m உயரத்தில் பறந்துகொண்டிருக்கும் விமானமொன்றைத் தாக்குவதற்காகத் தரையிலிருந்து செலுத்தப்பட்ட ஏவுகணை ஒன்று 3250m நேர்கோட்டின் வழியே சென்று விமானத்தைத் தாக்கியது எனின், ஏவுகணை கிடையுடன் எத்தனை பாகை சரிவில் ஏவப்பட்டிருக்கவேண்டும்?

b) 25cm ஐ, 1 cm ஆல் குறித்து வரையப்பட்ட செவ்வகம் ஒன்றின் பரப்பளவு $10cm^2$ எனின், செவ்வகத்தின் உண்மைப் பரப்பைக் காண்க.

(எதிர்வரும் வியாழக்கிழமை அடுத்த மாதிரி வினாத்தாள் வெளிவரும்.)

## கடந்த 06.11.2008இல் வெளிவந்த வினாத்தாளுக்கான விடைக்குறிப்புகள்

### கணிதம் - I, பகுதி - A


01\. ரூபா 10 02. 8mm 03. $(\sqrt{a} - \sqrt{b})$ 04. 44 + 14 = 58cm

05\. x = 7, 14, 21, 28, ... 06. AB 07. $\bar{1}.2534 \div 2 = \bar{1}.6267$ 08. m=2

09\. x + x - 50 = 180, x = 115' 10. n (A) = 0

11\. (1/6 = 1/3 x P(B) (P(B)) = 1/2 12. (3 x 2) 13. 4 x 1/4 = 1 = 1


14\. Cos 0 = 1/2




15\. $2n+130+120+106 = 540^0$ (2n = 184) ($n = 92^0$)

16\. x-3y = 2 (1) x+3y = 8 (2) (6y = 6) (y = 1)

17\. $x^2+12^2 = 13^2$ ($x^2 = 25$) (x= 5cm)




18\.




19\. 1) $y = (n+1)^2$. 2) இழிவுப்பெறுமானம் 0

20\. தேவையான மனிதர்கள் = 3 x 8 x 7/ 6 x 7 = 4 பேர் மேலதிகமாக ஒருவர் தேவைப்படுவார்.


21\. (1) x : y = 2:1 (2) $y + z = 180^0$

22\. பொ.ம.சி = 5x-1x (n-2) (n+2)
= -5( n-2) (n+2) = 5 (2-n) (n+2)

23\. தீர்வை = 25/100 x 500,000 = ரூபா 125,000, சதவீதம் = 125,000/500,000 x 100 = 25%


24\. உண்மை தூரம் = 75,000 x 4cm = 300,000cm = 3000m

25\. 3-2 x ≤1 (-2x ≤ -2) (x1





26\. $lg_3^x = -1$ ($x = 3^{-1}$) (x = 1/3)

27\. B யிலிருந்து A இன் திசைகோள் $130^0$




28\. $1/2\ a \times b = 1/2\ a^2+b^2 x$ $x = ab/a^2+b^2$




29\. பங்குகளின் பெறுமானம் பெறுமதி = 6500/13 x 10 = 5000 ரூபா

30\. [illegible] = 490-90/5 = 80 kg

(நிறைவுற்றது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தரம் 05 மாணவர்களுக்கான
# தயார்படுத்தல் பரீட்சைத் தொடர் - 2009
**வினாத்தாள் II** **நேரம் : 75 நிமிடங்கள்**

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசிக்குக.

"புறா புறா வெள்ளைப்புறா
பறந்து போகுது வெள்ளைப்புறா!
படபடக்குது வெள்ளைப்புறா
பாடித்திரியுது வெள்ளைப்புறா!
களத்து மேட்டிலே வெள்ளைப்புறா
கொத்தித் தின்னுது வெள்ளைப்புறா!
மாடி வீட்டில் வெள்ளைப்புறா
மறைந்து தின்னுது வெள்ளைப்புறா!
வேடன் வந்ததும் வெள்ளைப்புறா
விரைந்து பறக்குது வெள்ளைப்புறா!
-இரா.வளையாபதி-

பாடலடிகளை அடிப்படையாகக்கொண்டு 01 - 10 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.


01) இப்பாடலில் வரும் பெயரடைமொழி ஒன்று தருக.
..................................................
02) இப்பாடலில் வரும் உயிருள்ள அஃறிணைப் பெயர்ச்சொல் ஒன்று தருக.
..................................................
03) இப்பாடலில் வரும் இடப்பெயர் ஒன்று தருக.
..................................................
04) வேடன் என்பதன் எதிர்பாற் சொல் யாது?
..................................................
05) நிகழ்கால அஃறிணை வினைச்சொல் ஒன்று தருக.
..................................................
06) "களத்து மேடு" என்பதிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது?
..................................................
07) "பாடித் திரியுது" என்பதைப் பிரித்து எழுதுக.
..................................................
08) விரைவு என்பதன் ஒத்தசொல் யாது?
..................................................
09) இப்பாடலில் வரும் இரட்டைக்கிளவிச்சொல் ஒன்று தருக.
..................................................
10) மறைதல் என்பதன் எதிர்ச்சொல் ஒன்று தருக.
..................................................

02. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.
1) முழுவதும்/ இரவு/ எனக்கு/ வரவில்லை/ நித்திரை
..................................................
2) வெளியாகின்றன/ இன்று/ பரீட்சைப்/ புலமைப்பரிசில்/ பெறுபேறுகள்
..................................................

03. இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.
1) மாலா பூக்களை வேகமாகப் .............................. (பரித்தாள் / பறித்தாள்)
2) விக்ரம் மாம்பழம் பறிக்க .............................. ஏறினான். (மரம் / மறம்)

04. பின்வரும் வாக்கியங்களில் உள்ள பிழைகளைத் திருத்தி வாக்கியத்தை மீண்டும் புள்ளிக்கோட்டில் எழுதுக.
1) வரதனும், காந்தனும் விளையாடச் சென்றான்.
..................................................
2) பசுக்கள் வயலில் மேய்ந்தது.
..................................................

05. அம்புக்குறி காட்டும் உறுப்புகளுக்குரிய ஆங்கிலச் சொற்களைப் புள்ளிக்கோடுகளில் எழுதுக.
1) ..................................................
2) ..................................................
3) ..................................................




06. பின்வரும் ஆங்கிலச்சொற்களின் கருத்தைத் தமிழில் தருக.
1) I am Playing - ..................................................
2) Take it - ..................................................

07. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தை தமிழில் தருக.
1) செப சனீ(ப்)ப கொஹொமத? - ..................................................
2) ஹொந்தின் இன்னவா. - ..................................................

பின்வரும் வினாக்களிற்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

08. மிகச்சிறிய விதைகளில் ஒன்று,
1) கோப்பி. 2) சோளம். 3) கடுகு. 4) அவரை.

09. எண்ணை பெற பயன்படும் வித்து,
1) மாம்வித்து. 2) தேங்காய். 3) பலாவித்து. 4) பனம் வித்து.

10. பின்வருவனவற்றுள் தானியம் அல்லாதது,
1) குரக்கன். 2) பயிற்றை. 3) சோளம். 4) நெல்.

11. புற்றுக்குள் இருப்பிடத்தை அமைத்துக்கொள்வது, குளி
1) பூனை. 2) ஆந்தை. 3) சிலந்தி. 4) பாம்பு.

12. சூழலுக்கு ஏற்ப தன் நிறத்தை மாற்றிக்கொள்வது,
1) அட்டை. 2) பச்சோந்தி. 3) மண்புழு. 4) நத்தை.

13. இது எப்பறவையின் நிழல்,
1) ஆந்தை.
2) கிளி.
3) மைனா.
4) செம்பகம்.



14. எமது ஆடையில் தீப்பிடித்தால் நாம் செய்யக்கூடாதது,
1) ஓடுதல்.
2) நிலத்தில் விழுந்து புரளுதல்.
3) ஆடையைக்கழற்றி எறிதல்.
4) ஈரச்சாக்கால் மூடுதல்.

15. இவ்வுபகரணத்தைப் பயன்படுத்துபவர்,



1) விவசாயி.
2) கட்டடத்தொழிலாளி.
3) மரவேலை செய்பவர்.
4) கொல்லர்.

16. சாரதி அனுமதிப்பத்திரம் பெறத் தேவையில்லாதவர்,
1) பாரவூர்தி ஓட்டுபவர்.
2) கார் ஓட்டுபவர்.
3) துவிச்சக்கரவண்டி ஓட்டுபவர்.
4) ஆட்டோ ஓட்டுபவர்.

17. ஒரு கிரிக்கட் அணியில் பங்குகொள்ளும் வீரர்கள் எத்தனை பேர்?
1) 6 பேர். 2) 7 பேர். 3) 9 பேர். 4) 11 பேர்.

18. பணத்தை வைப்புச்செய்ய நாம் செல்ல வேண்டியது.
1) வங்கி. 2) தபாலகம். 3) கம்பனி. 4) பிரதேச சபை.

19. இலங்கையின் தேசிய இலச்சினையில் இடம் பெறாதது,
1) வாளேந்தியசிங்கம். 2) அரசிலை.
3) கலசம். 4) சந்திர சூரியர்.

20. இலங்கையின் அதிகம் மழைவீழ்ச்சி கூடிய இடம்,
1) வட்டவலை. 2) கண்டி.
3) நுவரெலியா. 4) கொழும்பு.

★ கீழேயுள்ள அடைப்புக்குள் சில உபகரணங்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன.

**கத்தி, தட்டுப்பொல், சவல், பலகை வாள், பாக்குவெட்டி, கப்பி**

ஒவ்வொரு உருவிற்கும் பொருத்தமான பெயரைத் தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

21.


______________

22.

______________

23.

______________

24.

______________

★ கீழே உள்ள அடைப்புக்குள் சில விளையாட்டுக்களின் படங்கள் தரப்பட்டுள்ளன.

**கரம், கிரிக்கெற், சதுரங்கம், பூப்பந்து, எல்லே, ஹொக்கி**

ஒவ்வொரு உருவிற்கும் பொருத்தமான பெயரைத் தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

25.

______________

26.

______________

27.

______________

28.

______________

(தொடர்ச்சி 10 ஆம் பக்கம்)


**அன்பு மாணவர்களே!**

இப்பகுதியில் வெளியாகியுள்ள வினாத்தாள் - II இற்கான விடைக்குறிப்புகளுடன், அடுத்த மாதிரி வினாத்தாள் - I எதிர்வரும் வியாழக்கிழமை பிரசுரமாகும். இப்பகுதியில் தொடர்ச்சியாக வெளிவரும் வினாத் தாள்களை நேரங் கணித்துப் பயிற்சிசெய்து அடுத்த வருடம் நடைபெறவுள்ள அரச பரீட்சைக்கு [illegible] உங்கள் விடைகளை ஆசிரியரின் விடைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க மறவாதீர்கள்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ இல 29 தொடக்கம் 31 வரையான வினாக்களுக்கு புள்ளிக் கோட்டில் விடை எழுதுக.





29. வட்டத்தினுள் தரப்பட்ட மூன்று இலக்கங்களை பயன்படுத்தி ஆகக்கூடிய,
1) மிகப்பெரிய மூவிலக்க எண் யாது? .............................
2) மிகச்சிறிய மூவிலக்க எண் யாது? .............................

30. நிறந்திட்டப்பட்ட இப்பகுதி முழு உருவின் என்ன பங்கு என்பதைப் பின்னத்தில் தருக.




.............................................

31. இவ்வுருவின்,
1) பெயர் யாது? .............................
2) உச்சிகள் எத்தனை? .............................
3) விளிம்புகள் எத்தனை? .............................



★ பாலா, விமல், சலீம், பண்டார ஆகியோர் வைத்திருந்த மாபிள்களின் விவரம் கீழ்வரும் வரைபு காட்டுகின்றது.




★ வரைபை அடிப்படையாகக்கொண்டு 32 தொடக்கம் 36 வரையான வினாக்களுக்கு விடை தருக.

32. மிகக் கூடுதலாக மாபிள் வைத்திருப்பவர் யார்? .............................

33. பண்டாரவை விட விமல் எத்தனை மாபிள்களைக் கூடுதலாக வைத்திருந்தான்? .........


34. பாலாவைவிட சலீமிடம் எத்தனை மாபிள்கள் குறைவாக உள்ளன? .........

35. நால்வரும் வைத்திருக்கின்ற மொத்த மாபிள்கள் எத்தனை? ...........


36. ஒவ்வொருவரும் வைத்திருக்கும் மாபிள்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு பெயர்களை ஏறு வரிசைப்படுத்தி எழுதுக.

.............................................

37. இவ்வுருவை உருவாக்கப் பயன்பட்ட சிறிய சதுரமுகிக்கட்டைகள் எத்தனை?



.............................................

38. 


இவ்வுருவின்,
1) சுற்றளவு யாது?.............................
2) பரப்பளவு யாது?.............................

39. $48 \div 3 =$ .............................

40. நீர் ஒரு வைத்தியரானால் நாட்டு மக்களுக்கு ஆற்றும் சேவையினைக் கற்பனைசெய்து ஆறு வாக்கியத்தில் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் எழுவாய் பயனிலை தொடர்புபட்டதாக நான்கு சொற்களுக்கு குறையாமல் எழுதுக?

1).............................
2).............................
3).............................
4).............................
5).............................
6).............................


## வெளியீடு-01, பகுதி-1 இன் விடைக்குறிப்புகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01-2 | 02-4 | 03-1 | 04-3 | 05-3 | 06-2 | 07-3 | 08-3 |
| 09-2 | 10-4 | 11-2 | 12-3 | 13-2 | 14-3 | 15-1 | 16-4 |
| 17-1 | 18-4 | 19-3 | 20-2 | 21-3 | 22-1 | 23-4 | 24-3 |
| 25-2 | 26-1 | 27-3 | 28-3 | 29-1 | 30-2 | 31-4 | 32-3 |

33-1 34-3 35-கோகிலம். 36-திமிங்கலம். 37-மாலைப்பொழுது
38-செக்கச்சிவந்த வானத்தை. 39-வளி. 40-முத்து.

**மாணவர் கவனத்திற்கு!** (கடந்தவாரத் (06.11.08) திருத்தங்கள்)

- வினா இல. 10 இல் xxz என்பதை XxZ எனத் திருத்திக்கொள்ளவும்.
- வினா இல. 13 இல்முதலாவது உருவில் 5000g ஐ 500g எனத் திருத்திக்கொள்ளவும்.
- வினா இல. 14 இல் 3 ஆவது விடையை 600g எனத் திருத்திக்கொள்ளவும்.
- வினா இல. 17 இற்கான விடைகள்




- வினா இல. 26 இற்கான விடைகள்

| ← ↔ → | → → → | ← ← ← | ← ← → |

ஆசிரியர் :- திரு.து.திலீப்குமார்,
விவேகானந்தா கல்லூரி, கொழும்பு-13.

**அன்பு மாணவர்களே!**
இப்பகுதியில் உள்ள வினாக்கள் தொடர்பாக ஏதாவது சந்தேகங்கள், தெளிவின்மைகள் இருப்பின் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தெரிவித்தால், உரிய ஆசிரியர் மூலம் தெளிவுபடுத்தப்படும். 021-2229933 / 071-6850005 / 071-4273035

# முதலாம் ஆண்டு நினைவலைகள்.....



## அமரர் ஆறுமுகம் கோபால்

பிறப்பு: 01.03.1939 இறப்பு: 26.10.2007
திதி: 13.11.2008

உன்னத வாழ்வு கண்டீர்!
உத்தம இணக்கம் கொண்டீர்!
எண்ணுதற்கரிய- இனிய நற்செயல்கள் செய்தீர்!
மறந்திடோம்- உங்களை நாம்
மாறிடாத உங்கள் அன்பை.

'ஆறுமுகபவன்',
ஆதியாமலை,
உடுப்பிட்டி.

(79772)

குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில்
08.10.1908

விண்ணில்
11.10.2008



## அமரர் V.K. சுப்ரமணியம்

(முன்னாள் ஆசிரியர், யா/சோமஸ்கந்தா வித்தியாலயம், புத்தூர்-ஓய்வுபெற்ற S.R.D-முன்னாள் தலைவர், ஐக்கிய நாணயசங்க சமாசம்)

வடமராட்சி நவிண்டிலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வீ.க.சுப்ரமணியம் அவர்கள் கடந்த 11.10.2008 அன்று சிவபதமடைந்த வேளை அமரரின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் அனுதாபச் செய்தியை அனுப்பியோருக்கும் தொலைபேசி, தொலைநகல்கள் வாயிலாகத் துயர் பகிர்ந்தவர்களுக்கும் மற்றும் இன்னோரன்ன வழிகளிலும் பல்வேறு உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது ஆத்மார்த்தமான நன்றிகளைச் சமர்ப்பிப்பதுடன் இன்று 13.11.2008 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகளிலும் கலந்து கொள்வதுடன் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்.

'மலர் வாசா'
கரணவாய் மத்தி,
கரவெட்டி.

(சி/555292)

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அதிபர் சேவை தரம் 2:IIஇற்கு தெரிவானோருக்கு நியமனக் கடிதங்கள்

## 17ஆம் திகதி கொழும்பில் வைத்து வழங்கப்படும்

அச்சுவேலி,நவ.13

இலங்கை அதிபர் சேவை தரம் 2:IIஇற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு எதிர் வரும் 17ஆம் திகதி கொழும்பில் வைத்து வைபவ ரீதியாக நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன.

அடுத்தவருடம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இந்த நியமனம் செல்லுபடியாகும் வகையில் வழங்கப்படவுள்ளது.

இலங்கை அதிபர் சேவை தரம் 2:IIஇற்கு போட்டிப் பரீட்சை, நேர்முகப் பரீட்சைகள் மூலம் உயர் வெட்டுப்புள்ளி அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டவர்களின் சான்றிதழ்கள் கல்வி அமைச்சால் பரிசீலனை செய்யப்பட்டன. இதன் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம் 2005ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிவரை ஆசிரியர் சேவையில் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வுகள் தொடர்பான செயற்பாடுகளை 2008 டிசெம்பர் 31ஆம் திகதிவரை ஆசிரியர் சேவையில் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வுகள் தொடர்பான செயற்பாடுகளை 2008 டிசெம்பர் 31ஆம் திகதிவரை நடைமுறைப்படுத்துமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன் காரணமாக, ஆசிரியர் சேவை தொடர்பான பதவி உயர்வு நிபந்தனைகள் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய உயர்வுகளைப் பெறுவதற்கு வசதியாக அதிபர் சேவை 2:II நியமனம் அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து செல்லுபடியாகும் வகையில் வழங்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இருந்து நேர்முகப் பரீட்சைக்குக் கொழும்புக்குச் செல்லமுடியாது உள்ளோருக்கு யாழ்.மாவட்டத்தில் வைத்து சான்றிதழ்களைப் பரிசீலனை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும், அவர்களுக்கும் ஒரே காலப் பகுதியில் நியமனம் வழங்கப்படவிருப்பதாகவும் கல்வி அமைச்சின் மேலதிக செயலர் கே.முகமதுத் தம்பி தெரிவித்தார்.

தற்பொழுது இந்தப் பதவிக்கு நியமனம் நியமிக்கப்படவிருப்பவர்கள் இலங்கை ஆசிரியர் சேவையில் பெற்று வரும் சம்பளத்தை பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 2008/5 சுற்றறிக்கையின் பிரகாரம் தொடர்ந்து பெற உரித்துடையவராவர்.

எனினும் எதிர்காலத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய வருடாந்த சம்பள உயர்ச்சி 400 ரூபாவாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

தொடர்ந்து வருடாந்த சம்பள உயர்வைப் பெறுவதில் ஆசிரியர் சேவை மூலம் பெற்றுக்கொண்டு வரும் கூடிய சம்பளமும்; உரிய காலப்பகுதியில் வினைத்திறன் தடைதாண்டல் தொடர்பான நிபந்தனையும் தடையாக இருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

புதிதாக நியமனம் பெறுபவர்கள் தற்பொழுது பதில் அதிபர்களாக கடமை புரிபவர்களாக இருப்பின் தொடர்ந்து அதே பாடசாலையில் கடமை புரிவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது. ஆசிரியர்களாக இருந்து பதவி உயர்வு பெறுபவர்களுக்கு பொருத்தமான பாடசாலைகளை மாகாணக்கல்வி அமைச்சு வழங்கவுள்ளது. (203-11)

# தனியார் துறையினரின் சம்பளத்தையும் அதிகரிக்கக் கோருகின்றது ஜே.வி.பி.

கொழும்பு,நவ.13

தனியார்துறை ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க நாடாளுமன்றில் சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவருமாறு ஜே.வி.பி. நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் அரசிடம் வேண்டுகோள் விடுத்தது.

வரவு- செலவுத் திட்ட விவாதத்தில் பங்குகொண்டு உரையாற்றிய ஜே.வி.பியின் எம்.பி லால் காந்தவே இதைக் கூறினார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் என்று அரச ஊழியர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் இப்போது அவர்கள் ஏமாற்றப்பட்டுவிட்டனர்.

வெறும் 1000 ரூபாவை மாத்திரம் வாழ்வாதாரச் செலவின அதிகரிப்பாகக் காட்டி அரச ஊழியர்களை அரசு ஏமாற்றியுள்ளது.

ஆனால் தனியார்துறை ஊழியர்களினதும் பெருந்தோட்டத்துறையினரதும் சம்பள அதிகரிப்புப் பற்றி பேச்சுக் கிடையாது. தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தை எம்மால் அதிகரிக்க முடியாது என்று அரசு கூறுகின்றது.

உண்மைதான், ஆனால் தனியார் துறையில் ஆகக்குறைந்த சம்பளம் இவ்வளவு தொகையாகத்தான் இருக்கவேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் அரசிடமுண்டு.

அதை அரசு செய்யவேண்டும். தனியார் துறை ஊழியர்களின் ஆகக்குறைந்த சம்பளம் 5 ஆயிரம் ரூபாவாகவுள்ளது. அரசதுறை ஊழியர்களின் ஆகக் குறைந்த சம்பளம் இதைவிட அதிகமாகவுள்ளது.

அரச ஊழியர்களின் ஆகக்குறைந்த சம்பளத்துடன் தனியார்துறை ஊழியர்களின் ஆகக்குறைந்த சம்பளத்தை சமப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதற்கென தொழிற்சங்கங்களுடன் பேசி சட்டமூலம் ஒன்றை நாடாளுமன்றிற்குக் கொண்டுவந்து அதனூடாக தனியார் துறை ஊழியர்களின் ஆகக்குறைந்த சம்பளத்தை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (சி)

## மானிப்பாய் வைத்தியசாலையை வளமாக்க மரக்கன்றுகள்

நவாலி,நவ.13

ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலையை வளமாக்கும் நோக்குடன் அப்பிரதேச மக்கள் தமது பிள்ளைகளின் பிறந்த நாள் ஞாபகார்த்தமாக மரக்கன்றுகளை வைத்தியசாலை அபிவிருத்தி சபையினரிடம் வழங்கி வருகின்றனர்.

ஏனையோரும் இவ்வாறு மரக்கன்றுகளை வழங்கி வைத்தியசாலையை வளமாக்க முன்வருமாறு அபிவிருத்திச் சபையினர் கேட்டுள்ளனர். (203-100)

## வருமான மேற்பார்வையாளருக்கு பதவி உயர்வு

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் பத்து வருட சேவையினைப் பூர்த்திசெய்த 7 வருமான மேற்பார்வையாளர்கள் வகுப்புII இற்குப் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

கடந்த 2006 டிசெம்பர் 26ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வண்ணம் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

வருமான மேற்பார்வையாளர் சேவையில் 25 வருட சேவையினைப் பூர்த்தி செய்த இருவருக்கு வகுப்பு Iஇற்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. (203-207)

## கரையாம்பிட்டி மயான மதில் உடைத்துக் கல் திருட்டு

நவாலி,நவ.13

ஆனைக்கோட்டை கரையம்பிட்டி இந்து மயானத்தைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த மதிலின் ஒரு பகுதியை உடைத்து அதன் கற்கள் திருடப்பட்டுள்ளன.

இதனால் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மயான அபிவிருத்திச் சபையினர் தெரிவித்துள்ளனர். (203-100)

## 25 வருடத்தைப் பூர்த்திசெய்த வணிகர்கள் கௌரவிப்பு


யாழ்ப்பாணம், நவ.13

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தில் அங்கத்துவம் பெற்று 25 வருடத்தினைப் பூர்த்திசெய்த வணிகர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறவுள்ள மன்றத்தின் 30ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கௌரவிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மன்றத்தில் அங்கத்துவம் பெற்று 25 வருடத்தினைப் பூர்த்தி செய்தவர்களின் விவரங்கள் மான்றத்தினால் திரட்டப்படுகின்றன.

இவர்களை நாளை மறுதினம் சனிக்கிழமைக்கு முன்னர் மன்றத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (203-207)



சண்டிலிப்பாய் பிரதேச செயலகமும் முதியோர் சங்கங்களும் இணைந்து நடத்திய முதியோர் தின விழாவில் 62 வயதுடைய பொன்னுத்துரை கணேசரத்தினம் என்பவர் மோட்டார் சைக்கிளை கயிற்றில் கட்டி பல்லால் கடித்துத் தாக்கி வைத்திருந்து சாதனை புரிவதைப் படத்தில் காணலாம். (படம்: நவாலிச் செய்தியாளர்)

# கைதடி விவசாயப் போதனாசிரியர் பிரிவில் சிறந்த உற்பத்தியாளர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ்.விவசாய மாவட்டத்தில் விவசாய போதனாசிரியர் பிரிவுகளில் சிறந்த விவசாய உற்பத்தியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டு வருகின்றனர்.

நெல் மற்றும் விதைநெல் உற்பத்தியாளர்கள், சோளன், நிலக்கடலை, குரக்கன் செய்கையாளர்கள் சேதனப் பசளை, ஒருங்கிணைந்த பண்ணையாளர்களே இவ்வாறு ஊக்குவிப்புக் கௌரவத்தைப் பெற்று வருகின்றனர்.

இந்தவகையில் கைதடி விவசாயப் பகுதியில் இருந்தும் 24 விவசாயிகள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கைதடி பராசக்தி முன்பள்ளி மண்டபத்தில் பிரிவு விவசாய போதனாசிரியர் ஆ.சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

விவசாய விழாவில் பிரதம விருந்தினராகத் தென்னை அபிவிருத்திச் சபை பிராந்திய முகாமையாளர் வ.மகாலிங்கம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட விவசாய விரிவாக்கற் பணிப்பாளர் சி.சிவகுமார், தென்மராட்சி உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ரஞ்சினி இரகுநாதன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக அந்தப் பகுதி கமநல அபிவிருத்திப் பெரும்பாக உத்தியோகத்தர் வை.கோபாலகிருஷ்ணன் மற்றும் சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர் அ.உதயகுமார் ஆகியோரும் கலந்து கொள்வர்.

முதல் மூன்று இடங்களுக்குத் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டோர் விவரம்:

***நெல் உற்பத்தியாளர்:*** கந்தர் சந்திரன் - நாவற்குழி தெற்கு, கந்தையா மனோகரன் - கைதடி, நாவற்குழி, வீரகத்தி சிவசுப்பிரமணியம் - கைதடி தெற்கு.

***விதைநெல் உற்பத்தியாளர்:*** தில்லைநாதர் தங்கவேலு - நாவற்குழி கிழக்கு, கறுத்தான் செல்வராசா - கைதடி நாவற்குழி, செல்லையா லோகீஸ்வரன் - மட்டுவில் தெற்கு.

***சேதனப் பண்ணையாளர்:*** வல்லிபுரம் மகாலிங்கம் - சந்திரபுரம், வேலன் அருமைராசா - கைதடி கிழக்கு, ஆறுமுகம் இராஜரட்ணம் - கைதடி கிழக்கு.

***ஒருங்கிணைந்த பண்ணையாளர்:*** சின்னத்தம்பி சிவராசா - சந்திரபுரம், நாகலிங்கம் கனகேஸ்வரன் - கைதடி, சின்னத்துரை சிவனேஸ்வரன் - மட்டுவில்.

***சிறந்த பெண் தலைமைத்துவ விவசாயம்:*** நடராசா பரமேஸ்வரி - கைதடி மத்தி, கிருஸ்ணன் சின்னம்மா - கைதடி கிழக்கு, குணரெத்தினம் சிவநாயகி - சந்திரபுரம்.

***சிறந்த சோளச்செய்கையாளர்:*** சிவகுரு பரமசாமி - கைதடி தெற்கு, சிவலிங்கம் நித்தியானந்தன் - கைதடி மேற்கு, தனபாலசிங்கம் புஸ்பராணி - கைதடி மேற்கு.

***நிலக்கடலை உற்பத்தியாளர்:*** சின்னத்தம்பி திருநாவுக்கரசு - கைதடி மத்தி, சிவலிங்கம் கஜேந்திரன் - கைதடி வடக்கு, வேலுப்பிள்ளை பாண்டியர் - கைதடி தெற்கு.

***குரக்கன் செய்கையாளர்:*** சரவணை சுப்பிரமணியம் - கைதடி வடக்கு, சேதுகாவலர் செல்லத்துரை - கைதடி கிழக்கு, முருகேசன் கந்தசாமி - கைதடி தெற்கு.

நிகழ்வில் விவசாய தொழில்நுட்ப தகவல் காட்சிப்படுத்தலும் சோளவிதை, நிலக்கடலை விதைப் பண்ணைக் கண்காட்சியும் இடம்பெறும். (203-302)

# அந்தமானில் நாளை வெள்ளிக்கிழமை ஈழத்தமிழருக்கு ஆதரவாகப் பேரணி

சென்னை,நவ.13

ஈழத் தமிழர்கள் மீதான இலங்கை இராணுவத்தின் மூர்க்கத்தனமான தாக்குதல்களைக் கண்டித்தும், உலகத் தமிழர்களின் ஒற்றுமையை வலியுறுத்தியும் நாளை வெள்ளிக்கிழமை அந்தமான் தீவில் மாபெரும் கண்டனப் பேரணியும் மற்றும் பொதுக்கூட்டம் நடத்தப்படுகின்றன.

இதுதொடர்பாக, அந்தமான் தமிழர் சங்கம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையின் விவரம் வருமாறு-

இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை மற்றும் போரை நிறுத்துவதற்கு மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

கச்சதீவை மீட்பதே தமிழக மீனவர்களின் வாழ்வதார உரிமைக்கும், அவர் தம் உயிருக்கும் பாதுகாப்பு என்பதால் இது தொடர்பாக மத்திய அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பல்லாண்டு காலமாக தமிழகத்தில் அகதிகளாக வந்து துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழர்களை அந்தமான்தீவில் குடியமர்த்த மத்திய, மாநில அரசு ஆவன செய்யவேண்டும் - என்றுள்ளது. (சி)

## மனிதப் பிறப்பின் மேன்மை

இந்தப் பிரபஞ்சத்தில் இலட்சக்கணக்கான ஜீவராசிகள் உள்ளன. ஆனால் இவைகளில் மனிதனே மிக உயர்ந்தவனும், உன்னதமானவனும் ஆவான். அவன் செல்வத்தை இழந்தால் அதைத் திரும்பப்பெற வாய்ப்புண்டு; நண்பனை இழந்தால் இன்னொரு நண்பனை அடைய வாய்ப்பு உண்டு; மனைவியை இழந்தாலும், திருமணம் மறுபடி செய்துகொண்டு, இன்னொரு மனைவி பெற வாய்ப்பு உண்டு. அவனுக்கு உரிய நிலத்தை இழந்தாலும், இன்னொரு நிலத்தை அவனால் பெற இயலும். ஆனால் அவன் உடலை இழந்தாலோ, மறுபடி அவனால் அதைப்பெற இயலாது.



கிடைத்தற்கரிய மனித வாழ்க்கையின் உயர்ந்த மதிப்பை மனிதன் அறியாது, பல வழிகளில் அதை முறைகேடாகப் பயன்படுத்துகிறான். ஒரு இரவு கழிந்தால், அது திரும்ப வாராது. கடலில் சங்கமம் ஆன நதி, திரும்ப வராது. பழத்தை உண்ட பின்னர் அதை மறுபடியும் பழைய வடிவத்தில் பெற இயலாது.

சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1980ஆம் ஆண்டு பிறந்து, தற்பொழுது தனியார் நிறுவனத்தில் எக்கவுண்டனாகப் பணிபுரியும் மணமகளுக்கு அரசாங்கத் தொழில் புரியும் மணமகன் (பட்டதாரி) அல்லது வெளிநாட்டு மணமகன் தேவை.

தொடர்பு: 060 221 3352
077 612 2351

(79655)

## நல்லூரில் ஆறுமுக நாவலர் குருபூசை

வலி.வடக்கு, நவ.13

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் குருபூசை எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில், தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் இடம்பெற வுள்ளது.

'நிகழ்வில் நாவலர் பெருமான் ஏற்படுத்திய மறுமலர்ச்சி' என்னும் பொருளில் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை சிறப்புரை நிகழ்த்தவுள்ளார். 'நாவலர் வழியில் சைவம்' என்னும் பொருளில் யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சுகந்தினி ஸ்ரீ முரளிதரன் உரையாற்றவுள்ளார். துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் பண்ணிசை நிகழ்வும் இடம்பெறும். (203-86)

## கண்ணீர் அஞ்சலி



உதயன் பணியாளர்
திருமதி மாலினி இரவீந்திரன்
அவர்களின் அன்பு மாமி
திருமதி சுப்பிரமணியம்
மங்கையர்க்கரசி
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உதயன் பணியாளர்கள்.

(4/55298)

## நீங்காத நினைவுநாள் 6ஆம் மாதம்





| அமரர் இராசையா முருகேசு | | திருமதி முருகேசு கமலாதேவி |
|---|---|---|
| 01.07.1939 | மண்ணில் | 19.09.1941 |
| 20.05.2008 | விண்ணில் | 04.05.2008 |

இணைபிரியாத் தெய்வங்களே! நீங்கள் எம்மை பிரிந்து மாதங்கள் ஆறு ஆனதுவோ நம்பமுடியவில்லை. ஆனாலும் உடைந்த உள்ளங்களுடன் உங்கள் கனவுகளை நினைவாக்க உங்கள் நினைவுகளுடன் உறுதியாக உள்ளோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆத்தியடி வீதி,
கச்சாய் வீதி, கொடிகாமம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தம்பிப்பிள்ளை (சீனியர்)
செல்லாச்சி
மலர்வு: 10 ✱ 04 ✱ 1924
உதிர்வு: 14 ✱ 10 ✱ 2008

பண்புடனும் பாசத்துடனும்
எமை வளர்த்து ஆளாக்கிய
அம்மாவே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

இன்று (13.11.2008) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கலைநகர்,
அளவெட்டி தெற்கு.

பிரிவால் துயருறும்: த.ரவீந்திரன்,
த.துரைசிங்கம் (ரிங்கர் - இந்தியா).

(79676)

## துயர் பகிர்கின்றோம்

05.11.2008 அன்று அமரத்துவமடைந்த
எமது பாடசாலை அதிபரின் அன்பு மைத்துனர்

### இலங்கையர் குகநாதன்

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்.
கைதடி.

(79788)

## 24ஆவது ஜனன நாளில் நெஞ்சகலா நினைவுகள்



### அமரர் பாலசுப்பிரமணியம் சனாதன்

13.11.2008

உயிருடன் கலந்து உணர்வுடன் பிணைந்து
இதயத்தில் நிறைந்த சனாதா
இமயம் புரண்டு இதயம் பிளந்தாலும்
உன் நினைவுகள் நீங்கிடுமோ!

(79784)

'கமலாம்பிகை பவனம்',
இணுவில் மேற்கு,
இணுவில்.

உனது பாசவலையில் சிக்கித் தவிக்கும்:
அப்பா, அம்மா,
பெரியண்ணா, [illegible]
[illegible]

## அன்புத் தெய்வத்தின் 18ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 15 04 1904

அரன் அடியில் 30 10 1990



### அமரர் வேலாயுதர் சிதம்பரப்பிள்ளை

திதி: அபரபக்க பிரதமை (13.11.2008)

"அப்பாவே எங்கள் அழியாப் பெருநிதியே
ஆண்டு பல சென்றாலும் அகமதிலே வாழுகின்றீர்
இல்லறமாம் சோலையிலே எழில்நிறைந்த மாமலரே
இயலும் வரை உழைத்து ஏற்றமுடன் திகழ்ந்தீரே!

மருதநிலம் சூழ்ந்த மாண்புமிக்க ஊரினிலே
மாறா இளமையுடன் மனம் மகிழ்ந்து பணிபுரிந்தீர்
கல்வியறிவுள்ளோராய் காலமெல்லாம் ஒளிவீச
களிப்புடனே உலாவி வந்தீர் கருணைமிக்க அப்பாவே!

பொல்லா உலகமதை புரிந்தே மதிப்பளித்தீர்
போற்றுகிறோம் பொற்பாதம் பூவுலகம் உள்ளவரை
கடமையுணர்வுடனே கருமங்கள் ஆற்றிடவே
கண்ணியமாய் செயலாற்றி கனிவுடனே வழிசமைத்தீர்

தந்தையெனும் தானத்தில் தளராது சேவை செய்தீர்
தவிக்கிறோம் மக்களெல்லாம் தங்கள் நினைவாலே
காலச் சுழற்சியினால் கணப்பொழுதில் மறைந்தீரே
கண்மணியே உங்களை நாம் காண்போமா இப்பிறப்பில்?"

(79767)

குடியிருப்பு,
மந்துவில் வடக்கு, கொடிகாமம்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா/தர)ப் பரீட்சை 2008 - டிசெம்பர்
# கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள நேர அட்டவணை

| திகதி | முற்பகல் | நேரம் | பிற்பகல் | நேரம் |
|---|---|---|---|---|
| 2008 டிசெம்பர் 08 திங்கள் | 46 ஆங்கில இலக்கியம்<br>47 சிங்கள இலக்கியம்<br>48 தமிழ் இலக்கியம்<br>49 அரபு இலக்கியம் | 08.30 - 11.30 | 70 வரலாறு பகுதி I, II | 12.30 - 15.30 |
| 2008 டிசெம்பர் 10 புதன் | 21 சிங்கள மொழியும் இலக்கியமும்<br>22 தமிழ் மொழியும் இலக்கியமும் } பகுதி I, II | 08.30 - 11.30 | 21 சிங்கள மொழியும் இலக்கியமும்<br>22 தமிழ் மொழியும் இலக்கியமும் } பகுதி III | 12.30 - 14.30 |
| 2008 டிசெம்பர் 11 வியாழன் | 31ஆங்கில மொழி } பகுதி I<br>பகுதி II | 8.30 - 09.30<br>09.45 - 11.45 | 11 பௌத்த சமயம்<br>12 சைவ சமயம்<br>13 இந்து சமயம்<br>14 கத்தோலிக்கத் திருமுறை<br>15 கிறிஸ்தவம்<br>16 இஸ்லாம் } பகுதி I, II | 12.45 - 15.45 |
| 2008 டிசெம்பர் 13 சனி | 32 கணிதம் பகுதி I<br>32 கணிதம் பகுதி II | 08.30 - 09.30<br>10.30 - 13.30 | | |
| 2008 டிசெம்பர் 15 திங்கள் | 62 சமஸ்கிருதம்<br>63 அரபு<br>67 இலத்தின்<br>68 பிரெஞ்சு<br>69 மலாய்<br>75 ஹிந்தி<br>76 ஜப்பான்<br>77 ஜேர்மன்<br>73 சுகாதாரமும் உடற்கல்வியும் பகுதி I, II | 08.30 - 11.30 | 71 புவியியல் பகுதி I, II | 12.30 - 15.30 |
| 2008 டிசெம்பர் 16 செவ்வாய் | 43 சமூகக்கல்வியும் வரலாறும் பகுதி II | 08.30 - 11.30 | 43 சமூகக்கல்வியும் வரலாறும் பகுதி I<br>92, 93, 94 தட்டெழுத்து தொகுதி I | 12.30 - 13.30<br>14.00 - 16.00 |
| 2008 டிசெம்பர் 17 புதன் | 34 விஞ்ஞானமும் தொழிநுட்பவியலும் பகுதி II | 08.30 - 11.30 | 34 விஞ்ஞானமும் தொழிநுட்பவியலும் பகுதி I<br>51 சித்திரக்கலை பகுதி II | 12.30 - 13.30<br>14.30 - 16.30 |
| 2008 டிசெம்பர் 18 வியாழன் | தொழிநுட்ப பாடம்<br>35, 36, 37, 38, 39, 40<br>78, 79, 80, 87, 88,<br>89, 90, 95, 96, 97, 98, 99 } பகுதி I, II<br>92, 93, 94 சுருக்கெழுத்து | 08.30 - 11.30<br>09 முதல் | தொழிநுட்பப் பாடம்<br>72 அபிவிருத்திக் கல்வி பகுதி I, II<br>92, 93, 94 தட்டெழுத்து தொகுதி II | 12.30 - 15.30<br>12.30 - 14.30 |
| 2008 டிசெம்பர் 19 வெள்ளி | அழகியற் பாடங்கள்<br>51 சித்திரம் } பகுதி I<br>பகுதி III<br>52 நடனம் (சிங்களம்)<br>53 பரத நாட்டியம்<br>54 சங்கீதம் (சிங்களம் / கீழைத்தேயம்)<br>55 சங்கீதம் (கர்நாடகம்)<br>56 சங்கீதம் (மேலைத்தேயம்)<br>57 நாடகமும் அரங்கியலும் } பகுதி I, II | 08.30 - 09.30<br>09.45 - 11.45<br>08.30 - 11.30 | 74 தொடர்பாடல் ஊடகக் கல்வி பகுதி I, II | 14.00 - 17.00 |
| 2008 டிசெம்பர் 20 சனி | 81 வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் பகுதி II | 08.30 - 11.30 | 61 பாளி<br>இரண்டாம் மொழி<br>64 சிங்களம்<br>65 தமிழ் } பகுதி I, II<br>81 வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் பகுதி I | 12.30 - 15.30<br>12.30 - 15.30<br>12.30 - 15.30 |

| திகதி | முற்பகல் | நேரம் | பிற்பகல் | நேரம் |
|---|---|---|---|---|
| 2008 டிசெம்பர் 08 திங்கள் | 46 இலக்கிய நயம் ஆங்கிலம்<br>47 இலக்கிய நயம் சிங்களம்<br>48 இலக்கிய நயம் தமிழ்<br>49 இலக்கிய நயம் அரபு | 08.30 - 11.30 | 62 குடியுரிமைக் கல்வி மற்றும் சமூக நிர்வாகம் பகுதி I, II | 12.30 - 15.30 |
| 2008 டிசெம்பர் 10 புதன் | 21 சிங்கள மொழியும் இலக்கியமும்<br>22 தமிழ் மொழியும் இலக்கியமும் } பகுதி I, II | 08.30 - 11.30 | 21 சிங்கள மொழியும் இலக்கியமும்<br>22 தமிழ் மொழியும் இலக்கியமும் } பகுதி III | 12.30 - 14.30 |
| 2008 டிசெம்பர் 11 வியாழன் | 31ஆங்கில மொழி } பகுதி I<br>பகுதி II | 08.30 - 09.30<br>09.45 - 11.45 | 11 பௌத்தம்<br>12 சைவ நெறி<br>14 கத்தோலிக்க சமயம்<br>15 கிறிஸ்தவம்<br>16 இஸ்லாம் } பகுதி I, II | 12.45 - 15.45 |
| 2008 டிசெம்பர் 13 சனி | 32 கணிதம் பகுதி I<br>32 கணிதம் பகுதி II | 08.30 - 09.30<br>11.30 - 13.30 | | |
| 2008 டிசெம்பர் 15 திங்கள் | 67 சமஸ்கிருதம்<br>68 பிரெஞ்சு<br>69 ஜேர்மன்<br>70 ஹிந்தி<br>71 ஜப்பான்<br>72 அரபு<br>86 சுகாதாரமும் உடற்கல்வியும் பகுதி I,II | 08.30 - 11.30<br>08.30 - 11.30 | 61 புவியியல்<br>63 முயற்சியாண்மைக் கற்கை } பகுதி I, II | 12.30 - 15.30 |
| 2008 டிசெம்பர் 16 செவ்வாய் | 33 வரலாறு பகுதி II | 08.30 - 11.30 | 33 வரலாறு பகுதிI | 12.30 - 13.30 |
| 2008 டிசெம்பர் 17 புதன் | 34 விஞ்ஞானம் பகுதி II | 08.30 - 11.30 | 34 விஞ்ஞானம் பகுதிI<br>43 சித்திரம் பகுதி II | 12.30 - 13.30<br>14.30 - 16.30 |
| 2008 டிசெம்பர் 18 வியாழன் | 80 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியல்<br>81 விவசாயமும் உணவு தொழிநுட்பவியலும்<br>82 கடற்றொழிலும் உணவு தொழிநுட்பவியலும்<br>83 ஆக்கத்திறன் தொழிநுட்பவியல்<br>84 நுண்கலை<br>85 மனைப்பொருளியல் } பகுதி I,II | 08.30 - 11.30 | 92 மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (சிங்களம்)<br>93 மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (தமிழ்)<br>94 மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (ஆங்கிலம்) } பகுதி I,II | 12.30 - 15.30 |
| 2008 டிசெம்பர் 19 வெள்ளி | 43 சித்திரம் } பகுதி I, பகுதி III<br>40 சங்கீதம் (கீழைத்தேயம்)<br>41 சங்கீதம் (மேலைத்தேயம்)<br>42 சங்கீதம் (கர்நாடகம்)<br>44 நடனம் (சுதேச)<br>45 நடனம் (பரதம்)<br>50 நாடகமும் அரங்கியலும் (சிங்களம்)<br>51 நாடகமும் அரங்கியலும் (தமிழ்)<br>52 நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்) } பகுதி I, பகுதி III | 08.30 - 09.30<br>09.45 - 11.45<br>08.30 - 11.30 | 87 தொடர்பாடல் ஊடகக் கற்கை பகுதி I,II | 14.00 - 17.00 |
| 2008டிசெம் பர் 20 சனி | 60 வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் பகுதி II | 08.30 - 11.30 | 60 வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் பகுதி I.<br>64 இரண்டாம் மொழி (சிங்களம்) பகுதி I,II<br>65 இரண்டாம் மொழி (தமிழ்).66பாளி | 12.30-13.30<br>12.30-15.30<br>12.30-15.30 |

# மமதையில் உருவான அரசமைப்பு உள்ள இலங்கையை ஜனநாயக சோஷலிசக் குடியரசு என்று எப்படிக் கூறமுடியும்?

ஸ்ரீலங்கா ஜனநாயக சோஷலிசக் குடியரசு என்று சொல்லப்படுகின்ற இலங்கையின் 6 ஆவது நாடாளுமன்றத்தின் 2008ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கான அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை இச்சபையிலே முன் வைக்கப்பட்டுள்ளது. இந்த அவசரகாலச் சட்டமானது பொதுமக்கள் பாதுகாப்புப் பிரகடனம் என்று கூறப்பட்டாலும் இது பொதுமக்களைப் பாதுகாக்கின்ற சட்டமல்ல. மாறாக அரசையும் அரச அடிவருடிகளையும் பாதுகாக்கின்ற சட்டமாகவும், குறிப்பாக இந்த நாட்டின் பூர்வீகக் குடிகளான தமிழ் மக்களின் குரல்களை நசுக்குகின்ற - உரிமைப் போராட்டங்களை அழிக்கின்ற - பயங்கரமான சட்டமாகவே கருதித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்கள் எதிர்த்து வாக்களித்து வந்திருக்கிறோம். இன்றும் எதிர்த்து வாக்களிக்கக் காத்திருக்கிறோம்.

சபாநாயகர் அவர்களே! இந்த அவசரகாலச் சட்டப் பிரேரணையை இச்சபையிலே சமர்ப்பித்து பிரதம மந்திரி பேசும்போது, உண்மைக்கு மாறான, யதார்த்தத்திற்குப் புறம்பான கருத்துகளைக் கூறியுள்ளார். அதைத் தொடர்ந்து சபையில் உரையாற்றிய அரச சார்பு உறுப்பினர்களும் உரையாற்றும் போது ஒத்த கருத்துக்களையே வரிபிசகாது கூறுகிறார்கள். இவற்றிலிருந்து நாம் ஒன்றை மட்டும் புரிந்து கொள்கிறோம். அரசு தற்போது சந்தித்துள்ள அரசியல் இராணுவப் பொருளாதார இராஜ ரீதியிலான தோல்விகளை, பின்னடைவுகளை மக்கள் மத்தியிலிருந்து மூடி மறைத்து மக்களைத் திசை திருப்பும் நோக்கமாகவே இந்தப் பேச்சுகள் அமைந்துள்ளன.

ஆனலும், மக்கள் எதிர்பார்க்கின்ற சமாதானம், இந்த உலகம் எதிர்பார்க்கின்ற பேச்சுகளின் ஊடான நிரந்தரத் தீர்வு இந்தப் பிறவியிலும் கிட்டப்போவதில்லை. யுத்தம்தான் இறுதியான-உறுதியான முடிவென்றால், இந்த நாடு அழிவதைத் தவிர வேறு வழியில்லை. இதைத்தான் அரசியல்வாதிகளான நீங்கள் விரும்புகிறீர்களா? தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில், வாழ்ந்தால் உரிமையுடன் வாழவேண்டும். மடிந்தால் பெருமையுடன் மடியவேண்டும். இதுதான் எங்கள் முடிவு.

சபாநாயகர் அவர்களே! இன்றைய உலகில் மோசடிகள், ஊழல்கள், கொலைகள், கொள்ளைகள், பாலியல் வல்லுறவுகள், மனித உரிமை மீறல்கள், ஆள்கடத்தல்கள், கப்பம் கோரல், காணாமல் போதல்கள் போன்றன அற்ற சமுதாயத்தைக் கொண்ட அரசையே மக்கள் ஒரு பரிபூரண அரசாக, ஜனநாயக சோஷலிசக் குடியரசாகக் கொள்ள முடியும். ஆனால், 1972 ஆம் ஆண்டு முதல் தன்னைத்தானே ஸ்ரீலங்கா ஜனநாயக சோஷலிசக் குடியரசாக பெயர் மாற்றிக் கொண்டு, இலங்கைத் தீவு சிங்கள-பௌத்த மக்களுக்கே சொந்தமானது. இத்தீவில் சிங்கள - பௌத்த அடையாளங்கள், விழுமியங்கள் பாதுகாக்கப்படவேண்டும் - வளர்க்கப்படவேண்டும் என்ற மமதையில் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பும், அதை நிறைவேற்றுகின்ற இந்த நாடாளுமன்ற நடைமுறைகளும் இருக்கும் வரைக்கும் இந்த நாட்டை அல்லது இந்த நாட்டை ஆளுகின்ற அரசை ஜனநாயக சோஷலிசக் குடியரசு என்று எப்படிக் கூறமுடியும்?

இலங்கைத் தீவு போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரின் காலனித்துவ ஆட்சியின் பின்னர் 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது. அன்றிலிருந்து குடியுரிமைச் சட்டம், காணி, நீர்ப்பாசனச் சட்டம், கல்வி தரப்படுத்தல் சட்டம், ஒரு மொழிச் சட்டம் போன்ற அநீதிகளால் கொடுமைகள், கொலைகள், இன அழிப்பு நடவடிக்கைகள், மனித உரிமை மீறல்கள் அதிகரித்து தற்போது இங்கு நல்லாட்சி என்பது அறவே இல்லாமல் போனது.

இதற்கு இந்த அவசரகாலச் சட்டமும், 1979 ஆம் ஆண்டு முதல் அமுலில் இருக்கின்ற பயங்கரவாதச் சட்டமுமே காரணமாகும். எப்போது இந்தச் சட்டங்கள் மக்களால் தூக்கி எறியப்படுகின்றதோ அப்போதுதான் இந்த நாட்டில் உண்மையான ஜனநாயக சோஷலிசக் குடியாட்சி நிலவும். எல்லா மக்களும் நிம்மதியாகவும், சந்தோஷமாகவும் வாழுவார்கள்.

இன்று தமிழ் மக்களின் தாயக பூமியான வடகிழக்கு பெரும் நிலப்பரப்பில் இராணுவ அழுத்தம், பொருளாதார நெருக்குதல், போக்குவரத்துத் தடை என மும்முனைகளில் எமது மக்கள் மீது ஸ்ரீலங்கா அரசு யுத்தத்தை என்றுமில்லாதவாறு அதி தீவிரமாக ஏவி விட்டிருக்கிறது. வகை தொகையற்ற கொலைகள், கைதுகள், சிறைவைப்புகள், சித்திரவதைகள், பாலியல் வல்லுறவுகள், காணாமல் போதல்கள், எறிகணை வீச்சுகள், விமானக் குண்டுவீச்சுகள் எனத் தொடர்ச்சியான போர் நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.

மக்கள் வாழ்விடங்கள் இராணுவ அரண்களினாலும், படை நிலைகளாலும் நிரப்பப்பட்டிருக்கின்றன. மறுபுறத்தில் உணவுத் தடை, பொருளாதாரத்தடை, போக்குவரத்துத் தடை, விவசாயத்தடை, மீன்பிடித்தடை, எரிபொருள்தடை, கல்வித்தடை, சுயதொழில் தடை என்று எம்மக்கள் உயிரோடு வாட்டி வதைக்கப்படுகிறார்கள். அரச படை நடவடிக்கைகளினால் இன்றுவரை ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். ஒரு லட்சத்து 25 ஆயிரத்து க்கும் மேற்பட்ட பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சமயத்தலங்களும் பாடசாலைகளும் குண்டு வீச்சினால் நாசமாக்கப்பட்டுள்ளன. 8 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வடக்கு, கிழக்கில் உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ளனர். 5 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர். அதே வேளை, தமிழ்ப் பத்திரிகையாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கல்விமான்கள், மனிதாபிமான ஊழியர்கள், வர்த்தகர்கள், மதகுருமார்கள் போன்ற பலர் காணாமல்போயும், கொலை செய்யப்பட்டு முள்ளனர்.

### அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்டுள்ள வன்னி மக்கள்

வன்னிப் பிரதேச மக்களைப் பொறுத்த மட்டில் முற்றுமுழுதான அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைச் சார்ந்த மாந்தை கிழக்கு, துணுக்காய், மல் லாவி, பூநகரி, முழங் காவில், அக்கராயன், கிளிநொச்சி, பரந்தன் என இரண்டரை லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தற்போதைய யுத்தத்தினால் சொந்த வீடுகளிலிருந்து குடிபெயர்க்கப்பட்டுள்ளார்கள். இதைவிட ஏற்கனவே யுத்தம் மற்றும் இயற்கையின் அனர்த்தம், ஆழிப்பேரலை காரணமாக ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாக்கப்பட்டு மீள் குடியேற்றம் எதுவுமின்றி நடுத் தெருவில் நிற்கின்றனர். வன்னிப் பெரு நிலப்பரப்பில் மொத்த சனத்தொகையில் 75 வீதமான மக்கள் அகதிகளாக்கப்பட்டும், நோயும் பிணியுமாக, பசியும் பட்டினியும் [illegible] முகாம்களிலும், தற்காலிக கொட்டகைகளிலும் மரங்களின் நிழல்களிலும், வீதியோரங் களிலும், பொது இடங்களிலும் வாழுகின்றார்கள். இவர்கள் அடிப்படைவசதிகளின்றி சுகாதார சீர்கேடுகளுக்கு முகம் கொடுப்பதோடு மாரிமழை, பாம்புக்கடி, நுளம்புக்கடி போன்ற துன்பங்களுக்கும், அதனால் ஏற்படுகின்ற பயங்கர நோய்களுக்கும்



உள்ளாகி - உரிய தடுப்பு மருத் துவவசதிகளின்றி பெரும் அவதிப்படுகின்றனர். பொதுவாக எமது மக்கள் யுத்தப் பீதியினாலும், நோய்ப் பீதியினாலும் தினம் தினம் மரணத்திற்குள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அதேவேளை,

**அவசரகாலச் சட்டம் மீதான விவாதத்தில் கூட்டமைப்பு எம்.பி. சிறில்**

450 பேர் பாம்புக் கடியாலும், 350 பேர் விசர்நாய்க் கடியாலும், 200 இற்கும் மேற்பட்டோர் மலேரியா நோயினாலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

சபாநாயகர் அவர்களே! வன்னிப் பிரதேசத்தில் இடம்பெற்றுவரும் யுத்தம், மாணவர்களின் கல்வியை வெகுவாகப் பாதித்துள்ளது. அங்கு 190 பாடசாலைகளைச் சேர்ந்த 5 ஆயிரம் மாணவர்கள் இடம்பெயர்ந்துள்ளார்கள். அவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளது. இடம்பெயர்வால் வளங்களை இழந்த மேற்படி பாடசாலைகள் மீண்டும் தற்காலிகமாக இயங்கப் பொதுவாக 20 ஆயிரம் தற்காலிக தங்குமிடங்கள், 300 மலசலகூடங்கள், 3 லட்சம் அப்பியாசக் கொப்பிகள் மற்றும் ஏனைய பாடசாலை உபகரணங்களும், வகுப்பறை களும் தேவை. இதனைக் கல்வியமைச்சரின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றேன்.

குழந்தைகள் மற்றும் நோயாளருக்கான பால்மா வகைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. அத்தியாவசிய உணவுப் பொருள் களின் விலைகளும் தினந்தோறும் அதிகரித் துவருகிறது. எரிபொருள்களின் விலை உயர்வால் எல்லா மக்களும் பாதிக் கப்படுகின்றனர். குறிப்பாக உழைப்பை இழந்த மக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதிகமான வீடுகளில் இரவு வேளையில் வெளிச்சம் அருமை பெருமையாகவே சில மணித்தியாலங்களுக்கு மட்டும் பாவிக்கமுடியும். எரிபொருள் கட்டுப்பாடு காரணமாக மின்சாரசபையும் கைகளை விரித்துவிட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த நிறுத்தத்திற்கு புலிகள் எப்போதும் தயார்!

**இலங்கை அரசுதான் போர் நிறுத்தத்தை தன்னிச்சையாக முறித்துக் கொண்டது. தமிழீழ விடுதலைப் புலிகள் எப்போதும் போர் நிறுத்தத்துக்குத் தயாராகவே உள்ளனர் என்று தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் வேண்டுகோளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் விளக்கம் அளித்துள்ளார்.**

**தமிழ்நாட்டிலிருந்து வெளியாகும் 'தமிழோசை' நாளேட்டுக்கு அவர் அளித்துள்ள பேட்டியின் விவரம் வருமாறு:-**



*கே:- வடக்குப் பகுதியில் களமுனை நிலைவரம் எப்படி இருக்கின்றது?*

ப:- வடக்கில் பல முனைகளிலும் சிங்கள இராணுவம் பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்ட வண்ணமுள்ளது. இதற்காக தனது முப்படைகளையும் பயன்படுத்தி வருகின்றது. குறிப்பாக வான்படையின் உதவியுடன் குண்டுவீச்சுக்களை அதிகளவில் மேற்கொண்டு வருகின்றது. இதன்போது ஏராளமான பொதுமக்கள் கொல்லப்படுவதுடன் ஆயிரக்கணக்கான வீடுகள் அழிக்கப்பட்டும் வருகின்றன. சிங்கள அரசின் இந்த இராணுவ நடவடிக்கைகளுக்குப் பல நாடுகள் உதவி புரிகின்றன. பாகிஸ்தான் அரசு ஏராளமான இராணுவ உபகரணங்களையும், வெடிப்பொருள்களையும், குண்டுகளையும் பத்து நாள்களுக்கு ஒரு தடவை இலங்கை கொழும்புத் துறைமுகத்திற்குக் கப்பல் வழியாக அனுப்பி வைப்பதாகக் கேள்விப்படுகின்றோம்.

சிங்கள அரசின் இராணுவ நடவடிக்கை காரணமாக இரண்டரை இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்து காடுகளிலும், மரநிழல்களிலும் வாழ்ந்து வருகின்றனர். ஓர் இலட்சத்திற்கும் அதிகமான படைகளைக் கொண்ட சிங்கள இராணுவத்துடன் எமது விடுதலைப் போராளிகள் வீரமுடன் போராடி வருகின்றனர். பல நூற்றுக் கணக்கான போராளிகள் களத்தில் வீரமுடன் போராடி வீரச்சாவைத் தழுவிக்கொண்டுள்ளனர். பல வல்லரசு நாடுகள் இலங்கை அரச படைகளுக்கு உதவிசெய்து வருவதால் அவர்கள் பீரங்கிக் குண்டுகளையெல்லாம் மழைபோல் பொழிந்த வண்ணமுள்ளனர். வான்குண்டுவீச்சுக்களும் அவ்வாறேதான். ஆனால், எமது விடுதலைப் போராளிகள் மனம் சலிக்காது ஆவேசத்துடன் தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கின்றனர். மக்கள் எமக்குப் பல வழிகளிலும் களமுனைகளில் பக்க பலமாக இருந்து சிங்கள இராணுவத்தைத் தோற்கடிப்பதற்கு உதவி செய்து வருகின்றனர்.

*கே:- போர் நிறுத்தம் முறிந்து 3 ஆண்டுகள் நிறைவடையப் போகின்றன. இதுவரை இலங்கை அரச படையினர் தாக்குதல் நடத்தி கிழக்கு மாநிலம் உள்ளிட்ட பல பகுதிகளைக் கைப்பற்றியுள்ளனர். நீங்கள் இதுவரை ஒருமுறை கூட வலிந்த தாக்குதல்களை நடத்தவில்லை. தந்திர உத்தியாக பின்வாங்கி வருகின்றீர்கள் எனக் கூறுகிறீர்கள். இதற்குக் காரணம் என்ன?*

ப:- யுத்த முனையில் வலிந்த தாக்குதலை மேற்கொள்வதென்பது, எமக்குச் சாதகமான சூழல் ஏற்படும்போதே மேற்கொள்ளலாம். அதுவரை நாம் எமது இழப்புகளைத் தவிர்ப்பதற்காகவும், எதிரியின் பலவீனமான சூழலை எதிர்பார்த்தும் காத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஒன்றுள்ளது. சிங்கள அரச படைகள் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான படை வலுவைக் கொண்டதாகும். எமது படை வீரர்களின் எண்ணிக்கை அதைவிட மிகக் குறைவானதே. குறைந்த மனித வலுவையுடைய படையணிகளையுடைய நாம் மிகவும் தந்திரமாகவும், சமயோசிதமாகவும் செயற்பட வேண்டியுள்ளது. ஆனால்,எமது படை வீரர்களின் மன வலிமை அரச படைகளை விட அதிகமானது. தேசிய ரீதியாக - அனைத்துலக ரீதியாக எமக்குச் சாதகமான அரசியல் இராணுவச் சூழ்நிலைகளை வைத்தே நாம் வலிந்த தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டும். இதுவே களமுனைகளில் வெற்றியை ஈட்டித் தரும்.

*கே:- போர் நிலவரம் குறித்தும், உயிரிழப்புகள் குறித்தும் இலங்கை அரசு தங்களின் விருப்பம்போல செய்திகளை வெளியிட்டு வருகின்றது. உங்கள் தரப்பிற்குப் பல ஊடகங்கள் இருந்தும், போர் தொடர்பான செய்திகள் பொது ஊடகங்களுக்குப் பல நேரங்களில் வ்ழங்கப்படாதது ஏன்?*

ப:- போர் நிலவரம் குறித்து சிங்கள அரச தரப்பினால் வெளியிடப்பட்டுவரும் செய்திகள் சிங்கள மக்களையும் அனைத்துலக சமூகத்தையும் ஏமாற்றுவதற்கேயாகும். தினமும் களமுனை தொடர்பான பொய்யான செய்திகளையே வெளியிட்டு வருகின்றனர். இது இலங்கையின் எதிர்க்கட்சிகளாலேயே விமர்சிக்கப்பட்டு வருகின்றன. உண்மையான செய்திகளை வெளியிட்டு வரும் ஊடகங்களுக்குப் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

வாய்ப்பூட்டுக்கள் போடப்பட்டுள்ளன. கொழும்பில் பல ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டும், அச்சுறுத்தப்பட்டும் வருகின்றனர். நாம் உண்மையான செய்திகளையே வெளியிட்டு வருகின்றோம். நாம் எந்தவொரு செய்தியையும் ஊடகங்களுக்குக் கொடுப்பதற்கு முன்னர் உறுதிப்படுத்திய பின்னரே வெளியிடுவோம். பொய்யான செய்திகளை ஒருபோதும் வெளியிடுவதில்லை. அதுமட்டுமல்ல, எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கான தொலைத்தொடர்புகளும் சிங்கள அரசால் துண்டிக்கப்பட்டுள்ளன.

*கே:- இலங்கையில் இப்போது நடைபெற்று வருவது இறுதிப்போர் என ஊடகங்களும், பாதுகாப்பு வல்லுநர்களும் கூறுவதை ஏற்றுக் கொள்கிறீர்களா?*

ப:- போரில் எந்தவொரு தரப்பும் முற்றுமுழுதாகத் தோற்கடிக்கப்படும் வரை இறுதிப்போர் என்ற சொற்பிரயோகத்தைத் தவிர்க்கவேண்டும். சில ஊடகங்கள் இறுதிப்போர் என்ற வார்த்தையைப் பிரயோகித்தாலும் போரின் முடிவை அது இறுதிப்போரா அல்லது அதற்கு முந்தியவையா - என்பதைத் தீர்மானிக்கும். கடந்த முப்பது வருடகாலமாகச் சிங்கள அரசால் எமக்கு எதிராக [illegible] வரும் ஒவ்வொரு இராணுவ நடவடிக்கைகளையும் இறுதிப் போர் என்றே அவர்களது ஊடகங்கள் வெளி யிட்டு வருகின்றன.

*கே:- இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா தலையிடவேண்டும் என்று கோருகிறீர்கள். இந்தியாவின் தலையீடு எந்த வடிவில் இருக்கவேண்டும் என எதிர்பார்க்கிறீர்கள்?*

ப:- இலங்கைக்கு இந்திய அரசால் வழங்கப்படும் இராணுவ உதவிகளை நிறுத்தினாலேயே தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்குப் பெரிய உதவியாக இருக்கும். இந்தியாவின் உதவி மட்டுமல்ல, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் உதவிகளையும் பெற்று சிங்கள அரசானது தமிழ் இனப்படுகொலையைப் புரிவதற்கே அவற்றைப் பயன்படுத்தி வருகின்றது. ஆகவேதான் நாம் எவ்வித இராணுவ உதவிகளையும் இந்தியா, இலங்கை அரசிற்கு வழங்கக் கூடாது எனக் கேட்டுக்கொள்கிறோம்.

*கே:- இலங்கை இனப்பிரச்சினைக்கு தமிழீழம்தான் ஒரே தீர்வு என்பது உங்களின் நிலைப்பாடு. இலங்கைத் தமிழர்களுக்கு அதிக அதிகாரம் கிடைக்க 13 ஆவது அரசியல் திருத்த சட்டத்தை செயல்படுத்தினால் போதும் என்பதுதான் இந்திய அரசின் நிலைப்பாடு. இரண்டுக்கும் இடையே மிகப்பெரிய இடைவெளி இருக்கும் நிலையில், உங்களின் இலக்கை எட்ட இந்தியா எந்த வகையில் உதவியாக இருக்கமுடியும்?*

ப:- இவ்வாறான கேள்விகளுக்கு இலகுவான முறையில் பதிலளிக்க விரும்புகின்றேன். நோர்வேயின் அனுசரணையுடன் 2002ஆம் ஆண்டில் ஏற்பட்ட யுத்த நிறுத்தத்தின்போது எமக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி வடக்கு - கிழக்கை அபிவிருத்தி செய்வதற்கு கட்டமைப்பொன்று உருவாக்கப்பட்டது. ஆனால் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு சிங்கள அரசு பின்வாங்கியது. பல இழுத்தடிப்புக்களைச் செய்தது. அதே போன்று ஆழிப்பேரலையால் எமது தாயகப்பிரதேசம் பேரழிவிற்கு உள்ளானபோது எமது பிரதேசத்தை மீளக்கட்டியெழுப்புவதற்காக பொதுக் கட்டமைப்பொன்று எமக்கும், இலங்கை அரசிற்கும் இடையே கைச்சாத்திடப்பட்டு உருவாக்கப்பட்டது. இது அரச தரப்பும் நாமும் ஏற்றுக்கொண்டு ஒப்பமிட்டு உருவாக்கப்பட்ட கட்டமைப்பாகும். ஆனால் இலங்கை அரசு இந்த அமைப்பைக் கூட நடைமுறைப்படுத்துவதற்குப் பின்வாங்கியது.

அது மட்டுமல்ல கடந்த காலங்களில் தமிழர் தரப்பிற்கும், சிங்களத் தரப்பிற்கும் அரசியல் தீர்வு காண்பதற்காக உருவாக்கப்பட்ட அரசியல் ஒப்பந்தங்களான பண்டா - செல்வா ஒப்பந்தம் (1956), டட்லி - செல்வா ஒப்பந்தம் (1965) என்பவையெல்லாம் சிங்கள அரச தரப்பினால் நடைமுறைப்படுத்தாமல் கிழித்தெறியப்பட்டன. மாறாக இராணுவ அடக்குமுறைகள் தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டன. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தால் (1987) உருவாக்கப்பட்ட வடக்கு - கிழக்கு இணைப்பைக்கூட தங்களது நீதிமன்ற அதிகாரங்களைப் பயன்படுத்தி, வடக்கு வேறு கிழக்கு வேறாகப் பிரிந்து விட்டனர். அதுமட்டுமல்ல நோர்வே அனுசரணையுடன் சமாதான யுத்த நிறுத்த உடன்படிக்கையிலிருந்து சிங்கள அரசு தானாகவே விலகிக் கொண்டதுடன், தமிழ்மக்கள் மீது பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது. இந்த நிலையில் சிங்கள அரசிடம் எத்தகைய தீர்வை எதிர்பார்க்க முடியுமென நினைக்கின்றீர்களா? இவற்றையெல்லாம் விளங்கிக் கொண்டு இந்திய அரசு எம்மீதான தடையை நீக்கி எமது விடுதலை இயக்கத்தை அங்கீகரிக்க வேண்டுமென எதிர்பார்க்கின் றோம்.

*கே:- இலங்கை நாடாளுமன்றத்தில் மஹிந்த ராஜபக்ஷ தாக்கல் செய்த 2009 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட அறிக்கையில், போருக்கான நிதி ஒதுக்கீடு 160 கோடி அமெரிக்க டொலராக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதன் மூலம் ஆயுதங்களை வாங்கிக் குவித்து இலங்கைப் படையினர் போர் முனைக்கு வரும்போது அதை நீங்கள் எவ்வாறு எதிர்கொள்வீர்கள்?*

ப:- உலகெங்கும் பரந்து வாழ்கின்ற உலகத்தமிழினத்தின் தார் மீக ஆதரவு எம்பக்கமே உள்ளது. எம்மக்கள் எம்மோடு முற்றுமுழுதாக உள்ளனர். எம்மக்களுடைய பலமும் எமது மனோபலமும் எத்தகைய சக்திகளையும் எதிர்கொள்கின்ற ஆற்றலை எமக்கு வழங்கும். குறிப்பாகத் தமிழக மக்களின் உணர்வுபூர்வமான ஆதரவும், எழுச்சியும் எமக்கு மேலும் மேலும் எமது மனோ பலத்தை வளர்த்தெடுக்கும் சக்தி படைத்தது.

*கே:- விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து வெளியேறியவர்களுக்கு வாழ்வாதாரம் வழங்குகிறோம் என்ற பெயரில், கருணா குழுவினருக்கு 300 கோடி ரூபா வழங்க இலங்கை அரசு முடிவு செய்திருந்தது. இந்தப் பணத்தைக் கொண்டு கருணா குழுவினர் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராகச் செயல்பட்டால் அதை எப்படி எதிர் கொள்வீர்கள்?*

ப:- கருணா தமிழ் மக்களால் முற்றுமுழுதாக நிராகரிக்கப்பட்டவர். எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் முழுத் தமிழ் மக்களாலும் துரோகியாகக் கருதப்படுபவர். சிங்கள அரசு அவருக்கு வழங்கும் பணபலமோ, படைபலமோ எம்மை ஒன்றும் செய்துவிட முடியாது. அதனை எதிர்கொள்கின்ற சக்தி எம் மக்களுக்குண்டு.

*கே:- ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகத் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள எழுச்சியைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

ப:- தமிழக மக்கள் ஈழத் தமிழர்களின் தொப்புள் கொடி உறவு போன்றவர்கள். ஒரே குடும்பத்து இரத்த உறவுகள். எமக்கொன்றென்றால் அது முழுத் தமிழகத்தையும் எழுச்சிகொள்ளச் செய்யும். எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒவ்வொரு காலகட்டத்திலும் முழுத் தமிழக மக்களும் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் எமக்காகக் குரல் கொடுப்பது மட்டுமல்ல, எமக்காக எத்தகைய தியாகங்களையும் செய்வதற்குக்கூட தயாராக இருக்கின்றார்கள். தற்போது தமிழகத்தில் ஏற்பட்டுள்ள எழுச்சி தமிழக மக்களின் இரத்தத்தின் இரத்தங்களான ஈழத்தமிழர்களுக்கு ஏற்படுகின்ற இன்னல்களைக் கண்டேயாகும். இதனை எந்தவொரு சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது.

*கே:- இலங்கையில் போர் நிறுத்தத்திற்கு விடுதலைப் புலிகள் தயாராக இருக்கிறார்களா - எனத் தெரியவில்லை என்றும், அது தெரிந்தால்தான் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் முதல்வர் கலைஞர் கூறியிருக்கிறார். போர் நிறுத்தத்திற்கு நீங்கள் தயாரா?*

ப:- நாம் எப்போதும் யுத்த நிறுத்தத்திற்குத் தயாராகவே இருந்து வருகின்றோம். 2002ஆம் ஆண்டில் நோர்வேயின் அனுசரணையுடன் செய்துகொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து சிங்கள அரசுதான் தானாகவே விலகிக்கொண்டது. நாம் ஒருபோதும் விலகிக்கொள்ளவில்லை. இன்றும் நாம் அந்த யுத்த நிறுத்தத்தைத் தொடரவே விரும்புகின்றோம். ஆனால் சிங்கள அரசு விடுவதாகத் தெரியவில்லை. இதனை உலக நாடுகளும் அனைத்துலக சமூகமும் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார் நடேசன். ✱


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு

**ந.சிவரட்ணம்**

இலங்கை வங்கியின் வடபிராந்தியப் பொது முகாமையாளராகப் பதவி ஏற்றுள்ள மண்ணின் மைந்தன் திரு.ந.சிவரட்ணம் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

எம் ஊரின் பல பொது நலப் பணிகளிலும் ஈடுபட்டுழைக்கும் அவர்களை மேன் மேலும் உயர்வு பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

வல்வை ஒன்றியம், வல்வெட்டித்துறை.



## மரண அறிவித்தல்

### திருமதி சிவயோகம் ராசாத்தி

(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர், மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், தொல்புரம் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவயோகம் ராசாத்தி (11.11.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவயோகத்தின் அன்பு மனைவியும், றஜனி, றோகினி (இந்தியா), நந்தினி (வவுனியா), றஞ்சன்ராஜ் (கட்டார்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சஞ்சீவனின் (ஏரோலங்கா)சிறிய தாயாரும், ராஜேஸ்வரன், சொக்கலிங்கம், விஜயமாலா ஆகியோரின் அன்பு மாமியாரும் நிசாந்தன், டாலியா, யூாமினி, திருவழகன் (இந்தியா), யாழினி (கண்டி பேராதனைப் பல்கலைக்கழகம்), நிலானி (யாழ்.பல்கலைக் கழகம்), ரகுராம் (மொறட்டுவ பல்கலைக்கழகம்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2008) வியாழக்கிழமை பி.ப 1.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக நவாலி வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.சஞ்சீவன் -பெறாமகன் (ஏரோலங்கா)

தொல்புரம் மத்தி,
சுழிபுரம்.

(79804)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜீவ் படுகொலையை மன்னிக்காவிட்டாலும் புலிகள் ஆதரவலை தமிழகத்தில் அதிகரிப்பு!

## 'குமுதம்' நடத்திய கருத்துக் கணிப்பில் அதிர்ச்சித் தகவல்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கான ஆதரவு அலை தமிழகத்தில் அதிகரித்துக்கொண்டே வருகிறது -என்றும் ராஜீவ்காந்தியின் கொலையை மன்னிக்க முடியாது. ஆனால், புலிகளை ஆதரித்துப் பேசுவதில் எந்தத் தவறும் இல்லை என்று தமிழக மக்களில் பெரும்பாலனவர்கள் கூறியுள்ளனர் என்றும் அங்கிருந்து வெளியாகும் 'குமுதம்' சஞ்சிகை நடத்திய கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து அதில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

### கருத்துக் கணிப்பு முடிவுகள்

**கருத்துக் கூறியவர்கள் : 1833 பேர்**

| | | |
|---|---|---|
| 1. விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசுவது சரியா? தவறா? | | |
| சரி | : (1000 பேர்) | 53.1% |
| தவறு | : (833 பேர்) | 46.9% |
| 2. ராஜீவ்காந்தி கொலையை மன்னிக்கலாமா? மன்னிக்கக்கூடாதா? | | |
| மன்னிக்கலாம் | : (650 பேர்) | 35.46% |
| மன்னிக்கக்கூடாது | : (1180 பேர்) | 64.40% |
| கருத்துக் கூற விரும்பாதவர்கள் | : (3 பேர்) | 0.16% |
| 3. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் முதல்வர் கலைஞரின் செயல்பாடு சரியா? தவறா? | | |
| சரி | : (803 பேர்) | 43.8% |
| தவறு | : (1021 பேர்) | 55.7% |
| கருத்துக் கூற விரும்பாதவர்கள் | : (9 பேர்) | 0.05% |
| 4. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு சரியாக நடந்து கொள்கிறதா? பாரபட்சம் காட்டுகிறதா? | | |
| சரியாக நடந்து கொள்கிறது | : (678 பேர்) | 36.98% |
| பாரபட்சம் காட்டுகிறது | : (1153 பேர்) | 62.90% |
| கருத்துக் கூற விரும்பாதவர்கள் | : (2 பேர்) | 0.1% |

தமிழகத்தில் நடத்தப்படும் உண்ணாவிரதங்களும், அரசியல் லாவணிகளும் இலங்கை வாழ் தமிழர்களின் அழுகையை நிறுத்திவிடுமா? தனித் தமிழ் ஈழம்தான் அவர்களுக்கான ஒரே தீர்வு என்றும், அந்தத் தனி ஈழத்திற்காகப் போராடும் விடுதலைப் புலிகளை ஆதரிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்றும் சிலர் கூறுகிறார்கள்.

விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் - நமது ராஜீவ்காந்தியைக் கொன்ற அவர்களை மன்னிக்கவே முடியாது என்பது மட்டுமல்ல; அவர்களை இங்கே ஆதரித்துப் பேசுபவர்களையும் நாம் மன்னிக்கக் கூடாது. சிறையில் அடைக்க வேண்டும் என்றும் சிலர் கூறுகிறார்கள். இப்படிப் பேசுபவர்கள்கூட, இலங்கையில் அரசியல் தீர்வு ஏற்பட்டு அமைதி திரும்புவதையே தாங்கள் விரும்புகின்றனர் எனக் கூறுகிறார்கள்.

இப்ப்டிப் பலரும் பலவிதமாகக் கூறிக் கொண்டிருக்கும் நிலையில், உண்மையில் இந்த நாட்டின் எஜமானர்களான மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்வதற்காக நான்கு கேள்விகளைத் தயார் செய்து ஆண்கள், பெண்கள் என்று மொத்தம் 1,833 பேரிடம் கருத்துக் கேட்கப்பட்டது.

மொத்தம் நான்கே கேள்விகள். அவை வருமாறு-

1. புலிகளை ஆதரித்துப் பேசுவது சரியா? தவறா?

2. ராஜீவ்காந்தி கொலையை மன்னிக்கலாமா? கூடாதா?

3. இலங்கைப் பிரச்சினையில் முதல்வர் கருணாநிதியின் செயற்பாடு சரியா? தவறா?

4. இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசு சரியாக நடந்து கொள்கிறதா? பாரபட்சம் காட்டுகிறதா?

இந்தக் கேள்விகளில் ராஜீவ் காந்தி கொலையை மன்னிக்கலாமா? கூடாதா? என்பதற்கு மட்டும் மிக அதிகம் பேர், 'சோனியாகாந்தி மன்னித்துவிட்டாலும்கூட எங்களால் அதை மன்னிக்கவே முடியாது!' என்று அடித்துக் கூறினார்கள். அப்படிக் கூறியவர்கள்கூட, தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளை இங்கே ஆதரித்துப் பேசுவதில் எந்தத் தவறும் இல்லை என்று கூறினார்கள்.

அடுத்ததாக, இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசின் செயற்பாடு என்பது நமது முதல்வர் கலைஞருக்கு வேண்டுமானால் திருப்தியளிக்கலாம். ஆனால், பெரும்பான்மையான மக்களுக்குத் திருப்தியளிக்கவில்லை. மத்திய அரசு பாரபட்சம் காட்டுவதாகவே கூறியுள்ளார்கள்.

அதேபோல், இலங்கைப் பிரச்சினையில் முதல்வர் கலைஞரின் செயற்பாடும் சரியில்லை என்பதே பெரும்பான்மை மக்களின் கருத்தாக இருக்கிறது. அவர்களின் கருத்தைத்தான் மேலேயுள்ள அட்டவணையில் துல்லியமாகக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளோம்.

இதைப் புரிந்து கொள்ள வேண்டியவர்கள் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும் என்பதே நமது விருப்பம் - என்றுள்ளது.



நடிகர் விஜயகாந்த் இலங்கை அகதிகளை முகாமுக்குச் சென்று சந்தித்த போது...

# எதற்கும் பயப்படாதீர்கள்: நாங்கள் இருக்கிறோம் அகதிகளைச் சந்தித்து விஜயகாந்த் தெரிவிப்பு

## குடும்பத்துக்கு தலா 10 கிலோ அரிசியும் விநியோகம்

அவிநாசி, நவ.13

அவிநாசி இலங்கை அகதிகள் முகாமுக்கு நேற்றுமுன்தினம் திடீரென வந்திறங்கிய தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த், ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 10கிலோ அரிசி வழங்கினார்.

இதுகுறித்த விவரம் வருமாறு-

கோவையில், அவிநாசி, கைகாட்டிப் புதூர் - ராஜன் நகரிலுள்ள வாரச் சந்தை வளாகத்தில் இலங்கை அகதிகள் முகாம் உள்ளது. 1990 ஆம் ஆண்டு முதல் 36 குடும்பங்களைச் சேர்ந்த 116 பேர் தங்கியுள்ளனர். இந்த முகாமுக்கு தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் திடீர் விஜயம் செய்தார்.

இலங்கை அகதிகள் மத்தியில் விஜயகாந்த் பேசுகையில்,

''நீங்கள் இங்கு வந்து 19 ஆண்டுகளாகி விட்டன. சாதாரணமாக 15 ஆண்டுகள் இந்தியாவில் இருந்தாலே; தாராளமாக ரேஷன் கார்டு பெற்றுக்கொள்ளலாம். நீங்களும் இந்நாட்டின் பிரஜையாகிவிட்டீர்கள். இலங்கையில் தற்போது நிகழ்ந்து வரும் போர் குறித்த அச்சம், உங்களின் எதிர்காலம் பற்றி நன்கு அறிந்துள்ளேன். எதற்கும் பயப்படவேண்டாம். நாங்கள் இருக்கிறோம்'' - என்றார்.

அவிநாசி முகாமில் உள்ள 36 குடும்பங்கள், பெருமா நல்லூர் முகாமில் உள்ள 56 குடும்பங்களுக்கு தலா 10 கிலோ அரிசியை விஜயகாந்த் வழங்கினார்.

இலங்கை அகதிகளுக்கு விஜயகாந்த், அரிசி வழங்கிய விவரம் குறித்து அறிந்த கியூப் பிரிவு உளவுத்துறைப் பொலிஸார் விஜயகாந்தின் வருகை குறித்து அகதிகளிடமும், கட்சி நிர்வாகிகளிடமும் கேட்டறிந்தனர். ''அகதிகளுக்கு எந்தப் பொருள் வழங்குவதாக இருந்தாலும், கலெக்டர் அனுமதியுடன் மட்டுமே வழங்க வேண்டும்'' - என்று வி.ஏ.ஓ.ரங்கசாமி முகாமில் உள்ளவர்களிடமும், தே.மு.தி.க. ஒன்றியச் செயலரிடமும் தெரிவித்தார்.

இதையடுத்து, சரக்கு ஆட்டோ வரவழைக்கப்பட்டு, 25 மூட்டை அரிசிகளும் கட்சி அலுவலகத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டன. கட்சி அலுவலகத்தில் அனைத்து குடும்பங்களுக்கும் அரிசி வழங்கப்பட்டது.

# யுத்தத்தை உடன் நிறுத்த மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்

## விஜயகாந்த் வலியுறுத்து

கோவை, நவ.13

இலங்கையில் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கும் போரை, மத்திய அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்தி ஈழத் தமிழர் பிரச்சினையில் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், சிங்களவர்களுக்கும், இலங்கைத் தமிழர்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பொள்ளாச்சியில் நடைபெறும் 'மரியாதை' திரைப்பட சூட்டிங்கில் கலந்துகொள்வதற்காக நேற்றுமுன்தினம் காலை விமானம் மூலம் கோவை வந்தபோது, விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அப்போது செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள் வருமாறு:-

கே - இலங்கை அரசு போர் நிறுத்தம் செய்ய முடியாது என்று சொல்லியிருப்பது பற்றி?

ப - அது அவர்களுடைய உரிமை. அவர்கள் அறிவிக்கிறார்கள். யார் வேண்டுமானாலும், என்ன வேண்டுமானாலும் குரல் கொடுக்கலாம். இந்திய அரசின் கடமை என்ன? இந்திய அரசு என்ன செய்யவேண்டும், உடனடியாக உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவது நிறுத்தப்படவேண்டும். சமவாய்ப்பு, சம உரிமை எல்லோருக்கும் கிடைக்க வேண்டும்.

கே - இதற்கு நிரந்தரத் தீர்வு என்ன?

ப - போரை நிறுத்த வேண்டும், அரசியல் தீர்வுதான் முடிவாகும். இந்திய அரசுதான் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். சிங்களவர்களுக்கும், இலங்கைத் தமிழர்களுக்கும் சம உரிமை வேண்டும். அவர்கள் வீடு அவர்களுக்கு வேண்டும், நிலம் அவர்களுக்குச் சொந்தமாக இருக்கவேண்டும். வேலை வாய்ப்பில் சம வாய்ப்புக் கொடுக்க வேண்டும். சிங்களவர்களுக்கு ஒருவேலை, தமிழர்களுக்கு ஒருவேலை என்று இருக்கக்கூடாது.

கே - இலங்கைத் தமிழர்களுக்கு நிவாரணம் அனுப்பப்படுவது பற்றி என்ன சொல்கிறீர்கள்?

ப - சுனாமியின்போது பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் போய்ச் சேரவில்லை. நிவாரணம் அனுப்பப்படும் என்று சொல்வார்கள். ஆனால் போய்ச் சேராது - என்றார்.

# தமிழர் பகுதிகள் எரிகின்றன; அங்கே வாழ முடியாது; அதனாலேயே பிஞ்சுக் குழந்தைகளுடன் இங்கே வந்தோம்

## தமிழகம் சென்ற அகதிகள் தெரிவிப்பு



இலங்கை இராணுவம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது கண்மூடித்தனமாக - மூர்க்கத்தகமாக - அரக்கத்தனமாக - முப்படைத் தாக்குதல்களை நடத்தி வருகிறது. இதனால் தமிழர் பகுதிகள் பற்றி எரிகின்றன. அங்கே உயிர் வாழமுடியாது. ஈழத் தமிழனத்தை மறந்து புத்தரை வணங்கும் சிங்களம் வெறியாடுகிறது. எனவேதான் பூவோடும் பிஞ்சுகளோடும் அகதிகளாக தமிழகம் வந்தோம்.

- இவ்வாறு தமிழகம் சென்ற அகதிகள் உள்ளக் குமிறலுடன் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்த முழு விவரம் வருமாறு-

4 நாள்களாக நடுக்கடலில் கைக் குழந்தையுடன் பசி, பட்டினியால் மரணத்துடன் போராடிய 15 அகதிகளை கடலோர காவல் படையினர் மீட்டனர்.

வவுனியா, பேசாலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த எலிசபெத் (வயது - 65), ராஜேந்திரன் (வயது - 32), நாகேந்திரன் (வயது -32) உட்பட 15 பேர் பேசாலையிலிருந்து கடந்த 8ஆம் திகதி மதியம் தனுஷ்கோடிக்குப் புறப்பட்டனர்.

அவர்கள் முருகானந்தம் என்பவருக்குச் சொந்தமான படகில் தலா ரூ.15 ஆயிரம் கட்டணமாகக் கொடுத்து வந்தனர். இரவு 8 மணியளவில் இந்தியக் கடல் எல்லையான 4ஆம் மணல் திட்டு அருகே வந்தபோது படகோட்டி கிறிஸ்டி, 15 அகதிகளையும் இதுதான் தனுஷ்கோடி என்று கூறிவிட்டு அங்கேயே இறக்கி விட்டுச் சென்று விட்டார்.

மறுநாள் காலை விடிந்தபோதுதான் அகதிகள் தாங்கள் நடுக்கடலில் மணல் திட்டியில் இறக்கி விடப்பட்டிருப்பதை அறிந்தனர். இதனால் அதிர்ச்சி அடைந்த அவர்கள் அந்த வழியாக படகுகளில் யாராவது வருவார்களா என எதிர்பார்த்து கடலையே பார்த்துக்கொண்டிருந்தனர். 2 நாள்களுக்கு மேல் ஆகியும் யாரும் வரவில்லை.

மீனவர்கள் கொடுத்த தகவலின்படி நேற்று முன்தினம் கடலோரக் காவல் படையினர் 4ஆவது மணல் திட்டு அருகே சென்றபோது அகதிகள் தவித்துக் கொண்டிருப்பதைக் கண்டனர்.

பின்னர் அவர்களை பத்திரமாக மீட்ட கடலோரக் காவல் படையினர் மண்டபத்திற்கு நேற்றுமுன்தினம் மாலை 5.10 மணியளவில் திரும்பினர்.

அங்கு வந்த அகதிகள் கூறியவை வருமாறு-

இலங்கை இராணுவம் தமிழர் பகுதிகள் மீது கண்மூடித்தனமாக - அரக்கத்தனமாக - முப்படைத் தாக்குதல்களை நடத்திவருகிறது. இதனால் அங்கே உயிர் வாழமுடியாது. ஈழத் தமிழினத்தை மறந்து சிங்களம் குண்டு மழை பொழிந்து வெறியாடுகிறது. அங்கே வெளியில் செல்ல முடியவில்லை. பிழைப்புக்கு வழியில்லை. எனவேதான் நாங்கள் பிஞ்சுக் குழந்தைகளோடு அகதிகளாக தமிழகம் வந்தோம் - என்றனர்.

பின்னர் 15 அகதிகளும் மண்டபம் கடலோரப் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

# ஈழத் தமிழருக்காகப் பேசுவது தேசத்துரோகமா? அப்படியானால் என் மீது நடவடிக்கை எடுக்கலாம்!

## திருமாவளவன் தெரிவிப்பு

சென்னை, நவ. 13

ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து, தான் தெரிவிக்கும் கருத்துகள் தேசவிரோதமானவை என்று கருதினால், தன் மீது நடவடிக்கை எடுக்கலாம் - என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தொழிலாளர் அமைப்பு சார்பில், சென்னையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அதில் திருமாவளவன் பேசியபோதே இதனைக் கூறினார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு-

ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற, போர் நிறுத்தம் தேவை என்ற கோரிக்கையை வலியுறுத்தி எங்கள் கட்சியின் போராட்டம் தொடரும்.

தமிழகத்தில் ஏராளமான போராட்டங்கள் நடத்திய பின்பும் இந்திய அரசு போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடாதது ஏமாற்றம் அளிக்கிறது.



போர் நிறுத்தத்தை வலியுறுத்தி, விடுதலைச் சிறுத்தைகள் இளைஞர் எழுச்சிப் பாசறை சார்பில் நவம்பர் 28ஆம் திகதி மதுரையில் எழுச்சி மாநாடு நடைபெறும்.

போர் நிறுத்தம் ஏற்பட இந்திய அரசை வலியுறுத்தி சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டும். இலங்கைப் பிரச்சினையில் நான் தேசவிரோதமாகப் பேசுகிறேன் எனக் கருதினால் என் மீது நடவடிக்கை எடுக்கலாம் - என்றார்.

ஈழத் தமிழர் பிரச்சினை தமிழகத்தில் எழுச்சி பெற்றிருப்பதற்கு, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் செயற்பாடுகள் முக்கியக் காரணம் - என்று பேசினார் பழ. நெடுமாறன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணாசல பிரதேசம் குறித்து சீனா - இந்திய முறுகல் நிலை

பீஜிங், நவ. 13

அருணாசலப் பிரதேசம் இந்தியாவின் ஒரு பகுதியே என்று இந்தியா சொந்தம் கொண்டாடி வருவதற்கு சீனா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. கடந்த ஒரு வாரத்தில் இரண்டாவது முறையாக சீனா தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அருணாசலப் பிரதேசத்தில் தவாங் நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் பங்கேற்ற இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி, அருணாசலப் பிரதேசம் தொன்றுதொட்டு இந்தியாவின் ஒரு பகுதியாகவே இருந்து வருகிறது என்று தெரிவித்திருந்தார்.

அவரது கருத்துக்கு சீனா செவ்வாய்க்கிழமை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. சீன வெளியுறவுத்துறையின் செய்தித் தொடர்பாளர் கிங்கான் இது குறித்துக் குறிப்பிடுகையில் -

அருணாசலப் பிரதேச மாநில எல்லை குறித்து இதுவரை அதிகாரபூர்வமாக முடிவு செய்யப்படவில்லை. இந்நிலையில் அருணாசலப் பிரதேசத்தைத் தங்கள் நாட்டின் ஒரு பகுதி என இந்தியா சொந்தம் கொண்டாடி வருவது கவலையளிக்கிறது - எனத் தெரிவித்துள்ளார்.

வரலாற்று நிகழ்வுகளை ஆராய்ந்தால் அருணாசலப் பிரதேசம் சீனாவின் ஒரு பகுதியாகும். அருணாசலப் பிரதேச எல்லை குறித்து வரையறுத்த சட்டத்துக்குப் புறம்பான 'மக்மோகன் கோட்'டை சீனா ஒருபோதும் அங்கீகரித்ததில்லை. இது குறித்து இந்தியாவுக்கு நன்றாகவே தெரியும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இரு நாடுகளிடையே எல்லைப் பிரச்சினை தொடர்ந்து நீடித்து வருகிறது. இருப்பினும், சுமுகமாகவும், இருதரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் வகையிலும் எல்லைப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதையே சீனா விரும்புகிறது. இப்பிரச்சினைக்கு அமைதியான முறையில் பேச்சுகளின் மூலம் முடிவுகாண வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் 43,180 சதுர கிலோமீற்றர் பரப்பளவை சீனா சட்டத்துக்குப் புறம்பாக ஆக்கிரமிப்புச் செய்துள்ளது என்று இந்தியா புகார் தெரிவித்து வருகிறது. மேலும் சீன - பாகிஸ்தான் எல்லை ஒப்பந்தப்படி வழங்கப்பட்ட 5,180 சதுர கி.மீ. பரப்பளவை சீனாவே ஆக்கிரமிப்புச் செய்து வருகிறது என்றும் குறிப்பிட்டுள்ளது. அதேநேரத்தில் அருணாசலப் பிரதேசத்தில் சீனாவுக்குச் சொந்தமான 90 ஆயிரம் சதுர கி.மீ. பரப்பளவை இந்தியா ஆக்கிரமிப்புச் செய்துள்ளதாக சீனா குற்றம் சாட்டி வருகிறது.

## பக்தாத்தில் குண்டு வெடிப்பு மூவர் பலி; 15பேர் காயம்

பக்தாத், நவ. 13

ஷியாக்கள் செறிந்து வாழும் கிழக்கு பக்தாத்தில் இடம்பெற்ற இரு குண்டுவெடிப்புச் சம்பவங்களில் மூவர் பலியாகினர். 12 பேர் காயமடைந்தனர். செய்திப் பத்திரிகை விநியோகத்தை இலக்குவைத்து இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என ஈராக்கியப் பொலிஸார் தெரிவித்தனர்.

செவ்வாய்க்கிழமை மக்கள் நடமாட்டம் மிகுந்த காலை நேரத்தில் இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. காயமடைந்தோர் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டனர். இவர்களில் 6 பேர் ஆபத்தான கட்டத்தில் இருந்தனர் என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

முதல் குண்டு வெடிப்புக்கு பத்திரிகை விநியோக வாகனம் இலக்கானது. பத்திரிகை வாங்குவதற்காகக் காத்திருந்தவர்களுக்கருகில் இரண்டாவது குண்டு வெடித்தது. மூவர் அவ்விடத்திலேயே பலியாகினர். கிழக்குப் பக்தாத்திலுள்ள பலஸ்தீன வீதியில் இவ்விரு குண்டுகளும் வெடித்தன என நகரவாசியொருவர் தெரிவித்தார்.

இப்பகுதியை அடுத்துள்ள ஷியா மாவட்டத்தின் தலைநகரான கிஸ்ராவில் திங்கட்கிழமை இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் சிக்குண்டு 30 பேர் பலியாகியுள்ளனர்.

# முதலாம் உலகப் போரின் 90ஆவது ஆண்டு நிறைவு

## சர்வதேசங்களிலும் வைபவங்கள்

பரிஸ், நவ. 13

முதலாவது உலகப்போர் முடிவுற்ற 90ஆவது வருட நிறைவையொட்டி, உலகெங்கும் வைபவங்கள் நடைபெற்று வருகின்றன. வடக்கு - கிழக்கு பிரான்ஸில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸும், பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கொலஸ் சர்கோஷியும் மலர்வளையங்கள் சார்த்தி மறைந்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

நான்கு ஆண்டுகள் நீடித்த முதலாம் உலகப் போரில் லட்சக்கணக்கானோர் பலியாகினர். வடக்கு - கிழக்கு பிரான்ஸிலுள்ள வேர்டன் என்னுமிடத்தில் பிரான்ஸ் துருப்புகளும் ஜேர்மன் துருப்புகளும் 9 மாதங்கள் மூர்க்கமாக சண்டையிட்டிருந்தன.

வேர்டனில் மறைந்த வீரர்களுக்காக விசேட ஆராதனை நடத்தப்பட்டது. பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கொலஸ் சர்கோஷியும் பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸும் இதில் கலந்து கொண்டனர்.

அமெரிக்காவில் வாஷிங்ரனுக்கு அருகிலுள்ள ஆர்லிங்டன் மயானத்தில் மறைந்த வீரர்களின் வருடாந்த ஞாபகார்த்த தினம் அனுஷ்டிக்கப்பட்டது. அமெரிக்க அரசியல் பிரமுகர்கள் இதில் திரளாகக் கலந்துகொண்டார்கள்.

அமெரிக்க இராணுவ சேவையில் தமது உயிரை அர்ப்பணித்த இனம்தெரியாத வீரர்களை நினைவுகூருவதற்காக தேசிய மயானத்தில் நிறுவப்பட்டுள்ள சின்னத்துக்கு மலர் வளையம் சார்த்தும் வைபவம் நடைபெற்றது.

உப ஜனாதிபதி டிக் செனி, பாதுகாப்புச் செயலாளர் ரொபர்ட் கேட்ஸ் ஆகியோர் உட்படத் திரளானோர் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

நியூயோர்க்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் கலந்து கொண்டு நினைவஞ்சலி உரையாற்றினார். நாட்டின் எதிர்பார்ப்பை உணர்ந்து சேவை புரிவதற்காக அவர் ஆயுதப் படைகளுக்குப் பாராட்டுத் தெரிவித்துக்கொண்டார்.

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பராக் ஒபாமா, சிக்காகோவிலுள்ள வீரர்கள் மயானத்தில் மலர் வளையம் சார்த்தி அஞ்சலி செலுத்தினார்.

லண்டனிலுள்ள முதலாம் உலகப் போரில் உயிர்நீத்த வீரர்களின் ஞாபகச் சின்னமருகே நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலாம் உலகப் போரில் பங்குபற்றிய மூவர் கலந்துகொண்டனர்.

முதலாம் உலகப் போரில் பங்குபற்றியோரில் நால்வர் பிரிட்டனில் உள்ளனர். இவர்களில் 112 வயதான ஹென்றி ஆலிங்ஹாம், 110 வயதான ஹரிபெச், 108 வயதான பில்ஸ்டொன் ஆகிய மூவரும் கலந்துகொண்டனர்.

உலக அரங்கில்



அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர்களில் பெரும்பாலானோர் வெள்ளை மாளிகையில் தங்கள் குடும்பத்தில் செல்ல நாயை வளர்த்து வந்துள்ளனர். புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்கப்போகும் ஒபாமாவுக்கு பெரு நாட்டிலிருந்து 'இயர்ஸ்' என்ற செல்ல நாய்க்குட்டி அனுப்பப்படுகிறது. வெள்ளை மாளிகையில் குடியேறப்போகும் அந்த 4 மாத நாய்க்குட்டி தனது பயிற்சியாளருக்கு பெருமிதத்துடன் முத்தம் கொடுக்கும் காட்சி.

# செவ்வாய்க்குச் சென்ற 'பீனிக்ஸ்' செயலிழப்பு

நியூயோர்க்,நவ.13

ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக, செவ்வாய்க்கிரகத்துக்கு அனுப்பப்பட்ட குட்டி விண்கலமான 'பீனிக்ஸ்' அங்கு செயலிழந்து விட்டது என நாசா ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

'பீனிக்ஸ்' விண்கலம் செவ்வாய்க்கிரகத்தில் இறங்கிய 90 நாள்களில் செயலிழந்து விடும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் அது 90 நாள்களையும் கடந்து செயற்பட்டுள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

பீனிக்ஸிடமிருந்து, கடந்த 2 ஆம் திகதி கடைசித் தகவல் கிடைத்தது. இதன்பின்னர் புழுதிப் புயலாலும், கடும் குளிராலும் பாதிக்கப்பட்டு அது செயலிழந்துள்ளது என்றும் அதிகாரிகள் விளக்கியுள்ளார்கள்.

கடைசித் தகவலுக்குப் பின்னர் பீனிக்ஸிடமிருந்து, செவ்வாய்க்கிரகத்தைச் சுற்றிவரும் விண்கலத்துக்கு எத்தகைய தகவலும் கிடைக்கவில்லை. கடந்த மாதமே பீனிக்ஸ் பாதியளவில் பாதிப்படைந்தது. அதன் சக்தியை சேமிப்பதற்காக, வெப்பம் ஊட்டிக் கருவிகளில் ஒன்றும் நிறுத்தப்பட்டிருந்தது என்றும் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளார்கள்.

குட்டி விண்கலமான பீனிக்ஸ் கடந்த மே மாதம் 26ஆம் திகதி செவ்வாய்க்கிரகத்தில் தரை இறங்கியது. இது செவ்வாய்க்கிரகத்தில் இரசாயனப் பொருள் கலந்திருப்பதைக் கண்டுபிடித்தது. இப்பொருளால் அங்கு உயிரினம் வாழ்வதற்கான வாய்ப்பு குறைவாகவே உள்ளது என்றும் நாசா வட்டாரம் தெரிவித்துள்ளது.

# காஷ்மீர் எல்லைப் பாதுகாப்பில் 200 இந்தியப் பெண்கள் பணிக்கு

புதுடில்லி, நவ.13

காஷ்மீர் எல்லையைப் பாதுகாக்கும் பணியில் பெண்களை ஈடுபடுத்த இந்தியா முடிவு செய்துள்ளது. இதற்காக 200 பெண்களுக்கு தீவிர பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்தியா - பாகிஸ்தான் இடையே 553 கி.மீ. நீளத்துக்கு சர்வதேச எல்லை உள்ளது. இதில், பெரும்பாலான பகுதியில் முள்வேலி அமைக்கப்பட்டுள்ளது. எல்லையைப் பாதுகாக்கும் பணியில் எல்லைப் பாதுகாப்புப் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ரோந்து செல்லும் எல்லைப் பாதுகாப்புப் படையினர் 24 மணி நேரமும் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பணியில் இதுவரை ஆண்கள் மட்டுமே ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். முதல் முறையாக எல்லைப் பாதுகாப்புப் பணியில் பெண்களையும் ஈடுபடுத்த எல்லை பாதுகாப்புப் படை முடிவு செய்துள்ளது.

இதற்காக 18 வயது முதல் 22 வயது வரை உள்ள 612 பெண்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 200 பேருக்கு முதல் கட்டமாக பஞ்சாப் மாநிலம் ஹோஷியார்பூர் அருகே உள்ள கார்கன் கிராமத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி முடிந்ததும் எல்லையோரம் இவர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

இதுபற்றி எல்லைப் பாதுகாப்புப் படை ஐ.ஜி.ஹிம்மத் சிங் கூறுகையில், "பஞ்சாபில் எல்லையோரம் ஏராளமான விவசாய நிலங்கள் இருக்கின்றன. சில விவசாய நிலங்கள் எல்லையின் இரு பக்கங்களிலும் உள்ளன. அப்படிப்பட்ட விவசாயிகள் பாகிஸ்தானிலுள்ள தங்கள் நி[illegible] பஞ்சாபில் மட்டும், எல்லையிலுள்ள முள்வேலியில் 300 இடங்களில் நுழைவாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன" - என்றார்.

# பல்சுவை உணவுப் பிரியர் ஒபாமா

வாஷிங்டன், நவ. 13

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றுள்ள ஒபாமாவிற்கு வித்தியாசமான உணவு பழக்கங்கள் உண்டு. அவர் அமெரிக்காவில் பல இடங்களில் வசித்ததுடன் இந்தோனேஷியாவிலும் வசித்துள்ளார். தனது தந்தை நாடான கென்யாவுக்கும் சென்று வந்துள்ளார். இதனால் அவர் விதவிதமான உணவுகளைச் சாப்பிட்டுப் பழகி உள்ளார்.

அவர் இந்தோனேஷியாவில் வசித்தபோது அந்த நாட்டு உணவுப் பழக்கம் அவரை தொற்றிக்கொண்டது. இந்தோனேஷிய மக்கள் சாப்பிடும் நாய், பாம்புக் கறிகளையும் அவர் சாப்பிட்டிருக்கிறார். எண்ணெய்யில் பொரித்த வெட்டுக்கிளி உணவு அவருக்கு மிகவும் பிடிக்குமாம்.

சொக்லேட் கலந்த நிலக்கடலையை சிற்றுண்டியாகச் சாப்பிடுவார். கோப்பி குடிப்பது பிடிக்காது. 'பிளாக் போரஸ்ட் பெரி' ஐஸ்டீயை விரும்பி அருந்துவார். மது மீது பிரியம் உண்டு. ஆனால், தினமும் குடிக்கும் பழக்கம் கிடையாது. அவருக்கு மனைவி மிச்சல் சமைக்கும் இறால் உணவு மிகவும் பிடிக்கும்.

அவர் மாணவராக இருந்தபோது, செலவுக்குத் தேவையான பணத்துக்காக ஐஸ்கிறீம் பார்லரில் வேலை பார்த்துள்ளார். ஒபாமாவுக்குத் தொடர்ந்து புகை பிடிக்கும் பழக்கம் உண்டு. ஜனாதிபதி பதவி ஏற்கும் முன்பு புகை பழக்கத்தை விட்டுவிடுவார் என மனைவியிடம் வாக்குறுதி கொடுத்து இருக்கிறார்.

மாணவராக இருந்தபோது கஞ்சா, கொக்கையின் போன்ற போதை மருந்துகளைப் பயன்படுத்தி இருக்கிறார். ஒபாமா இந்தோனேஷியாவில் இருந்தபோது மனித குரங்கு ஒன்றை செல்லப் பிராணியாக வீட்டில் வளர்த்தார். அதற்கு 'டாடா' என்று பெயரிட்டிருந்தார்.

ஸ்பைடர்மேன், காட்டுவாசிகள் கொமிக்ஸ் புத்தகங்கள் ஆகியவை படிப்பது மிகவும் பிடிக்கும். இவற்றில் ஏராளமான புத்தகங்களைச் சேகரித்து வைத்துள்ளார். 'ஹரி பொட்டர்' புத்தகத்தில் அனைத்து பகுதிகளையும் படித்திருக்கிறார்.

இவர் தமது படத்தைப் பிரசுரிப்பதற்காக புகழ்பெற்ற ஹார்வர்டு கலண்டர் நிறுவனத்துக்கு அனுப்பி வைத்தார். இதில் இடம்பெற்றிருந்த பெண்கள் குழு இவரது படத்தை நிராகரித்துவிட்டது. ஒபாமாவுக்கு கட்டடக் கலை நிபுணராக வேண்டும் என்பதுதான் ஆசை. அரசியலுக்கு வந்ததால் அது நிறைவேறவில்லை. படிப்புக்காக வங்கியில் கடன் வாங்கி இருந்தார். அதை 4 வருடங்களுக்கு முன்புதான் அடைத்தார்.

# பிலிப்பைன்ஸ் கப்பல் சோமாலியாவில் கடத்தல்

இரசாயனப் பொருள்களை ஏற்றிச் சென்ற பிலிப்பைன்ஸ் கப்பலொன்றை, சோமாலியாவுக்கருகே கடற்கொள்ளையர்கள் கடத்திச் சென்றுள்ளார்கள். இக்கப்பலில் 23 பேர் பயணித்துள்ளனர் என பிலிப்பைன்ஸ் வட்டாரமொன்று தெரிவித்தது.

ஏடன் வளைகுடாவில் கப்பல் சென்றுகொண்டிருந்தபோது திடீரென ஆயுதங்களுடன் வந்த கடற்கொள்ளையர்கள் கப்பலைக் கடத்திச் சென்றுள்ளார்கள். கப்பல் எங்கு கடத்தப்பட்டுள்ளது என்பது தொடர்பான தகவல் இதுவரை கிட்டவில்லை என்றும் அது குறிப்பிட்டது.

கப்பல் கடத்தலைத் தடுக்க சர்வதேச நாடுகள் கூட்டாக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. எனினும், கடற் கொள்ளையர்களின் கடத்தல் நடவடிக்கை தடுக்கப்படவில்லை. அது நீடிக்கிறது என அதிகாரி ஒருவர் கூறினார். சோமாலியா கடற்பிராந்தியத்தில் கப்பல் கடத்தல்கள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன. இந்த ஆண்டு மட்டும் 33 கப்பல்கள் கடத்தப்பட்டுள்ளன. அவற்றில் 22 கப்பல்கள் மீட்கப்பட்டுள்ளன. இன்னும் 11 கப்பல்கள் மீட்கப்படவில்லை. அவற்றைச் சேர்ந்த 200 பேரின் நிலை என்ன என்பதும் தெரியவில்லை என்றும் அவர் விளக்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜி.எஸ்.பி. வரிச்சலுகையைப் பெறுவதற்காக

# ஐரோப்பிய ஒன்றிய விசாரணைக்கு அனுமதிக்குமாறு ரணில் வற்புறுத்து



கொழும்பு, நவ. 13

மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணையை இலங்கையில் நடத்த ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அனுமதியளித்து உடனடியாக 'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச்சலுகையைப் பெற்றுக்கொள்ளுமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையில் மேற்படி விசாரணையை நடத்துவதன் காரணமாக இலங்கையின் இறைமைக்குப் பாதிப்பு ஏற்பட்டுவிடாது என்றும் அவர் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு :-

அரசின் வழமையான செயற்பாடு காரணமாக எமது நாட்டுக்குக் கிடைக்கவேண்டிய ஜி.எஸ்.பி.பிளஸ் ஏற்றுமதி வரிச்சலுகை எமக்கு இல்லாமல் போகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த வரிச்சலுகை எமது நாட்டுக்குத் தொடர்ந்து கிட்டவேண்டும் என்றால் இங்கு மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணையை நடத்த ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசிற்கு நிபந்தனை ஒன்றை விதித்துள்ளது.

### மனித உரிமைமீறல்கள் இல்லையெனில் விசாரணைக்கு ஏன் பயப்படவேண்டும்

ஆனால், அந்த விசாரணைக்கு அனுமதி வழங்க இலங்கை அரசு மறுக்கின்றது. அப்படி அனுமதி வழங்கப்பட்டால் இலங்கையின் இறைமை மீறப்பட்டுவிடும் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது.

இந்த விசாரணை மூலம் ஒருபோதும் நாட்டின் இறைமைக்குப் பாதிப்பு ஏற்படாது. இதே நிபந்தனைக்கு உட்பட்டுத்தான் உலகில் 80 வீதமான நாடுகள் இந்த வரிச்சலுகையைப் பெற்றுள்ளன.

இங்கு மனித உரிமை மீறல்கள் இடம்பெறவில்லையென்றால் நாம் ஏன் இந்த விசாரணைக்குப் பயப்பட வேண்டும்?

இந்த வரிச்சலுகை இல்லாமல் போனால் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் தொழிலை இழப்பர். ஆகவே, உடன் இந்த வரிச்சலுகையை மீளப்பெற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

(அ-சி)

## கல்வியியற் கல்லூரியில் இன்று ஒளி விழா

யாழ்ப்பாணம், நவ. 03

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இவ்வாண்டிற்கான ஒளி விழா இன்று காலை 8.30 மணிக்கு கொண்டாடப்படுகிறது.

இந் நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதனும் சிறப்பு விருந்தினராக யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி பணிப் பாளர் வண.பிதா.எஸ்.எ.ஜோர்ஜும் கலந்து கொள்வர்.

இந் நிகழ்வில் கறோல் நாடகம், நடனம் போன்றவை ஆசிரிய மாணவர்களால் நடத்தப்படுகின்றன. (1)

# இந்தியத் தலையீட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளப்பட்டும் முடிவுக்கு வராமல் நீடிக்கின்றது. அந்த மண்ணின் மைந்தர்களாம் தமிழின மக்களின் உயிர், உடைமைகள் எதற்கும் உத்தரவாதமில்லை. அவர்களின் குடும்பங்கள், குழந்தை குட்டிகள் என லட்சக் கணக்கானோர் அகதிகளாக அயல் நாடுகளுக்கு ஓடியவர்கள் போக எஞ்சியிருப்போர், எந்த நேரத்திலும் மரணத்தை எதிர்பார்த்துத் துடித்துத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

### நிவாரண உதவி மட்டும் போதுமானது அல்ல

இந்நிலை குறித்து முடிவெடுக்க ஒக்ரோபர் 14ஆம் திகதி நடத்தப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் தீர்மானத்திற்கு இணங்க, கடலில் எல்லை வகுக்கப்பட்டு ஓர் உடன்பாட்டின் மூலம் தமிழக மீனவர்களின் உயிருக்கும், உடைமைக்கும், உரிமைக்கும் பாதுகாப்பு வழங்கும் ஏற்பாடுசெய்யப்பட்டது. ஆனாலும், நமது பக்கத்து நாட்டிலேயே நமது உடன் பிறந்த தமிழ் மக்கள், நித்தம் நித்தம் சிந்தும் இரத்தமும், வடிக்கும் கண்ணீரும் நெஞ்சைப் பிளக்கும் நிகழ்ச்சிகளாகி விட்ட கொடுமைக்கிடையே, இந்தியப் பேரரசின் உதவியுடன் இலங்கைத் தமிழர்களுக்கான உணவு, உடை, மருந்து போன்ற அத்தி யாவசியப் பொருள்களை, தமிழகத்திலிருந்து செஞ்சிலுவைச் சங்கம் போன்ற சர்வ தேச அமைப்புகளின் வாயிலாக அனுப்பி வைக்கிறோம். எனினும், அவர்களுக்கு இந்த உதவிகள் மட்டும் போதுமானவை யல்ல.

அவர்களின் உயிர், உடைமை ஆகியவற்றுக்குப் பாதுகாப்பு,இலங்கையில் அமைய வேண்டிய அமைதி நிறைந்த சம நிலை வாழ்வு - இவை அங்குள்ள தமிழர்களுக்கு உறுதி செய்யப்படவேண்டும். அதற்கான அழுத்தமான நடவடிக்கையை நமது இந்திய மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும்.

### உலகத் தமிழரிடையே கொந்தளிப்பு, ஆத்திரம்

இலங்கைத் தமிழர்களின் இந்த அவல நிலை உலகெங்கிலும் வாழும் தமிழர்களிடையே பெரும் கொந்தளிப்பையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. குறிப்பாக வரலாற்று ரீதியாகவும், கலாசாரம் மற்றும் பண்பாடு ரீதியாகவும் ஒன்றாக உள்ள ஏழு கோடி இந்தியத் தமிழர்களின் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது.

இதன் விளைவாகத் தமிழகத்தில் அனைத்து அரசியல் இயக்கங்களும், அரசியல் சார்பற்ற அமைப்புகளும் ஆர்ப்பாட்டங்களையும், பேரணிகளையும் நடத்தி, இலங்கை அரசுக்குத் தங்களது எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றன. மாணவர்கள், வணிகர்கள், திரைப்படக் கலைஞர்கள், திரைப்படத் தொழில்நுட்பக் கலைஞர்கள், சின்னத்திரை கலைஞர்கள், தொழிலாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் என எல்லாத் தரப்பினரும் இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்து வருகிறார்கள்.

### புதிய வரலாறு படைத்த மனிதச்சங்கிலி அணிவகுப்பு

அரசு சார்பில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்யப்படவேண்டும் என்றும், இலங்கைத் தமிழர்களின் துயர்துடைக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி ஒரு மனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அதைத் தொடர்ந்து சென்னையில் வரலாறு படைத்த மனிதச் சங்கிலி அணிவகுப்பு நடத்தி ஈழத் தமிழர்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டிய மாபெரும் நிகழ்ச்சி இடம் பெற்றமை மறக்கவொண்ணாதது.

### உலகத் தமிழர்களின் ஏகோபித்த விருப்பம்

இலங்கைத் தமிழர்களின் இன்னல்கள் நீங்கவேண்டுமானால், அங்கு உடனடியாகப் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். இது உலகத் தமிழர்களின் ஏகோபித்த விருப்பமாகும்.

போர் நிறுத்தம் என்பது இரு தரப்பினராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்று எனத் தமிழக முதல்வர் வெளியிட்ட கருத்தைத் தொடர்ந்து போர் நிறுத்தம் மேற்கொள்வதற்கு தாங்கள் தயார் என்று மற்றொரு தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் இலங்கை அரசும் போர்நிறுத்த அறிவிப்பை வெளியிட்டு உடனடியாகப் படைகளைப் பழைய நிலைக்கு விலக்கிக் கொள்ளவேண்டும்.

அத்துடன் தமிழர்களின் கோரிக்கைகள் குறித்து பேச்சு நடத்தி அரசியல் தீர்வு காண்பதற்கான முயற்சிகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ்நாடு சட்டப்பேரவை வலியுறுத்துகிறது. இந்தியப் பேரரசு தனது செல்வாக்கைப் பயன்படுத்தி இலங்கை அரசை போர்நிறுத்தத்துக்கு இணங்க வைத்து, தமிழர் பகுதிகளில் நிலையான அமைதியும், சக வாழ்வும் ஏற்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று "தமிழ்நாடு சட்டப் பேரவை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது."

. - இவ்வாறு அவர் கூறினார்.

அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் இந்தத் தீர்மானத்தை மேசையைத் தட்டி வர வேற்றனர். இதையடுத்து, இந்தத் தீர்மானம் குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்களும் தங்கள் கருத்துகளைத் தெரிவித்தனர். பின்னர் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (அ-சி)

# இலங்கையில் சர்வகட்சிக் குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகள் குழுவிற்கு ஆதரவளிப்பதற்கு நிபுணர்கள் குழுவொன்று உருவாக்கப் பட்டது.

அனைத்துக் கட்சிக் குழு தனது நடவடிக்கைகளை, செயற்பாடுகளைத் தாமதித்துக் கொண்டிருந்த வேளை, 17 பேர் கொண்ட நிபுணர்கள் குழு தனது ஆவணத்தை வெளியிட்டதுடன், ஜனாதிபதியிடமும் சமர்ப்பித்தது. இதில் ஒருவகை சமஷ்டி முறை, அதிகாரப் பகிர்வு போன்றவை குறித்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த ஆவணம் ஜனாதிபதியிடம் உத்தியோகபூர்வமாக சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னரே 'தஹிண்டு' உட்பட வெளிநாட்டு ஊடகங்களுக்கு அதில் உள்ள விடயங்கள் தெரியப்படுத்தப்பட்டன.

இதன் காரணமாக கோபமடைந்த ஜனாதிபதி அந்த யோசனைகளை அப்படியே கைவிடுமாறும், அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவைத் தனது சொந்த யோசனைகளை முன்வைக்குமாறும் உத்தரவிட்டார்.

எனினும் அனைத்துக்கட்சிப் பிரதிநிதிக் குழுவின் கூட்டத் தொடரில் யோசனையொன்றை உருவாக்க முடியவில்லை.

இறுதியில் அது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேவைகளுக்குப் பொருந்தும் போலி நாடகமாக மாறியது.

இந்தியாவிற்குச் செல்லும் ஒவ்வொரு முறையும் - அல்லது இந்தியத் தலைவர்களைச் சந்திக்கும் ஒவ்வொரு தடவையும் - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு குறித்துச் சுட்டிக்காட்டுவது வழமை.

அனைத்துக கட்சிக் குழு இரண்டு, நான்கு மாதங்களிற்குள் தீர்வை சமர்ப்பிக்கும் என அவர் தெரிவிப்பார்.

கிழக்கு மாகாணத் தேர்தலுக்கு முன்னர் அனைத்துக் கட்சிக்குழு தனது யோசனைகளைப் பூர்த்தி செய்யும் தறுவாயிலிருந்த வேளை ஜனாதிபதி அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை சமர்ப்பித்து அதனை அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் இடைக்கால அறிக்கையை முன்வைக்குமாறு குழுவை வற்புறுத்தினார்.

### பேச்சுக்கள் நடைபெறுவதாக வெளியே காட்டும் தந்திரம்

கே:- அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் குறித்து அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதா?

ப:-அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லிம், மலையகத் தமிழ் கட்சிகளிடம் 13 ஆவது திருத்தத்தை முதற்கட்ட நடவடிக்கையாக அங்கீகரிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

உடனடித் தீர்வாக இதனை நடைமுறைப் படுத்திவிட்டுப் பின்னர் சிறந்த தீர்வு குறித்து ஆராயலாம் என அவர்களிடம் ஜனாதிபதி தெரிவித்தார். எனினும் இது பொறியாக மாறிவிட்டது.

தற்போது இறுதித் தீர்வுக்கான அடிப்படையாக இதனை அங்கீகரித்ததாகக் காண்பிப்பதற்கு இது பயன்படுகின்றது.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் இடைக்காலத் தீர்வாகவோ அல்லது இறுதித் தீர்வாகவோ இந்த விடயம் - அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தல் - ஆராயப்படவில்லை.

யதார்த்தத்தில் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு இந்தியா மற்றும் சர்வதேச சமூகத்தைச் சமாளிக்கும் தேவைகளை நிறைவேற்ற மட்டுமே ஓர் உத்தியாகப் பயன்படுகிறது.

இனப்பிரச்சினைத் தீர்விற்கான பேச்சுகள் இடம்பெறுகின்றன என வெளியே காண்பிக்க இது வசதியாகப் பயன்படுத்தப்படுகின்றது.

கே:-சர்வதேச சமூகம் தொடர்ந்தும் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு குறித்து நம்பிக்கை கொண்டிருப்பதாக நம்புகிறீர்களா?

ப:- அனைத்துக் கட்சிக்குழு யோசனைகளை முன்வைக்கும் என அமெரிக்கத் தூதுவர் நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

இது அனைத்துக் கட்சிக்குழு குறிப்பிடத்தக்க தீர்வொன்றை முன்வைக்கும் என்ற கட்டுக்கதையொன்றை இலங்கை அரசு உருவாக்கியுள்ளது என்பதையும், அதை நம்புவதற்கு ஆள்கள் உள்ளனர் என்பதையும் காட்டுகின்றது.

கே:- அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவிற்குப் பின்னால் உள்ள நோக்கம் என்னவென்பதை இராஜதந்திரிகள் அறிந்திருக்கவில்லை எனக் கருதுகின்றீர்களா?

### 13 ஆவது திருத்தத்தை வேறு பெயரில் திணிக்க முயல்கிறது சர்வதேசம்

ப:- உண்மையில் அவர்கள் இதனை நன்கு அறிந்துவைத்திருக்கின்றனர். ஐரோப்பிய ஒன்றியமும் பல தூதுவர்களும் இந்தக் குழு மூலம் எதுவும் கிட்டாது என்பதை அறிந்துள்ளனர்.

எனினும், அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு தீர்வை முன்வைக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பை வெளியிடுவதன் மூலம் இலங்கை அரசின் மீது தொடர்ந்து அழுத்தத்தைப் பேண முடியும் என அவர்கள் எண்ணுகின்றனர்.

இலங்கை அரசு ஒற்றையாட்சிக்கு அப்பால் செல்லாது என்பது சர்வதேச சமூகத்திற்குத் தெரிந்துள்ளது.

இதன் காரணமாக மக்களைத் திருப்திப்படுத்த 13 ஆவது திருத்தத்தை வேறு பெயரில் தமிழ் மக்கள் மீது திணிக்க சர்வதேசம் முயல்கின்றது.

இதுவொரு ஆரோக்கியமான அணுகுமுறையென நான் கருதவில்லை.

கே:- அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுக் கூட்டத்திற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர்த்தமை ஏன் எனத் தெரியுமா? இதில் கலந்துகொள்ளுமாறு ஜனாதிபதி ஏதாவது அழைப்பு உங்களுக்கு விடுத்துள்ளாரா?

ப:- இது ஜனாதிபதியால் எடுக்கப்பட்ட கொள்கை முடிவு. இரண்டு வருடங்களுக்கு முன்னர் எமது தலைவர் இரா. சம்பந்தன் இதுபற்றிக் கேட்டபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைப்பதற்கு முன்னர் சிங்கள சமூகத்தின் மத்தியில் கருத்தொருமைப்பாட்டை ஏற்படுத்தத் தாம் விரும்புகிறார் என ஜனதிபதி தெரிவித்தார்.

எனினும் ஏனைய பல தமிழ் கட்சிகள் அதில் இடம்பெற்றிருந்தன.

தற்போது எமக்கு முதல் தடவையாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதுவும் குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண விடுத்த அழைப்பு இது. எனினும் இது தொடர்பான உத்தியோக அழைப்பு எதுவும் இன்னும் விடுக்கப் படவில்லை.

உண்மையான பிரச்சினை என்னவென்றால் நாங்கள் ஆகக் குறைந்தளவு சமஷ்டி முறைமையையாவது வற்புறுத்துவோம். அவர்கள் அதனை எதிர்கொள்ளத் தயாரில்லை. அதனால்தான் எங்களை அழைக்கவில்லை.

கே:- இந்தத் தருணத்தில் இந்தியக் கொள்கை வகுப்பாளர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

ப:- இந்திய அரசு மாத்திரமல்ல, தமிழ் நாட்டின் அரசியல் கட்சிகளும் இரண்டு விடயங்களைப் புரிந்துகொள்ள வேண்டும்.

### 13 ஆவது திருத்தம் சாத்தியம் இல்லை என்பதனை இந்தியா புரிந்துகொள்ள வேண்டும்

முதலாவது, இந்திய - இலங்கை உடன்படிக்கை மூலம் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தம் உண்மையில் இலங்கையின் ஒற்றையாட்சி அரசமைப்பின் கீழ் அதிகாரப்பகிர்வு சாத்தியமா என்பதற்கான சோதனைக்களமே.

எனினும் இது சாத்திமில்லை என்பது புலனாகியுள்ளது. இது இனிமேலும் சாத்தியமில்லை.

இதன் காரணமாக 13 ஆவது திருத்தம் சாத்தியமில்லை என்பதைப் புதுடில்லி புரிந்து கொள்ள வேணடும்.

இரண்டாவது, சிங்கள அரசியல் வாதிகளின் மனதைப் புதுடில்லி புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் தாங்கள் மட்டுமே இந்த மண்ணின் மைந்தர்கள் எனக் கருதுகின்றனர்.

இந்த 100 வருட காலத்தில் சிங்கள மனநிலை மாறுவதற்கான அறிகுறி தென்படவேயில்லை. நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அமர்விலும் சிங்களத் தலைவர்களின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் நாம் இதனைக் காண்கிறோம். - என்றார். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்காரர்களை வாளால் வெட்டிக் காயப்படுத்தி திருநெல்வேலியில் 2 இடங்களில் மின்வெட்டு நேரக் கொள்ளை

## மூவர் நேற்றிரவு ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம், நவ. 13

நேற்றிரவு மின்வெட்டு அமுலில் இருந்த வேளை, திருநெல்வேலிப் பகுதியில் இரண்டு வீடுகளில் கொள்ளையில் ஈடுபட்டவர்கள் வீட்டுக்காரர்களை வாளால் வெட்டிக் காயப்படுத்தி விட்டு அவர்களின் நகைகளைச் சூறையாடிச் சென்றனர்.

இச்சம்பவங்களில் காயமடைந்த இரண்டு பெண்களும் ஓர் இளைஞரும் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

திருநெல்வேலி, கலாசாலை வீதியில் முத்துத்தம்பி வித்தியாசாலைக்குச் சமீபமாக நேற்றிரவு ஏழு மணியளவில் மின்வெட்டு நடைமுறையில் இருந்த வேளையில் கொள்ளைக் கோஷ்டி ஆயுதங்கள் சகிதம் வீடு ஒன்றுக்குள் புகுந்தது.

கொள்ளைக் கோஷ்டியினர் முதலில் வீட்டு உரிமையாளரை அறை ஒன்றுக்குள் பூட்டி வைத்தனர். அதன் பின்னர் அவரது மனைவி, மகன் ஆகியோரை வாளால் வெட்டி காயப்படுத்தி விட்டு அங்கிருந்து பெருந்தொகை பெறுமதியான நகைகளை சூறையாடிக் கொண்டு தப்பிச் சென்றனர்.

முதலாவது வீட்டில் கொள்ளையை நடத்திய சிறுவேளை இடைவெளியில் திருநெல்வேலி பதிவாளர் வீதியில் உள்ள மற்றொரு வீட்டுக்குள் நுழைந்த கொள்ளைக் கோஷ்டி, அங்கிருந்த பெண்ணை வெட்டிவிட்டு அவரது சங்கிலியை அபகரித் துக் கொண்டு தப்பியது.

இச்சம்பவங்களில் காயங்களுக்கு உள்ளான திருநெல்வேலி கலாசாலை வீதியைச் சேர்ந்த மகேந்திரராசா சரோஜாதேவி (வயது 43), அவரது மகன் ம.நிதர்சன் (வயது 22) ஆகியோரும், பதிவாளர் வீதியைச் சேர்ந்த அன்னலிங்கம் தர்சிகா (வயது 32) என்பவரும் யாழ். ஆஸ்பத்தி ரியில் நேற்றிரவு அனுமதிக்கப் பட்டனர். (அ-01-78)

# அம்பாறையில் பௌத்த மதகுரு இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டார்

அம்பாறை, நவ. 13

அம்பாறை, குடும்பிகலப் பகுதியில் பௌத்த மதகுரு ஒருவர் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டிருக்கின்றார்.

குடும்பிகல தியான மையத்தைச் சேர்ந்த வண.சிவுரலமுல்ல தர்மசிறி தேரரே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டிருக் கின்றார்.

அவரது பாதுகாப்பிற்காக இரு ஊர்காவலர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். எனினும், அவர் கடத்தப்பட்ட சமயத்தில் அவ்விரு ஊர்காவலர்களும் அங்கு இருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இக் கடத்தல் சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து தேடுதல் நடத்தினர் என்றும் கூறப்பட்டது.

மேற்படி தியான மண்டபத்தில் இடம்பெறும் தியான நிகழ்வுகள் காரணமாக அது சர்வதேச ரீதியில் புகழ்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சி)

# 'கின்னஸ்' சாதனை படைக்க முயன்ற இளைஞன் விபத்தில் சிக்கிப் படுகாயம்

கொழும்பு, நவ. 13

கைகளைப் பிரயோகிக்காமல், மோட்டார் சைக்கிள் ஓடி 'கின்னஸ்' சாதனை படைக்க முயற்சித்த இளைஞன் ஒருவர் நேற்று விபத்தில் சிக்கி படுகாயமடைந் துள்ளார்.

வென்னப்புவ பகுதியிலிருந்து புத்தளம் வரையும் மீண்டும் புத்தளத்திலிருந்து வென்னப்புவ வரையும் தனது கைகளைக் கட்டிக்கொண்டு மோட்டார் சைக்கிள் ஓட முயற்சித்தவேளையிலேயே இந்த இளைஞன் விபத்தில் சிக்கினார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

குறிப்பிட்ட இளைஞன் வென்னப்புவப் பகுதியிலிருந்து புத்தளம் வரை வெற்றிகரமாக கைகளை விட்டபடி மோட்டார் சைக்கிள் ஓடினார் என்றும், மீண்டும் புத்தளத்திலிருந்து வென்னப்புவவுக்குத் திரும்பும் வழியில் மாரம்பையில் உள்ள பம்பலப் பகுதியிலேயே விபத்துக்குள்ளானார் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தகவல் தெரிவித்துள்ளார்.

லுணுவில, புனித ஆனாப்புரப் பகுதியைச் சேர்ந்த இந்த இளைஞன் தற்போது சிலாபம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (அ-சி)

# பால்மா வகைகளின் விலைகள் அடுத்த வாரத்தில் குறையுமாம்!

## அமைச்சர் பந்துல குணவர்த்தன கூறுகிறார்

கொழும்பு, நவ. 13

பால்மா வகைகளின் விலைகளை அடுத்த வாரமளவில் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என வர்த்தக, நுகர்வோர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் இவற்றின் விலைகள் இப்போது கணிசமான அளவு குறைந்திருப்பதைத் தொடர்ந்தே மேற்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது என அமைச்சர் சொன்னார்.

இது தொடர்பாக இன்று தாம் பால்மா இறக்குமதியாளர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார் என்றும் அமைச்சர் பந்துல குணவர்த்தன கூறினார்.

இதேவேளை, எதிர்காலத்தில் சீனியின் விலையையும் குறைக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

2009ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ சீனிக்கு 16 ரூபா வரி விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-சி)

# ஓமந்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் வன்னிக்கான போக்குவரத்தை சீராக்கும் நோக்கத்துடன் இருதரப்புகளிடையேயும் நேற்றுப் பேச்சுக்கள் நடை பெற்றதாகவும் எனினும் இணக்கம் காணப்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

செஞ்சிலுவை சர்வதேசக்குழு சோதனை நிலையத்திலிருந்து விலகியதை யடுத்து அதன் ஊடான போக்குவரத்து கடந்த இரு நாள்களாகத் தடைப்பட்டுள்ளது. (அ-1)

# மன்மோகனும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்படும் யுத்தத்தின் போது பொதுமக்கள் எதிர்நோக்கும் மனிதாபிமான நெருக்கடிகள் குறித்தும்-

இனப்பிரச்சனைக்கு தீர்வு காண அரசு முன்வைக்கவிருக்கும் அதிகாரப் பகிர்வுத் திட்டம் குறித்தும்- இருதலைவர்களும் பேச்சு நடத்துவர் என பி.ரி.ஐ.செய்தி நிறுவனம் நேற்றிரவு தெரிவித்தது. (அ-01)

# ஹிக்கடுவையில் கைக்குண்டு வீச்சு

கொழும்பு, நவ. 13

மாத்தறை மாவட்டம், ஹிக்கடுவையிலுள்ள வீடொன்றின் மீது அடையாளம் தெரியாத நபர்கள் நேற்று அதிகாலை கைக்குண்டு வீசியுள்ளனர். இரு கைக்குண்டுகள் வீசப்பட்ட நிலையில், ஒன்று மட்டுமே வெடித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் எவருக்கும் உயிராபத்து ஏற்படவில்லை எனவும், சம்பவம் தொடர்பில் ஹிக்கடுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# பட்ஜெட்டைத் தோற்கடிக்க ஐ.தே.கட்சி தீவிர முயற்சி

கொழும்பு, நவ. 13

2009 ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தைத் தோற்கடித்து அரசைக் கவிழ்க்கும் முழு முயற்சியில் ஐக்கிய தேசியக்கட்சி மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது என அக்கட்சி தெரிவித்துள்ளது.

வரவு - செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பின் முடிவு அரசிற்குப் பேரிடியாக அமையப்போகிறது என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

அக்கட்சியின் எம்.பி. ரவிகருணாநாயக்க இது தொடர்பாகக் கூறியவை வருமாறு:-

ஊழல் மோசடி மிக்க இந்த அரசைக் கவிழ்த்து நல்லதோர் அரசை அமைக்கும் முயற்சியில் நாம் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றோம்.

அதற்கானதொரு சிறந்த வாய்ப்பாக நாம் 2009 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தைப் பயன்படுத்துவோம். நல்லாட்சியை விரும்புகின்ற அனைத்துக் கட்சிகளையும் எம்முடன் ஒன்றிணைத்து இந்த வரவு - செலவு திட்டத்தைத் தோற்கடிக்க நாம் முயற்சி செய்து வருகிறோம்.

இப்போதுள்ள நிலைமையின்படி வரவு - செலவுத்திட்டம் நிச்சயம் தோல்வியடையும். நாட்டுக்கு எந்த நன்மையையும் அளிக்காத இந்த வரவு - செலவு திட்டத்தை ஆதரிக்க எவரும் தயாரில்லை.

எப்படியாவது முயற்சி செய்து இந்த வரவு - செலவு திட்டத்தைக் தோற்கடிக்குமாறு இந்த நாட்டு மக்கள் எம்மிடம் வேண்டுகோள்விடுக்கின்றார்.

வரவு - செலவு திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பு முடிவு மக்களின் இந்த ஆசை நிறைவேற்றும் - என்றார். (சி)

# முல்லைத்தீவில் குமுளமுனை படையினர் வசமாம்

கொழும்பு, நவ. 13

முல்லைத்தீவுப் பகுதியில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் குமுளமுனைக் கிராமத்தை கடந்த செவ்வாய்க்கிழமை கைப்பற்றினர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தண்ணி முறிப்புக்குளம் - குமுளமுனை வீதியைக் கைப்பற்றிய இராணுவத்தின் 59 ஆவது படைப்பிரிவினர், முல்லைத்தீவு நகரப் பகுதியிலிருந்து 13 கிலோமீற்றர் தொலைவில் உள்ள குமுளமுனைக் கிராமத் தைக் கைப்பற்றியுள்ளனர் எனப் படைத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-சி)

# தெஹிவளையில் வர்த்தகர் கடத்தல்

கொழும்பு, நவ. 13

தெஹிவளை, கற்குழி வீதியில் வசிக்கும் மகார் மொகைதின் அமீர் (வயது - 55) என்ற முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் நேற்று முன்தினம் காலை வெள்ளை வானில் வந்த நபர்களினால் கடத்திச் செல் லப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வர்த்தகர் தனது வீட்டிலிருந்த சமயம், வெள்ளை வானில் வந்த நபர்கள் தங்களைப் பொலிஸார் என அடையாளப்படுத்தி இவரைக் கடத்திச் சென்றனர் என் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் வர்த்தகரின் உறவினர்கள் தெஹிவளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்திருக்கின்றனர்.

# தமிழக...

(முதலாம் பக்கத் தொர்டர்ச்சி)

மணி, காங்கிரஸ் சார்பில் பீட்டர் அல்போன்ஸ் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பில் பன்னீர்ச்செல்வம் ஆகியோர் ஆதரித்துப் பேசினர்.

விவாதத்தின் போது காங்கிரஸ் சார்பில் பேசிய பீட்டர் அல்போன்சுக்கும், இந்திய கம்யூனிஸ்ட் சார்பில் பேசிய சிவபுண்ணியத்துக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. என்றாலும், முடிவில் அனைவரும் இலங்கையின் போர் நிறுத்தம் கொண்டுவரவேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டார்கள். (அ-சி)

# போர் நிறுத்தத்தை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கணக்கான மாணவர்கள் நேற்று மாலை சென்னை மத்திய ரயில் நிலையத்திலிருந்து ரயில் மூலம் புதுடில்லி புறப்பட்டுச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன், மூத்த தலைவர் நல்லகண்ணு, ஏ.என்.கோபு, பாட்டாளி மக்கள் கட்சியின் மாணவர் அணிச் செயலாளர் உதயகுமார், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன், சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் இரவீந்திரபாரதி, நடிகை மனோரமா, கவிஞர் அறிவுமதி உள்ளிட்டோர் வழியனுப்பிவைத்தனர்.

புதுடில்லியின் நாளை நடைபெறும் இந்தப் பேரணிக்கு அனைத்து இந்திய மாணவர் பெருமன்றத்தலைவர் ஜூலு சக்காரியா உம்மன், பொதுச்செயலாளர் விஜயேந்திர கேசரி ஆகியோர் தலைமையேற்கின்றனர். இந்தப் பேரணியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஏ.பி.பரதன், து.ராஜா உள்ளிட்டோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதில் 18 மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள் பங்கேற்று, இலங்கையில் போர் நிறுத்தம் கோரி போராட்டம் நடத்தவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (அ-சி)

# கோணாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தனர் எனவும், மேலும் பலர் காயமடைந்தனர் எனவும் புலிகள் தெரிவித்தனர்.

யுத்த சூனியப் பிரதேசங்களில் மீட்கப்படாமல் படையினரின் சடலங்கள் சிதறிக்கிடக்கின்றன எனவும் புலிகள் தெரிவித்தனர்.

இதேசமயம், கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் பெரும் பின்புல சூட்டாதரவுடன் ஸ்கந்தபுரத்தில் இருந்து கோணாவில் நோக்கி முன்நகர்வை ஆரம்பித்த படையினர் மீதும் தமது அணிகள் கடும் பதில் தாக்குதல் தொடுத்தன என்றும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

சுமார் மூன்று மணித்தியாலங்கள் கடும் சமர் இடம்பெற்றதாகவும், இதன்போது படையினர் கடும் இழப்புக்களுடன் பின்வாங்கிச் சென்றனர் என்றும் கூறப்பட்டது.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது படையினரின் சடலங்கள் மூன்றும் மற்றும் பெருமளவு ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த மோதலில் 30க்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டனர் என்றும், பல படையினர் படுகாயமடைந்தனர் எனவும் புலிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேசமயம், செவ்வாய்க்கிழமை மாலை பூநகரி - பரந்தன் பாதையிலிருந்து சுமார் இரண்டரைக் கிலோமீற்றர் தொலைவில் உள்ள செம்பன்குண்டுப் பகுதியில் உள்ள தரைப் பிரதேசத்தில் 58ஆவது படையணி இராணுவத்தினருக்கும், புலிகளுக்கும் இடையில் நடந்த கடும் சண்டையில் 11ஆவது ஸ்ரீலங்கா இலகு காலாட்படையின் சுமார் முப்பது சிப்பாய்கள் பலியாகினர் என்றும், மேலும் ஐம்பது பேர் வரை படுகாயமடைந்தனர் என்றும் சுயாதீன செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இந்தச் சமரில் புலிகள் தரப்பில் முப்பது பேர்வரை பலியாகினர் என்றும் கூறப்பட்டது. (சி)


வெற்றித்தேர்வு வந்துவிட்டது!!

வெற்றித்தேர்வு S.கணேசலிங்கம் அவர்களின்

2008-தரம்:4இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான

வெற்றித்தேர்வு தொடராக: 1 முதல் 15 வரை

புத்தகசாலைகளில் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்.

தரம்:4 மாவட்டரீதியிலான பரீட்சை ஒவ்வொரு ஞாயிறும்

நல்லூர்சயன்ஸ்அக்கடமி. The Express Institute Irupalai

மீசாலை மற்றும் அக்கடமி. அன்ரனி ஆலைக்கோட்டை.

தரம்: 4 முதல் 11 வரை இறுதிப்பரீட்சை வினாப்பத்திரங்கள்

GR:9.MODEL EXAM. G.C.E.(O/L) MODEL EXAM.

GR:4,5,6,7,8,10,FINAL EXAM.GR:6 - ENGLISH MEDIUM.

அக்கடமி வெளியீடு என்று கேளுங்கள்.சொற்ப பிரதிகளே

பூபாலசிங்கம், அன்னை புத்தகசாலைகளில் இன்றே பெறலாம்.



அறிவொளி - NALLUR

அரச கரும மொழிப்பரீட்சை

சிங்களம் தரம் I,II,III பயிற்சி வகுப்பு.

Start: 15.11.2008 - 9am. (Sat,Sun 9am)

E.S.பியதாச

(Sinhala Trained, S.L.T.S - I)

வழமை வகுப்புகள்:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.11.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.